www.tamilarangam.net


# களத்தில்

உலகத் தமிழினமே! எண்ணிப்பார் - நீ உறங்கினால் வரலாற்றில் யாருன்னை மன்னிப்பார்?

திருவள்ளுவர் ஆண்டு 2026 கடகம் 06 (22.08.1995) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வருஞ் செய்தித் தாள் அன்பளிப்பு 40p


# பன்னீராயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் ஐ.நா. நோக்கி பிரமாண்டமான பேரணி

***ஐ.நா. முன்றலில் தமிழீழத் தேசியக்கொடி**

**❖இனஅழிப்பு நோக்குடன் தமிழ் மக்கள்மேல் சிறீலங்காப்படைகள் தாக்குதல் நடாத்துவதைக் கண்டியுங்கள்!**

**❖தமிழ் மக்களின் ஆயுதப் போராட்டம் சட்டபூர்வமானதும் நீதியானதும் என்பதையும், தமிழீழ விடுதலைப்புலிகளே தமிழர்களின் உண்மையான பிரதிநிதிகள் என்பதையும் அங்கீகரியுங்கள்!**

**❖இலங்கையில் நீதியான தீர்வு ஏற்படும் வரை, அகதி அந்தஸ்துக் கோரிய தமிழர்களைத் திருப்பி அனுப்ப வேண்டாம் என, சுவிற்சலாந்து உட்பட ஐரோப்பாவில் உள்ள அரசுகள் அனைத்தையும் கோருகின்றோம்!**



சுவிசில் 14-08-95 திங்கட்கிழமையன்று, சுவிஸ் தமிழ்ச் சங்கங்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட மாபெரும் அமைதிப் பேரணியொன்று, மிகவும் சிறப்பான முறையில் நடைபெற்றது. சுவிஸ் நாட்டின் ஜெனிவா நகரத்தின் பிரதான புகையிரத நிலையத்திலிருந்து ஆரம்பித்த இப்பேரணி, இரண்டு கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் அமைந்துள்ள ஐக்கிய நாடுகள் சபையின் தலைமைச் செயலகம் நோக்கி நடைபெற்றது.

தமிழீழ மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரியும், தமிழீழ மக்களின் பிரதிநிதிகளான விடுதலைப் புலிகளை அங்கீகரிக்கக் கோரியும், சிறீலங்கா அரசின் தமிழினப் படுகொலைகளைக் கண்டித்தும் சுவிஸ் தமிழ்ச் சங்கங்களின் கூட்டமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட அமைதிப் பேரணி ஜெனிவா நகரில் இடம்பெற்றது. இப்பேரணியில் 12,000 க்கும் மேற்பட்ட தமிழீழ மக்கள் கலந்து கொண்டனர். இப்பேரணியின் இறுதியில் தமிழ்ச் சங்கங்களின் பிரதிநிதிகள், சிறுபான்மை இனங்களுக்கு எதிரான இன ஒதுக்கல்களிலிருந்து பாதுகாப்பதற்கான உபஆணைக்குழுவின் தலைவர் திரு. ஐயோன் மக்ஸிம் உடன் சுமார் இரண்டு மணி நேரச்

தொடர்ச்சி : 18 ஆம் பக்கம்




பேரணியின் முன்பு செய்தியாளர் மாநாட்டில்...
திரு.சத்தியேந்திரா. திரு.லோறன்ஸ் திலகர். திரு.கொர்னாலியஸ்கோ திரு.வசந்தராஜா

# அடுத்த கட்டப் பெரும்போர் எந்நேரமும் ஆரம்பிக்கப்படலாம்

யாழ் குடாநாடு மீதான அடுத்த கட்ட பெரும்போரை எந்நேரத்திலும் ஆரம்பிப்பதற்கு முழு அளவு ஆயத்தங்களை சிறீலங்கா பூர்த்தி செய்து கொண்டிருக்கிறது.

மூன்று கட்டங்களில் இந்தத் திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

முதலாவது, வெளிநாடுகளில் இருந்து தேவையான உதவிகள் கிட்டும் எனக்கூறிய சிறீலங்கா, அது சாத்தியப்படாத நிலையில் பெருந்தொகையான பணத்தைத் தானே செலவிட்டு, ஆயுதங்களைக் கொள்வனவு செய்து, கட்டங்கட்டமாக இறக்குமதி செய்து கொண்டிருக்கிறது. இதற்கென சிறீலங்காவின் பொது வரிவிதிப்புக்கள் உயர்த்தப்பட்டு மக்களின் வரிப்பணம் ஆயுதத்திற்குப் பயன்படுத்தப்படுகிறது. புடவைக்குக்

தொடர்ச்சி : 18 ஆம் பக்கம்

# வடக்கு-கிழக்கு மிகவும் மோசமடைந்து வருகிறது

இலங்கையின் வடக்கு-கிழக்கு பகுதிகளில் நிலவும் நிலைபற்றிக் கவலை தெரிவித்து சர்வதேச செஞ்சிலுவைத் சங்கம் ஜெனிவாவில் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

வடக்கு-கிழக்கில் காணப்படும் நிலைமைகள் அச்சமூட்டும் வகையில் மோசமடைகின்றது. உயிரிழப்புகள் அதிகரிக்கின்றன. ஆயிரக்கணக்கில் குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. பொதுமக்கள் மீதான தாக்குதல் அதிகரித்துள்ளது. கொழும்பிலும் கிழக்கிலும் ஆட்கள் கைதாவது அதிகரித்துள்ளது.

போர் நடைபெறும் பகுதியில் மருத்துவப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. யாழ்ப்பாணத்திற்கான மருந்து இருப்பை இரட்டிக்கவும் அங்கு மேலதிக மருத்துவ ஊழியரை அனுப்பவும் சர்வதேச

தொடர்ச்சி : 18 ஆம் பக்கம்

# வடபகுதியில் உணவுத்தட்டுப்பாடு உச்சநிலை

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உணவுப் பொருட்களுக்கான தட்டுப்பாடு மிகவும் உச்சநிலையை அடைந்துள்ளதாகத் தாயகத்திலிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. உணவுப்பொருட்களை யாழ். குடாநாட்டிற்குக் கப்பல்களில் கொண்டு செல்ல, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இணக்கம் தெரிவித்தது. இதற்கான பாதுகாப்பிற்கு முழுமையாக ஒத்துழைப்பு வழங்குவதாக விடுதலைப் புலிகள் அறிவித்தபோதும், வடபகுதியில் உணவுத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி மக்களை பட்டினிக்குள்ளாக்கி அடிபணிய வைக்கலாம் என்ற இழிவான நோக்குடன், அதனைச் சிறீலங்கா அரசு உதாசீனம் செய்து, செஞ்சிலுவைச் சங்கத்தின்

தொடர்ச்சி : 18 ஆம் பக்கம்

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## ஜனாதிபதி ஆட்சிமுறையை நீக்குக!

### — பாராளுமன்ற வாசலில் ஐ.தே.க.வினர் ஆர்ப்பாட்டம்

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை நீக்கி மக்களுக்கு அரசாங்கம் அளித்த வாக்குறுதியை நிறைவேற்ற வேண்டுமெனக்கோரி ஐக்கிய தேசியக் கட்சியினர் பாராளுமன்ற வளவில் போராட்டம் ஒன்றை நடத்தினர்.

இதில் முன்னாள் சபாநாயகர் எம்.எச். முகமத் தலைமையில் ஐதேக. தலைவர் ரணில் விக்கிரம சிங்காவும் கலந்து கொண்டார்.

சுமார் ஐந்து நிமிடங்கள் பாராளுமன்ற பிரதான வாசலில் அமர்ந்திருந்த வண்ணம் கோசங்களை எழுப்பிய இவர்கள் பின்னர் கலைந்து சென்றனர்.

பொஐமு. அரசாங்கத்திற்கு எதிராக ஐதேகட்சி நடத்திய முதலாவது போராட்டம் இதுவாகும்.

## சிறீலங்கா கடற்படை ரோந்து அணியைக் கடற்புலிகள் வழிமடக்கித் தாக்கினர்!

பருத்தித்துறைக் கடற்பரப்பில் 04.07.95 அன்று அதிகாலை கடற்புலிகளுக்கும் சிறீலங்காக் கடற்படைக்கும் இடையில் கடும் மோதல் இடம்பெற்றது. தமிழ் மீனவர் மீது கடற்படை மேற்கொள்ளும் தாக்குதலுக்குப் பதிலடி கொடுக்கும் முகமாக கடற்புலிகள் சிறீலங்காக் கடற்படையை வழிமறித்துத் தாக்கிய போதே இம்மோதல் இடம் பெற்றது. மிகவும் உக்கிரமாக நடந்த இம்மோதலில் ஏற்பட்ட பலத்த இழப்பைத் தொடர்ந்து கடற் படையினர் பின்வாங்கிச் சென்றனர்.

வெற்றிலைக் கேணியில் இருந்து காங்கேசன்துறை நோக்கி ரோந்து சென்ற கடற்படையின் டோறாப்படகுகள் அணியே கடற்புலிகளின் தாக்குதலுக்கு உள்ளாகியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும் இம்மோதல் பலமணி நேரம் நீடித்ததாகவும் கடும் சண்டை இடம் பெற்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இம்மோதலில் கடற்படையினருக்குப் பலத்த இழப்பு ஏற்பட்டதாகவும் இதனைத் தொடர்ந்து கடற்படையினர் பின்வாங்கி விட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதுகுறித்து சிறீலங்காப் பாதுகாப்பு வட்டாரங்கள் தகவல் வெளியிடுகையில் பத்துப் படகுகளில் கடற்புலிகள் வந்து தாக்கியதாகவும் ஒரு அதிகாரி காயமடைந்ததாகவும் தெரிவித்தது.

# கரும்புலிகள் நாள் எழுச்சியுடன் அனுட்டிப்பு

### ஊர்வலம், பொதுக்கூட்டங்கள் இடம்பெற்றன

தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான அனைத்து சக்திகளுக்கும் எதிராக, அனைத்து உலகமுமே வியக்கத்தக்க வகையில் வெற்றிகரமான தாக்குதல்களைத் தொடுத்து வீரகாவியம் படைத்த கரும்புலிகள் நாள் 5.7.95 அன்று எழுச்சி பூர்வமாக அனுட்டிக்கப்பட்டது.

அன்றுமாலை கரும்புலிகள் நாளின் முக்கிய நிகழ்வாக ஊர்வலமும் கரும் புலிகள் நினைவாலயத்திறப்பும் பொதுக் கூட்டமும் நெல்லியடியில் நடைபெற்றது. மாலை 6.00 மணிக்கு நெல்லியடிச் சந்தியில் ஆரம்பமான ஊர்வலம் கரும்புலிகள் நினைவாலய முன்றலை அடைந்ததும் தேசியக் கொடியேற்றல், பொது ஈகச்சுடர் ஏற்றலைத் தொடர்ந்து நினைவுக்கல் திரைநீக்கம் செய்யப்பட்டு, தொடர்ந்து கரும்புலி கப்டன் மில்லரின் சிலை திரைநீக்கம் செய்யப்பட்டு நினைவாலயம் திறந்து வைக்கப்பட்டது அதனைத் தொடர்ந்து கரும்புலி மாவீரர்களின் திரு உருவப்படங்களுக்குப் பெற்றோரும் போராளிகளும் ஈகச்சுடரேற்றி மலர் மாலை அணிவித்தனர். அதனையடுத்து நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் பொதுக் கூட்டம் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

கரும்புலிகள் தினத்தை முன்னிட்டு யாழ்குடாநாடெங்கும் எழுச்சிக் கோலம் பூண்டது. கேந்திர நிலையங்களிலும் சந்திகளிலும் அலுவலகங்கள், நிறுவனங்கள், வியாபாரத் தலங்கள், போராளிகளின் பாசறைகள் என்பனவற்றில் சிவப்பு, மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டன.

சந்திகளிலும் கேந்திர நிலையங்களிலும் மற்றும் நிறுவனங்கள் போராளிகளின் பாசறைகள், வீடுகள் தோறும் கரும் புலிகளின் உருவப் படங்கள் வைக்கப்பட்டு மலர்மாலை சூட்டப்பட்டு மலர் தூவப்பட்டுத் தீபங்கள் ஏற்றப்பட்டன. முக்கிய நிலையங்களில் ஒலிபெருக்கிகள் மூலம் கரும்புலிகளின் ஈகத்தைப் பறைசாற்றும் பாடல்களும் தாயக எழுச்சிப் பாடல்களும் ஒலிபரப்பப்பட்டன. பல இடங்களில் மின்அலங்காரங்களும் செய்யப்பட்டன. கரும்புலிகள் நினைவாக ஊர்திபவனிகளும் இடம்பெற்றன.

# அமெரிக்கத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

❋ பொலிசாரின் சூட்டிற்குப் பொதுமகன் ஒருவர் பலி

❋ அமெரிக்கக் கொடி எரிக்கப்பட்டது.

அமெரிக்க வானொலி நிலையத்தை இரணவில பகுதியில் அமைக்கும் பணிக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் அமெரிக்கத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம் நடாத்தி அமெரிக்கத் தேசியக் கொடியைத் தீயிட்ட மக்கள் மீது பொலிசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார்.

அமெரிக்காவின் சுதந்திர தினத்தன்று கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகம் முன்பாக நூற்றுக்கணக்கான மக்கள் கூடி நின்று பெரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தித் தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்தனர்.

இவ் வார்ப்பாட்டத்தின் போது இவர்கள் அமெரிக்கத் தேசியக்கொடியைத் தீயிட்டெரித்துச் சாம்பராக்கினர். இதன் போது ஆர்ப்பாட்டக்காரரை அடக்கும் விதமாக சிறீலங்காப் பொலிசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பொதுமக்களில் ஒருவர் பலியானார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பௌத்த பிக்குகள், கத்தோலிக்க மதகுருமார்கள் பெருமளவு மக்கள் கலந்து கொண்டதுடன் இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்காரவும் கலந்து கொண்டார் ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் அமெரிக்கத் தூதராலயத்தில் மகஜரொன்றும் கையளிக்கப்பட்டது.

இவ் ஊர்வலத்தைக் குழப்ப குண்டர்களும் பொலிசாரும் பெரும் முயற்சி செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# அரசியற் பலவீனத்திலிருந்து மீள அரசுக்கு யுத்தம் மட்டுமே ஒரே வழி

சிறீலங்கா அரசாங்கம் சமாதானம் என்ற நிலையிலிருந்து முழுமையாக விலகி யுத்தத்திற்குத் தயாராகி வருகிறது என அரசாங்கத்தின் சர்வதேச தொடர்புகளை மேற்கோள் காட்டி ரஸ்மிய பத்திரிகை இச் செய்தியை வெளியிட்டுள்ளது.

தற்போது பலவீனப்பட்டுக் கொண்டு போகும் அரசியல் நிலையிலிருந்து மீளுவதற்குள்ள ஒரேயொரு பாதை யுத்தம் தான். இதனால் யுத்தத்தை நோக்கி அரசாங்கம் தயாராகி இருக்கிறது. நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையை அகற்றுவது தற்போதைய நிலையில் இயலாதது எனவும், இதனால் ஏற்படக்கூடிய அரசியல் கொந்தளிப்புகளை அடக்குவதற்கு யுத்தத்தை முழுமையாக நடத்த வேண்டியுள்ளது எனவும் மேலும் கூறப்படுகிறது.

இதற்காகவே விடுதலைப் புலிகளைத் தடை செய்வது போன்ற கருத்துக்களை அவ்வப்போது வெளியிட்டு வருவதாகவும், இவை அனைத்தும் அரசியல் தேக்க நிலையைப் போக்க உதவுமென நம்பப்படுவதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை விடுதலைப் புலிகளைத் தடைசெய்தால் அரசாங்கத்திற்கு விடுதலைப் புலிகளுடன் யுத்தம் புரிவதைத் தவிர வேறு வழி எதுவும் இல்லை. இந்த நிலையில் விடுதலைப் புலிகளுடன் எந்தக் கட்டத்திலும் பேச்சுவார்த்தை நடத்த முடியாது எனவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இந்த நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டமைக்கான காரணம் சில வெளிநாட்டுப் புலனாய்வு நிறுவனங்கள் வழங்கிய அறிவுரைகளேயாகும். விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கு மிடையே மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டால் இந்த வெளிநாட்டுப் புலனாய்வுப் பணிக்குப் பாரிய நட்டம் ஏற்படுமெனவும், அதற்காகவே இந்த ஆலோசனை வழங்கப்பட்டிருப்பதாகவும், விடுதலைப் புலிகளின் தலைவர் உட்பட மேலும் இருவரைக் கைது செய்ய இந்தப் புலனாய்வு அமைப்பு விரும்புகிறது எனவும் ரஸ்மிய பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## புலிகளுக்கு ம.தி.மு.க. ஆதரவளிப்பது தேசதுரோக குற்றமாம்

### — தமிழ்நாடு காங்கிரசார் தெரிவிப்பு

அண்மையில் திருச்சியில் நடந்த மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக மாநாட்டிலும் ஊர்வலத்திலும் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக முழக்கமிட்டது தேசத்துரோகக் குற்றமாகும் எனத் தமிழ்நாடு சட்டப் பேரவை எதிர்க்கட்சித் தலைவர் பாலசுப்பிரமணியம் கூறியிருக்கிறார்.

சென்னையில் செய்தியாளரிடையே பேசிய அவர் திருச்சியில் வெளியிட்ட வாசகங்கள் சில இந்திய ஒருமைப்பாட்டிற்குக் குந்தகம் விளைவிக்கக் கூடியவை என்றும் குறிப்பிட்டார். இது குறித்து தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது என்றும் அவர் வினவினார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் திருச்சி மாநாட்டுப் பேச்சுக்களைத் தமிழ்நாடு இந்திரா காங்கிரசக் கட்சித் தலைவர் திருக்குமரி அனந்தனும் கண்டித்திருக்கிறார்.

இந்த மாநாட்டில் மதிமுக. செயலாளர் தெரிவித்த கருத்துக்களைக்கண்டித்து அறிக்கை விடுத்த அவர், இவ்வாறு பேசுவதைச் செயலாளர் நிறுத்த வேண்டும் என்றும் இல்லையேல் மத்திய அரசு நடவடிக்கை எடுக்கும் என்றும் மக்களின் எதிர்ப்பிற்கும் உள்ளாகும் என்றார்.

## கடற்கரும்புலி செவ்வானம் மீட்பு

திருத்தப்பட்டதுகடற்கரும்புலிகள் பிரிவைச் சேர்ந்த செவ்வானம் விடுதலைப் புலிகளால் உயிருடன் மீட்கப்பட்டார். அண்மையில், காங்கேசன்துறை துறைமுகத்திற்குள் ஊடுருவி அங்கு தரித்து நின்ற தரையிறக்கும் கப்பல் மீது கரும்புலித் தாக்குதலை நடத்தச் சென்ற கடற்கரும் புலிகளின் படகு விபத்துக்குள்ளானதை அடுத்து, அத் தாக்குதல் திட்டம் வெற்றி அளிக்காது போய்விட்டது.

இதனை அடுத்து, அப் படகில் சென்ற கடற்கரும்புலியான செவ்வானம் விடுதலைப் புலிகளால் உயிருடன் மீட்கப்பட்டார்.

## புலிகளின் பெயரால்கடிதம் உறவைப் பிரிக்கும் முயற்சி

புத்தளத்தில் வாழும் முசலிம்கள் அப்பகுதியை விட்டு வெளியேறி விடவேண்டும் என புலிகளின் பேரால் அனுப்பி வைக்கப்பட்ட கடிதங்கள் தமிழ்-முசலிம் உறவைப் பிரிப்பதற்காக எடுக்கப்பட்ட முயற்சி என யாழ் மாவட்ட எம். பி. கலாநிதி இலியாஸ் தெரிவித்துள்ளார்.

தமிழ்-முசலிம் மக்கள் இப்பகுதியில் பரம்பரை பரம்பரையாக, மிகவும் நெருக்கமாக வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் சகோரத்துவ உணர்வுடன் இருக்கின்றனர். இவர்களின் நீண்டகால உறவைப் பிரிப்பதற்காகச் செய்யப்படும் செயல் எனவும் அவர் குறிப்பிட்டார்.

வடமேல் மாகாணசபை உறுப்பினர் நவலி இக்கடிதம் பற்றி கருத்துத் தெரிவிக்கையில், அரசியல் லாபம் கருதிய எதிரணியினரின் விசமச் செயல் இது என்றார்.

## எடித்தாராவின் விலை பன்னிரண்டரைக் கோடி

புலிப்பாய்ச்சலின் போது, கடற்புலிகளினால் தகர்த்து மூழ்கடிக்கப்பட்ட கடற்படை கட்டளைக் கப்பலான 'எடித்தாரா' பன்னிரண்டரைக் கோடி ரூபாவிற்குக் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது என தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஐ. நா முன்றலில்

தமிழீழ மக்கள் மீது சர்வதேச போர்க் குற்றச் செயலான 'மக்கள் மீதான போரை', மக்களுக்கு எதிரான முற்றுகைகள், பொருண்மியத் தடைகள் என்பவற்றுடன் நடாத்திக் கொண்டிருக்கும் சந்திரிகா, அதனைச் சர்வதேச சமூகத்தின் கவனத்தில் இருந்து திசைதிருப்பும் முயற்சியாக, சிறீலங்கா அரசிற்கான அதிகாரப்பரவலாக்கல் யோசனைத் திட்டம் ஒன்றினை வெளியிட்டுவிட்டு, அதற்கு இனப்பிரச்சினைக்கான தீர்வு என பெயர் கொடுத்துள்ளார்.

முரண்பாட்டில் சம்பந்தப்படுபவர்கள், தங்களுக்கிடையேயான அரசியற் கௌரவத்தினைச் சமத்துவமாக மதிக்கத் தொடங்கும் சூழலிலேயே அரசியல் தீர்வு ஒன்று முன்வைக்கப்பட்டு ஆராயப்படலாம். அதற்கு மாறாக தமிழீழ மக்களின் உயிர், உடல், உடமைகளுக்குத் தனது இராணுவத்தின் மூலம் அனுதினமும் அச்சறுத்தலை விடுத்து அவர்களது அடிப்படை மனித உரிமைகளைக்கூட அனுமதிக்காது, அரசியல் அடிமைத்தனப்படுத்த முயலும் சந்திரிகா முன்வைத்த இந்த அதிகாரப் பரவலாக்கல் பட்டியலை நிராகரிக்க வேண்டிய நிலைக்கு விடுதலைப் புலிகள் தள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் சமாதானம், அரசியல் தீர்வு எனும்பெயர்களில் தமிழீழ மக்களின் உரிமைகளைச் சரணாகதியடைய வைக்கும் எந்த முயற்சிகளையும் அனுமதிக்க மாட்டார்கள். மக்களின் அன்றாடப் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு அவர்களது உயிர், உடல், உடமைகளுக்கு அச்சறுத்தல் அகற்றப்பட்ட நிலையிலேயே அவர்களின் அரசியல் தீர்வு குறித்து ஆராயலாம் என விடுதலைப் புலிகள் பலமுறை வற்புறுத்தினர். அவ்வாறே, முழுஅளவிலான போர்நிறுத்தம் பிர-கடனப்படுத்தப்பட்டாலேயே அரசியல்தீர்வு குறித்து ஆராய அர்த்தமுள்ள சூழ்நிலை உருவாகும் எனவும் விடுதலைப் புலிகள் வலியுறுத்தினர். இவைகளை மறுத்து இராணுவவாதிகளின் நலன்களுக்கு முன்னுரிமை கொடுத்து மீண்டும் போரை மூளச் செய்த சந்திரிகா, பேச்சுவார்த்தை நடாகத்திரையை மூடிவிட்டு, இன்று மீளவும் அரசியல் தீர்வில் அக்கறை உள்ளவர்போல் இனங்காட்ட, அதிகாரப் பரவலாக்கல் எனும் நாடகத் திரையை இழுத்துள்ளார்.

மேலும், சந்திரிகாவின் இந்த யோசனைகூட, அரசியலமைப்பு திருத்த அனுமதி பெற்று, பாராளுமன்ற தெரிவுக் குழுவில் சமர்ப்பணமாகி, சிறீலங்காப் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவுடன், குடியொப்ப அங்கீகாரமும் பெற்றுத்தான் சட்டப்பிறப்பு எடுக்கவேண்டும். இப்பொழுதே ரத்வத்தை 'இது யோசனை மட்டுமே, பெரும்பான்மையினரின் அபிப்பிராயத்துக்கு எதிராக ஒருபொழுதும் அரச செயற்படாது' என கருச்சிதைவு செய்ய, இந்தத் தீர்வின் தந்தை எனக்கூறப்படும் சிறீலங்காவின் அரசியலமைப்பு அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், 'வடக்கு-கிழக்கு இணைப்பை அரச எதிர்க்கிறது' என பௌத்தபிக்குகள் முன் சத்தியம் செய்து கருவறுப்பே செய்துவிட்டார். சிறீலங்காவின் அமுக்கக் குழுக்களான பௌத்தபிக்குகள் அகில இலங்கை பௌத்த காங்கிரஸ் தலைமையில் 27 அமைப்புக்களின் பெயர்களுடன் 30 வீத நிலத்திலும், 60 வீத கடற்கரையோரத்திலும் 6 வீத மக்கள் வாழும் நிலையை உருவாக்கும் இதனை அனுமதியோம் என அகங்காரமாய் எதிர்க்கத் தொடங்கிவிட்டனர். எனவே சட்டவாக்கம் பெறுவது சந்தேகம். அப்படித்தான் சட்டவாக்கம் பெற்றாலும் அது உருமாறிய புதுப்பிறப்பு ஒன்றாகத்தான் இருக்கும் என்கின்றனர் அவதானிகள்.

இது ஒருபுறமிருக்க, இந்தப் பட்டியல் நடைமுறைக்கு வருமானால் அதனை நடைமுறைப்படுத்தும் பங்காளர்களாக முரண்பாட்டில் சம்பந்தப்பட்ட சிறீலங்கா அரசம், விடுதலைப் புலிகளுமே உள்ளனர். ஆனால் சந்திரிகாவோ 'தமிழ் மக்களுக்கெதிராக அல்ல, விடுதலைப் புலிகளுக்கெதிராகவே போர் செய்கிறோம்' எனத் தமது இராணுவரீதியான தமிழின அழிப்பு முயற்சிகளுக்கு நியாயம் கற்பிக்க முயலும் அதேபாணியில் 'விடுதலைப் புலிகளுக்கு அல்ல, தமிழ் மக்களுக்கே தீர்வைச் சென்றடையச் செய்வேன்' எனக்கூறி தனது அரசியல் ரீதியான திணிப்பு முயற்சிகளுக்கும் நியாயம் கற்பிக்க முயல்கின்றார். அதேவேளை, விடுதலைப் புலிகளை அழித்தொழிப்பதற்கான போரைத் தனது இராணுவம் முன்னெடுக்கும் எனக்கூறுவதன் மூலம், சந்திரிகாவுக்கு அரசியற்தீர்வு ஒன்றினை நடைமுறைப்படுத்தும் எண்ணம் ஒன்றும் இல்லை எனத் தெளிவாக்குகிறார்.

இந்நிலையில் சிங்கள சிறீலங்காவின் எந்த அரசம் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான தீர்வினைத் தரமாட்டாது என்பது மீளவும் உறுதியாவதினால், தமிழீழ மக்கள் தங்கள் அரசியல் எதிர்காலத்தைத் தாங்களே நிர்ணயிக்கும் நிலையை எய்தி நிற்கின்றனர். யாரிடத்தில் அரசியல் அதிகாரம் இருக்கிறது என்பதைவிட, யாரால் அரசியல் அதிகாரம் வெளிப்படுத்தப்படுகிறது' என்பதே அரச நோக்கிய அரசு எனப்படும். தமிழீழ மக்களின் அரசியல் அதிகாரம் சிறீலங்காவால் அல்ல, விடுதலைப் புலிகளாலேயே வெளிப்படுத்தப்பட்டு வருகிறது. அவர்களே இன்று தமிழீழ மக்களின் அரச நோக்கிய அரச என்பதை உலகின்முன் நிரூபிப்பதற்காகவே புலம்பெயர்ந்த தமிழர்கள் ஐ. நா. முன்றலில் தமிழீழத் தேசியக் கொடியைக் கடந்தவாரம் ஏற்றினர். ஐ. நா முன்றலில் பட்டொளி வீசிப் பறந்த தமிழீழத் தேசியக்கொடியை, ஐ. நா உள்மண்டபத்துள்ளும் விரைவில் பறக்க வைக்கவேண்டிய கடமையுண்டு. இதில் புலம்பெயர்ந்த தமிழர்களுக்கே பெரும் பங்குண்டு. நமது பலம் நமது கையில், நாம் நிதி அளித்தால் எம்நாட்டின் விதி மாறும். நாம் ஒரு அணியில் அணிவகுத்தால் உலகம் நம்பின்னே அணி திரளும். அப்போதுதான், தமிழீழ மக்கள் சயநிர்ணய உரிமையைப் பிரயோகிக்கத் தொடங்கிவிட்டனர் - சிறீலங்கா வெறும் ஆக்கிரமிப்பு அரச' என உலகு உணரும்.

# எதிரியை விரட்டி அடிக்க மக்கள் முன்வர வேண்டும்

## லெப். செல்லக்கிளி வீரவணக்கக் கூட்டத்தில் தேவர்

தமிழ் மக்களைக் கொன்றொழிப்பதற்காகவும், இன அழிப்பை மேற்கொள்வதற்காகவும் எதிரியானவன் சூழ நிற்கின்றான் இனியும் கோவில்கள், பாடசாலைகளில் தஞ்சமடையப் போகின்றீர்களா! அல்லது எதிரியை விரட்டியடித்து, சதந்திரமாக சொந்த மண்ணில் வாழப் போகின்றீர்களா?

இவ்வாறு, அண்மையில் நடை-பெற்ற லெப். செல்லக்கிளி அம்மானின் வீரவணக்கக் கூட்டத்தில் பேசிய விடுதலைப் புலிகளின் மூத்த உறுப்பினர் தேவர் அண்ணா கேள்வி எழுப்பினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எதிரியை விரட்டியடித்து, சதந்திரமாக எமது சொந்த மண்ணில் வாழ்வதற்கு வீட்டுக்கொருவர் போராட்டத்தில் இணைவதற்கு முன்வர வேண்டும். நாம் இன்று சுதந்திரமாக இந்த மண்ணில் உலாவுகின்றோம் என்றால், அது செல்லக்கிளி அம்மான் போன்றோரின் தியாகத்தினாலாகும் என்றார்.

தமிழீழ பெண்கள் ஆய்வு நிறுவனப் பொறுப்பாளர் இளவதனி பேசுகையில், அண்மையில் சிறீலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட முன்னோக்கிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையில் இராணுவத்தினரால் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கையையும், இந்த முன்னோக்கிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையினை முறியடித்த புலிப்பாய்ச்சல் நடவடிக்கையில் வீரமரணமடைந்த போராளிகளின் எண்ணிக்கையையும் ஒப்பிட்டுப் பாருங்கள். அதன் மூலம், நாம் இன்று போராடவேண்டியதன் அவசியத்தையும் அதன் வரலாற்றுக் கடமையையும் புரிந்து கொள்ள முடியும். அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்டவர்கள் போராட்டத்தில் இணைந்திருந்தால் எத்தனையோ சாதனை-களைச் செய்திருக்க முடியும். ஆதலால் மக்கள் அனைவரும் இன்றைய வரலாற்றுத் தேவையை உணர்ந்து, போராட்டத்தில் இணைந்து எதிரியை விரட்டி எமது சொந்தமண்ணில் சதந்திரமாக அச்சமின்றி வாழ வழிவகுக்க வேண்டும் என்றார்.

# அவுஸ்திரேலியாவில் மாபெரும் ஊர்வலம்

அவுஸ்திரேலியாவின் சிட்னி நகரில் 19-08-95 சனிக்கிழமையன்று நடைபெற்ற மாபெரும் ஊர்வலத்தில் 3000 அதிகமான தமிழீழ மக்கள் கலந்து கொண்டனர்.

சிறீலங்கா அரசினதும் இராணுவத்தினதும் தமிழ் மக்கள் மீதான படுகொலைகளைக் கண்டித்தும், தமிழீழ மக்களின் சயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரியும், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக்கோரியும், மக்கள் மிகுந்த உணர்ச்சி பூர்வமாக இதில் கலந்துகொண்டனர்.

சிட்னியில் வாழும் தமிழ் மக்களில் ஐம்பது சதவீதத்திற்கு மேற்பட்டோர் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 21-08-95 அன்று அவுஸ்திரேலியாவிற்கு விஜயம் செய்த சிறீலங்காவின் நீதி அமைச்சர் ஜி. எல். பீரிஸ் இன் வருகையை எதிர்த்து, மெல்பேர்ண் நகரில் ஆர்ப்பாட்ட நிகழ்வு ஒன்று இடம்பெற்றது. இந்நிகழ்வின் இறுதியில் தமிழ் மக்களின் சயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கக் கோரியும், தமிழ் மக்களின் பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளே என்பதை அங்கீகரிக்கக் கோரியும், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக் கோரியும் மகஜர்

# களுத்துறையில் சிங்களவர்- முசுலிம் மோதல்

❖ பொலிசார் துப்பாக்கிச் சூடு

❖ நான்கு முசுலிம் மாணவர் பலி

களுத்துறையில் 28-07-95 இல் நடைபெற்ற சிங்கள-முசலிம் இனக் கலவரத்தின்போது, காவல் துறையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நான்கு முசலிம் மாணவர்கள் பலியாகினர். துடுப்பாட்டம் ஒன்றைத் தொடர்ந்து ஏற்பட்ட கலவரத்தில் காவல்துறையினர் துப்பாக்கிச்சூடு நடத்தினர். இதில் 20 பேர் காயமுற்றனர். களுத்துறை சிங்கள-முசலிம் இளைஞர் அணிகளிடையே நடந்த துடுப்பாட்டப் போட்டியின் பின் ஏற்பட்ட வாய்த்தகராறு, இன வன்முறையாக மாறியது. வீடுகள் தாக்கப்பட்டன.

களுத்துறைச் சம்பவம் தொடர்பாக உடன்விசாரணை நடத்துமாறு சனாதிபதி விசேட காவல் துறைக் குழுவை அங்கு அனுப்பி வைத்துள்ளார். கலகம் மீண்டும் ஏற்படாது தடுக்க, களுத்துறையில் விமானப்படையின் ரோந்து அணிகள் பாதுகாப்பில் ஈடுபடுத்தப்பட்டன.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு உடனடியாக நட்டஈடு வழங்கப்பட வேண்டுமெனவும், காயமடைந்தவர்கள் கொழும்பு மருத்துவமனைக்குக் கொண்டு வரப்பட்டு விசேட சிகிச்சையளிக்க உரிய வசதிகள் செய்யப்பட வேண்டுமெனவும் சிறீலங்கா சனாதிபதி பணிப்புரை விடுத்திருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக அரசும், சனாதிபதியும் ஆழ்ந்த கவலையும் அனுதாபமும் தெரிவித்திருப்பதுடன், சம்பவத்திற்குப் பொறுப்பான அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அப்பகுதியின் பாராளுமன்ற உறுப்பினரை, சம்பவம் நடந்த இடத்திற்கு உடனடியாகச் சென்று நிலைமையை அறியும்படி சனாதிபதி கேட்டுக் கொண்டார். இதுபற்றி, பூரண விசாரணை நடத்தும்படி காவல்துறை அதிபருக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டது.

இதையடுத்து, விசேட புலனாய்வுப் பிரிவுப் பணிப்பாளர் சமரக்கோன் தலைமையிலான குழுவொன்று இவ்விசாரணைக்காக நியமிக்கப்பட்டுள்ளது.

# ஈழத் தமிழினத்தைக் கருவறுக்க சிங்கள அரசு திட்டமிடுகிறது

## —வை. கோபாலசாமி கண்டனம்

ஈழத்தமிழர்களின் கண்ணீரில் நாம் பங்கேற்போம், அவர்களை அழிக் கத் திட்டமிட்டு சிங்களப் பேரினவாத அரச நடத்தும் இனப்படுகொலையை எதிர்த்து, கண்டனக்குரல் எங்கும் ஒலிக்கட்டும் இவ்வாறு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை. கோபாலசாமி தமிழ்நாட்டில் தெரிவித்துள்ளார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்-

ஈழத்தமிழர்களைப் பாதுகாக்க ஆதரவுக் குரல் எழுப்புவோம், அப்பாவித் தமிழர்களைக் கொன்று குவிக்கும் கொடுமையை சிங்கள அரச நிறுத்த வேண்டும் என்று உரத்து குரல் எழுப்புவோம் என வை. கோபாலசாமி மேலும் தெரிவித்துள்ளார்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# படையினர் வெறியாட்டம்! மூன்று தமிழ் மக்கள் பலி

வாழைச்சேனைப் பகுதியில் சிறீலங்காக் காவல்துறையும், இராணுவத்தினரும் அண்மையில் நடத்திய எறிகணைத் தாக்குதலினாலும், சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தாலும் மூன்று தமிழ் மக்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

காவல்துறையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் விநாயகபுரம் அகதி முகாமில் தங்கியிருந்த சு. குமாரசாமி (வயது24) என்ற இளைஞர் உயிரிழந்தார்.

இவர் மட்டக்களப்பு மாவட்ட எல்லைக் கிராமமான கட்டுமுறிவிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவராவார்.

கறுவாக்கேணியைச் சேர்ந்த செல்லத்தம்பி (வயது 60) என்பவர் வீட்டில் இருந்த சமயம் சூடுபட்டு இறந்துள்ளார்.

செ. யேசமேரி (வயது 45) என்ற 7 பிள்ளைகளின் தாயார் வீட்டிலிருந்தபோது, எறிகணை வந்து வீழ்ந்ததால் மரணமானார்.

இவர்களில் அகதி முகாமில் இருக்கையில் சூட்டுக்கு இலக்கான குமாரசாமி என்பவரை உறவினர்கள் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்கையில், இடைவழியில் வைத்து இராணுவத்தினர் பொறுப்பேற்றனர். பின்னர் பேய்த்தாழைச் சுடலைக்குள் இவரது சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. இச்சம்பவத்தில் ஜலில் (வயது28, ஓட்டமாவடி), எஸ். செவ்வந்தி (வயது25, புதுக்குடியிருப்பு), சதீஸ்குமார் (வயது15, விநாயகபுரம்) ஆகியோர் காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

இதேவேளை, வாழைச்சேனையை அண்டியுள்ள கல்குடா, கண்ணன் கிராமம், புதுக்குடியிருப்பு, குறிஞ்சி நகர், கறுவாக்கேணி ஆகிய பகுதிகளைப் படையினர் எறிகணைகள் மூலம் தாக்கியதால் அப்பகுதிகளிலிருந்து மக்கள் வெளியேறியுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

# புக்காரா வீழ்த்தப்பட்டதற்கு வெடி கொளுத்தி ஆரவாரம்

விடுதலைப் புலிகளின் தாக்குதலில் புக்காரா விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு மகிழ்ச்சி தெரிவிக்கும் முகமாக, மலையகப் பகுதியில் வாழும் தமிழர்கள் வெடி கொளுத்தி ஆரவாரம் செய்ததாகக் கொழும்புச் செய்தித்தாளொன்று தெரிவித்துள்ளது.

இதேவேளை, முன்னோக்கிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையால் வடபகுதியை இராணுவம் கைப்பற்றிப் போகிறது என வெடிகளைக் கொளுத்தி ஆரவாரம் செய்யக் காத்திருந்த மலையகச் சிங்களவர்களுக்கு, பலத்த ஏமாற்றத்தை புக்காரா வீழ்த்தப்பட்ட சம்பவம் தந்ததாகவும் அச்செய்தித்தாள் மேலும் தெரிவித்தது.

# விமானியின் மரணத்திற்கு தந்தை கண்டனம்

விடுதலைப் புலிகளினால் சுட்டு வீழ்த்தப்பட்ட புக்காரா விமானத்தைச் செலுத்தி வந்த விமானி லெப்டினன் திலான் பெரேராவின் மரணச் சடங்கிற்குச் சென்ற அதிகாரமுள்ள ஒருவர் மீது, விமானியின் தந்தை பலத்த கண்டனத்தைத் தெரிவித்ததாகக் கொழும்புச் செய்தித்தாளொன்று கூறுகிறது.

புலிகளிடம் ஏவுகணைகள் இருப்பது தெரிந்தும், போர் நடக்கும் பக்கம் போகச் சொல்லியிருக்கிறீர்கள். இனிமேல் விமானி தேவை என்று கேட்காமல் தற்கொலைப் படைக்கு ஆள் தேவை என்று கேளுங்கள். இரண்டுமே ஒன்றுதான் எனக் கவலையோடு கண்டனத்தைக் கூறியதாக அச் செய்தித்தாள் மேலும் குறிப்பிட்டது.

# எதிரியின் ஆக்கிரமிப்பை முறியடிக்க உதவிய மக்களுக்கு புலிகள் பாராட்டு

சிறீலங்கா இராணுவத்தின் முன்னோக்கிப் பாய்தல் இராணுவ நடவடிக்கையை முறியடிக்க, சகல விதத்திலும் ஒத்துழைப்பு வழங்கிய நாட்டுப் பற்றாளர்கள், பொதுமக்கள், அமைப்புக்கள் அனைவருக்கும் யாழ். மாவட்ட அரசியல் துறையினர் கௌரவத்தையும், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளனர். அத்தோடு, சிறீலங்கா இராணுவத்தின் கொடூரத்தால் பாதிப்புற்றவர்களுக்கு நேயம் மிக்க ஆறுதலையும், பலியாகிய பொதுமக்களது குடும்பங்களுக்கு ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்தி அறிக்கை வருமாறு-

எமது மண்ணை ஆக்கிரமித்து, குழந்தைகள், வயோதிபர்கள் என்று பாராது ஈவிரக்கமின்றி கொன்றொழிப்பதன் மூலம் தமிழினத்தை அழித்து விடலாம் என்ற நீண்டநாட் கனவுடன் யாழ் குடாநாட்டின் மீதான பாரிய இராணுவ நடவடிக்கையை முன்னோக்கிப் பாய்தல் எனப் பெயர் சூட்டிக் கொண்டு சிறீலங்கா ஆயுதப்படையினர் முன்னேறி வந்தவேளை, எதிர்த்து முகங்கொடுத்து விரட்டியடிக்கப் போராளிகள் முனைந்து பதில் தாக்குதல் தொடுத்தபோது, தோளோடு தோளாக களத்தில், ஆவேசத்துடன் பக்கபலமாக நின்றார்கள், எமது மண்ணில் அசையாத பற்றுக் கொண்ட நாட்டுப்பற்றாளர்கள்.

உண்ணாது உறங்காது, கடும் எறிகணை, விமானக் குண்டு வீச்சின் மத்தியிலும், உயிரைத் துச்சமென மதித்து, கடுமையாக உழைத்தனர். இவர்களது உழைப்பு எமது புலிப்பாய்ச்சல் நடவடிக்கையை மென்மேலும் உந்தியது. வெற்றியும் கண்டோம். இவ்வாறு உறுதியுடன் செயற்பட்டமை, எமது சுதந்திரத்தை, கௌரவத்தை, எமது எதிர்கால சந்ததியின் அச்சமற்ற வாழ்வை நிலைநாட்டும் ஆற்றல் மிக்கவர்கள் எமது மக்கள் என்னும் நம்பிக்கையை ஊட்டி நிற்கிறது. நம்பிக்கையின் ஊற்றுச் சுனையாக விளங்குகின்றார்கள் எமது மக்கள்.

இனிவரும் நாட்களிலும் கோரத் தாண்டவமாடத் தயாராகும் பேரினவாத வெறியரை, எமது மண்ணிலிருந்து முற்றாக விரட்டியடிக்க நாம் அனைவரும் ஒன்றிணைந்து வலுப்பெறுவோம் என்ற புது உத்வேகத்துடன், முனைப்புப் பெறும் எமது மக்கள் என்றென்றும் எமது மதிப்பிற்குரியவர்கள்.

உற்றாரை சொத்துக்களை இழந்து, இன்னலுற்று திசை தெரியாது உடுத்த உடுபுடவையுடன் தவித்து இடம்பெயர்ந்தவர்களுக்கு உண்டி, உறையுள் தந்தவர்கள், காயமுற்று உயிருக்குப் போராடியவர்களை மீட்டு மருத்துவம் செய்தவர்கள், இரத்த தானம் செய்தவர்கள், காலமறிந்து முற்றுமுழுதாகத் தாமாகவே முன்வந்து உதவிகள் வழங்கியவர்கள் கௌரவத்திற்குரியவர்கள்.

அல்லற்பட்ட மக்களுக்குச் சிறந்த சேவையாற்றியது மட்டுமன்றி, இனிவருங் காலத்திலும் தமிழீழ மக்களுக்கு இன்னல் விளைத்திட, சிறீலங்காப் பேரினவாத வெறியர் முயலும் போதெல்லாம் திடசங்கற்பத்துடன் உழைப்போம், முறியடிப்போம் எனக்கூறிச் செயற்படும் அனைத்து வெகுசன அமைப்புக்கள், கூட்டுறவுத் துறையினர், மத நிறுவனங்கள், குறிப்பாக அயராது உழைத்த சிற்றூர்தி சேவைச் சங்கம், முச்சக்கர வாகன சங்கம் முதலிய தனியார் போக்குவரத்துத் துறையினர், வணிகர் கழகங்கள் ஆகியவற்றிற்கும் எமது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அத்துடன், சிறீலங்கா இராணுவத்தின் கொடூரத்தால் பாதிப்புற்றவர்களுக்கு நேயம் மிக்க ஆறுதலையும், பலியாகிய பொதுமக்களது குடும்பங்களுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவிக்கின்றோம்.

# புலிகளை வெற்றி கொள்வது இலகுவான காரியமல்ல

—பி.பி.சி சிங்கள செய்தியாளர்.

விமானப்படையினரின் குண்டு வீச்சு விமானங்களுக்கு ஏவுகணை மூலம் தாக்குதலை மேற்கொள்ளக்கூடிய, கடற்படையினருக்கு சவாலாக விளங்கும் கடற்புலிகளின் பலத்தைக் கொண்டுள்ள, இராணுவத்தை நேருக்கு நேர் சந்திக்கும் சக்தியையும் போர்த் தந்திரோபாயங்களையும் கொண்டுள்ள விடுதலைப் புலிகளுடன் போரிடுவது என்பதும், வெற்றியீட்டலாம் என இராணுவப் பேச்சாளர் கூறுவதும் இலகுவான காரியமல்ல என பிபிசி. சிங்கள சேவையின் இராணுவ ஆய்வாளர் தெரிவித்துள்ளார்.

இராணுவத் தாக்குதல்களை நுட்பத்துடன் மிகவும் நேர்த்தியாக இதுவரை கையாண்டு வந்த விடுதலைப் புலிகள் தம்வசமுள்ள, முப்படைகளையும் எதிர்க்கும் பலத்தை இதுவரை பயன்படுத்தாது மௌனம் காத்துவருவதாகவே கூறமுடியும் என அவ் ஆய்வாளர் தெரிவித்தார்.

# இலங்கைத் தமிழர் படுகொலைக்கு இந்திய அரசும் பொறுப்பாகும்

*—வை. கோபாலசாமி பிரதமர் ராவ் மீது சாடல்*

இலங்கைத் தமிழரைக் காட்டிக் கொடுத்தது, இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் ஆட்சியே என அண்மையில் சென்னையில் ஆர்ப்பாட்டம் செய்த மதிமுக தொண்டர்கள் மத்தியில் உரையாற்றிய மதிமுக பொதுச் செயலாளர் வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் சிறீலங்கா அரசு மேற்கொண்டிருக்கும் தாக்குதலைக் கண்டித்து, சென்னையிலுள்ள சிறீலங்கா தூதரகத்துக்கு முன்னால் சுமார் 25,000 மதிமுக தொண்டர்கள் வை. கோபாலசாமி தலைமையில் ஆர்ப்பாட்டம் செய்தனர். அங்கு நடந்த கூட்டத்தில் கோபாலசாமி பேசுகையில்,

இலங்கையில் நடைபெறும் இனவாதப் போருக்கு தனித்தமிழீழமே தீர்வாகும். இதைப் புரிந்து கொள்ளாதவர்களே இந்தியாவிலுள்ள தமிழ் மக்கள் மத்தியில் நாம் பிரிவினையைத் தூண்டுவதாகக் குற்றம் சாட்டுகின்றனர். இந்திய அரசின் அனுமதியைப் பெற்றே விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையைச் சிறீலங்கா அரசு எடுத்தது.

எனவே நூற்றுக்கணக்கான தமிழர்கள் பலியானதற்கும், ஆயிரக்கணக்கானோர் காயமடைந்ததற்கும், இலட்சக்கணக்கானோர் இடம்பெயர்ந்ததற்கும் இந்தியாவுக்கும் பொறுப்பு உள்ளது. இலங்கைத் தமிழர்களை நரசிம்மராவின் ஆட்சி காட்டிக்கொடுத்துள்ளதென அவர் மேலும் குற்றம் சாட்டினார்.

# செக். டாங்கிகள், 17 விமானங்கள் பங்குபற்றிய முன்நோக்கிப்பாய்ச்சல்

கடந்த மாதம் சிறீலங்கா இராணுவத்தினர் வலிகாமம் பகுதியில் மேற்கொண்ட 'முன்நோக்கிப்பாய்தல்' நடவடிக்கையின் போது, தரைவழியாக செக்கோஸ்லாவிய தயாரிப்பான போர் டாங்கிகளோடு, ஆகாயமார்க்கமாக 17 போர் விமானங்களும் உதவியதாக 'சண்டே ஐலண்ட்' எனும் கொழும்புச் செய்தித்தாளின் பாதுகாப்புத்துறைச் செய்தியாளர் தெரிவித்துள்ளார்.

இத்தாக்குதலில் நான்கு சுப்பர் சோனிக் விமானங்கள், நான்கு புக்காரா விமானங்கள், மூன்று சியாமாச்செட்டி ரக குண்டு வீச்சு விமானங்கள், அமெரிக்கத் தயாரிப்பான ஆறு 'பெல்' ரக உலங்கு வானூர்திகள் என்பன பயன்படுத்தப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# நெற்றியில் பொட்டிட அஞ்சும் தமிழ்ப் பெண்கள்

சிலங்காப் படையினரின் கைதுகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் நோக்கில், தமிழ்ப் பெண்கள் நெற்றியில் திலகமிடுவதைக்கூடத் தவிர்த்து வருகின்றனர். கொழும்பிலும், அதனை அண்டியுள்ள பகுதிகளிலும் நடமாடும் தமிழ்ப் பெண்கள் மங்களகரமான நிகழ்வுகளுக்குக் கூட நெற்றியில் திலகமிட்டுச் செல்வதில்லை. இவ்வாறு திலகமிடுவது தம்மைத் தமிழ்ப்பெண்கள் என படையினருக்கு இலகுவாக அடையாளம் காட்டிவிடும் என்று இவர்கள் அஞ்சுவதே இதற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் ஒட்டுப்பொட்டுகளை உடலில் மறைத்து ஒட்டிச்சென்று, மங்கள நிகழ்வுகள் நடைபெறும் இடங்களில் மட்டும் அவற்றை எடுத்து நெற்றியில் ஒட்டிக்கொள்வதாகக் கூறப்படுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# போராட்டம் ஒவ்வொரு தமிழனதும் கடமையே!

புலிகள் இயக்கம் அண்மைக் காலமாகச் செய்துவரும் தீவிர ஆட்சேர்ப்பு நடவடிக்கை, மக்கள் மத்தியில் சில கேள்விகளை எழுப்பி உள்ளது.
பாடசாலைகளுக்கும், தனியார் கல்வி நிறுவனங்களுக்கும் சென்று மாணவர்கள் மத்தியில் ஆட்சேர்ப்புக் கூட்டம் நடாத்துவது சரியா? அது மாணவரின் கல்விக்குக் குந்தகம் விளைவிக்கும் செயல் அல்லவா என்று, குரல் எழுப்புகின்றனர் சிலர். அத்துடன், கட்டாயப்படுத்தி இயக்கத்திற்கு ஆட்கள் சேர்க்கப்படுகின்றார்கள் என்ற ஒரு கருத்தையும்

> இராட்சத பலத்துடன் இருக்கும் சிங்களப் படையுடன், ஒருசில ஆயிரம் போராளிகளுடன் - ஒப்பீட்டளவில் குறைந்தளவு ஆயுதங்களுடன் - இருக்கும் புலிப்படை மோத வேண்டி உள்ளது. இது முடியுமா? நிச்சயமாக முடியாது! அப்படியானால் என்ன செய்யலாம்! ஒரேயொரு வழிதான் உண்டு. அதாவது, எதிரியின் படைபலத்திற்கு நிகராக எமது படைபலத்தையும் அதிகரிப்பதுதான்.

சிலர் கொண்டிருக்கின்றனர். இவற்றிக்கு விடை அளிப்பதுதான் இக்கட்டுரையின் நோக்காகும்.
இந்தக் கேள்விகளுக்கான விடையைத் தேடமுன்னர், தமிழீழ விடுதலைக்கான ஆயுதப் போராட்டம் ஆரம்பமாகியதன் தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவையை, எமது மக்கள் நன்கு விளங்கிக் கொள்ள வேண்டும்.
எமது இனத்தின் அரசியல் உரிமைகளுக்காக, முன்னைய தமிழ்த் தலைமைகள், ஏறக்குறைய கால் நூற்றாண்டுக்கும் மேலாக அகிம்சை வழியில் போராடினர் என்பதையும், அந்த அகிம்சைப் போராட்டத்தை மாறிமாறி வந்த சிங்கள அரசுகள் கருத்திலெடுக்காது விட்டதுடன், அந்த அமைதிவழி முயற்சியை ஆயுதங்கொண்டு நசுக்க முற்பட்டபோதுதான் - வேறு வழியின்றி - ஆயுதப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது என்பதையும் மக்கள் நினைவில் வைத்திருக்க வேண்டும்.
எனவே, எமது மக்களைப் பொறுத்தவரை, வரலாறு எமது இனத்திற்குத் தந்த தவிர்க்க முடியாத ஒரு நிர்ப்பந்தமே ஆயுதப் போராட்டம் ஆகும். ஆயினும், தமிழர் தொடுத்த ஆயுதப் போரின் வளர்ச்சியைக் கண்டு அதிர்ந்த சிங்கள அரசுகள், காலத்திற்குக் காலம், பேச்சுவார்த்தைகள் என்ற பெயரில் நடாத்திய அரசியல் திருவிளையாடல்களையும் எமது மக்கள் மனதில் வைத்திருக்க வேண்டும். அமைதித் தேவதையாகக் காட்சி தந்த சந்திரிகா அம்மையார், சமாதானப் பேச்சை எப்படி - எந்த நோக்கத்துடன் - நடாத்தினார் என்பது, இப்போது அம்பலமாகிவிட்ட ஒரு விடயம்.
எனவே, இந்த ஆயுதப் போராட்டத்தின்மூலமே நாம்எமது மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதுடன் - எமது இனத்தையும் முன்னேற்றப் பாதையில் வழிநடாத்திச் செல்ல முடியும். அப்படியாயின், 'இந்த ஆயுதப் போரில் எப்படி நாம் வெற்றியைப் பெறுவது?' என்ற கேள்வி இந்த இடத்தில் எழுகின்றது. படைபலம்தான் போரின் வெற்றியைத் தீர்மானிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றது. படைபலம் என்று குறிப்பிடும் போது, போர் ஆயுதங்களையும் படை ஆட்களையும் சேர்த்தே குறிப்பிடுகின்றோம்.
இந்த இடத்தில் சிங்கள அரசின் படைபலத்தையும், தமிழர் சேனையின் படைபலத்தையும் சற்று ஒப்பிட்டுப் பார்ப்போம்.
சிங்கள அரசிடம் 10,000 ஆட்களையும், 85 விமானங்களையும் கொண்ட ஒரு நாசகார விமானப்படை இருக்கின்றது, அதேபோல, 15,000 ஆட்களையும் 85 கடற்கலங்களையும் கொண்ட கொடூர குணமுடைய ஒரு கடற்படை இருக்கின்றது. அத்துடன் விசேட


பயிற்சியில் துணைப்படை வீரர்கள்

படை, கொமாண்டோப் படை, அதிரடிப்படை என்று மொத்தம் ஒரு இலட்சம் ஆட்களையும் மற்றும் டாங்கிகள்-கவசவாகனங்கள்-பீரங்கி வகைகள் என்பனவற்றையும் கொண்ட ஒரு கொலைகாரத் தரைப்படையும் இருக்கின்றது. ஒட்டுமொத்தத்தில், ஒரு இலட்சத்து இருபத்தைந்தாயிரம் ஆட்பலத்தைக் கொண்ட ஒரு நிரந்தரப்படை, சிங்கள அரசிடம் உண்டு. அத்துடன் ஊர்காவற்படை, துணைப்படை, பொலிஸ்படை என்று தேவை ஏற்படின் போர்க்களத்துக்கு அனுப்பப்படத் தயாராக மேலும் அறுபதாயிரம் ஆள் அணி சிங்களப் படையிடம் உண்டு.
இத்தகையதொரு இராட்சத பலத்துடன் இருக்கும் சிங்களப் படையுடன், ஒருசில ஆயிரம் போராளிகளுடன் - ஒப்பீட்டளவில் குறைந்தளவு ஆயுதங்களுடன் - இருக்கும் புலிப்படை மோத வேண்டி உள்ளது. இது முடியுமா? நிச்சயமாக முடியாது! அப்படியானால் என்ன செய்யலாம்! ஒரேயொரு வழிதான் உண்டு. அதாவது, எதிரியின் படைபலத்திற்கு நிகராக எமது படைபலத்தையும் அதிகரிப்பதுதான். இது முடியாத காரியம் அல்ல. சிங்களப் படைபலத்திற்கு நிகரான படைபலத்தைத் தமிழர் சேனைக்கு வழங்கக்கூடிய சக்தி, எமது இனத்திற்கு உண்டு.
தமிழீழத்தில் ஏறக்குறைய 18 இலட்சம் தமிழர்கள் வசிக்கின்றார்கள். இதில் ஏறக்குறைய 8 இலட்சம் பேர் இளைஞர்-யுவதிகளாவர். இந்த இளைஞர் படையில் இருந்துதான் எந்த நாடும், தனது படைக்குத் தேவையான ஆட்பலத்தை எடுத்துக்கொள்வது வழமை.
ஆனால், எமது மண்ணைப் பொறுத்தளவில், இந்த 8 இலட்சம் இளைஞர் திரளில் ஆக ஒருசில ஆயிரம் இளைஞர்-யுவதிகள்தான் புலிப்படையில் இணைந்துள்ளனர். மிகுதி ஏழு இலட்சத்துச் சொச்ச ஆட்பலம், தேசத்தின் பாதுகாப்பிற்குப் பயன்படாது கிடக்கின்றது. இந்த 8 இலட்சம் இளைஞர்-யுவதிகள் இயக்கத்தில் சேர்ந்தால், தமிழரின் படைபலம் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள், பெருமையில் மிதப்பீர்கள்!
இன்னும் ஒரு கோணத்தில் இருந்து இதைப் பார்ப்போம். இப்போது தமிழீழத்தில், ஏறக்குறைய 4 இலட்சம் குடும்பங்கள் இருக்கின்றன. குடும்பத்தில் ஒருவர், அதாவது, வீட்டிற்கொருவர் என்ற வீதத்தில் புலிகள் இயக்கத்தில் இணைந்தால், 3 இலட்சம் பேர் கொண்ட ஒரு பாரிய படையாக புலிப்படை மாறிவிடுமே! சரி, அந்தளவுக்கு ஆசைப்படத் தேவையில்லை. 3 குடும்பங்களுக்கு ஒரு ஆள் வீதத்தில் இணைந்தாலே ஒரு இலட்சம் ஆட்பலம் தமிழர் படைக்கு வந்துவிடும். இவை எல்லாம் கற்பனைக் கணக்குகள் அல்ல. எமது தேசத்தின் மடியிலுள்ள பயன்படுத்தக்கூடிய சொத்துக்களின் கணக்கு. ஆனால், அது தேசத்தின் பாதுகாப்பிற்குப் பயன்படாமல் வீணே கிடக்கின்றது. இதற்கு உயிர் தொடர்பான அச்சமும் - ஆசையும் காரணிகளாக இருக்கலாம்.
இயக்கத்தில் இணைவோரின் உயிர்களுக்கு எந்தவித உத்தரவாதமும் இல்லை என்பது உண்மைதான். ஆனால், இன்றைய நிலையில், இயக்கத்தில் இணையாத மற்றையோரின் உயிர்களுக்கும் எந்தவித உத்தரவாதமும் இல்லை. ஒப்பீட்டளவில் சொல்லப்போனால் இயக்கத்தில் சேராத இளைஞர்-யுவதிகளிலும் பார்க்க, இயக்கத்தில் இருக்கும் இளைஞர்-யுவதிகளின் உயிர்களுக்கு உத்தரவாதம் உண்டு என்று துணிந்து கூறலாம். ஏனெனில், 20 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெறும் இந்த விடுதலைப் போரில், ஏறக்குறைய முப்பதினாயிரத்துக்கும் மேற்பட்ட தமிழர்கள் பலியாகியுள்ளனர். ஆனால், இதில் போராடிச் சாவடைந்தவர்கள் ஏறக்குறைய ஆறாயிரம் மட்டுமே ஆகும்.
இயக்கத்தில் சேருவதற்கு இளைஞர்கள்


புலியோடிணைந்த மக்கள்

> படைபலம்தான் போரின் வெற்றியைத் தீர்மானிப்பதில் பெரும்பங்கு வகிக்கின்றது. படைபலம் என்று குறிப்பிடும் போது, போர் ஆயுதங்களையும் படை ஆட்களையும் சேர்த்தே குறிப்பிடுகின்றோம்.
> ஏழு இலட்சத்துச் சொச்ச ஆட்பலம், தேசத்தின் பாதுகாப்பிற்குப் பயன்படாது கிடக்கின்றது. இந்த 8 இலட்சம் இளைஞர்-யுவதிகள் இயக்கத்தில் சேர்ந்தால், தமிழரின் படைபலம் எப்படி இருக்கும் என்று கற்பனை செய்து பாருங்கள், பெருமையில் மிதப்பீர்கள்!

தொடர்ச்சி 16 ஆம் பக்கம்...

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ரோகண இல்லாத ஜே.வி.பி தனிவழியில் செல்லுமா?

ஜனதா விமுக்தி பெரமுன தென்னிலங்கையில் மீண்டும் தனது செயற்பாடுகளைத் தொடங்கிவிட்டது. 1993ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் மறைமுகமான பெயரில் போட்டியிட்டதுடன், ஜேவிபி தனது செயற்பாட்டை மீண்டும் ஆரம்பித்ததற்கான அறிகுறிகள் தோன்றின எனலாம்.

இதனைத் தொடர்ந்து சனாதிபதித் தேர்தலில் சிறீலங்கா முற்போக்கு முன்னணி சார்பில் 'நிகால் கலப்பதி' நிறுத்தப்பட்டதும், ஜேவிபி இன் பிரவேசம் மேலும் உறுதியாயிற்று.

இவ்வாறு நிகால் கலப்பதி போட்டியில் குதித்தாலும், பின்னர் பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளரான திருமதி சந்திரிகா குமாரதுங்காவுடனான இணக்கப்பாடொன்றின் மூலம் பின்னர் போட்டியிலிருந்து விலகிக் கொண்டார்.

இந்த நிலையில் மீள்புனரமைப்புக்குக் காலம் குறித்த ஜேவிபி இல் உள்வீட்டுப் பிரச்சினைகளும் தலைதூக்கின.

இலண்டனிலிருந்து ஜேவிபியின் முக்கிய உறுப்பினரில் ஒருவரான சோமவன்ச அமரசிங்கா, ஜேவிபி இன் மெய்யான அமைப்பைத் தனது தலைமைத்துவத்தின் கீழ் கொண்டு வந்திருப்பதாக அறிவித்தார்.

அதே இலண்டனிலிருந்து இன்னொரு அறிவிப்பும், வெளியானது. ஜேவிபி இன் முன்னாள் தலைவரான றோகண விஜேவீரவின் மைத்துனரான மருத்துவர் சந்திரா பெர்னாண்டோ, தனது மைத்துனரின் கட்சியைத் தானே வழிநடத்தப் போவதாகத் தெரிவித்தார்.

மறுபுறத்தில் விமல் வீரவன்ச தரப்பினர் ஜேவிபி இன் உண்மையான தலைவர்கள் தாமே என்று வலியுறுத்தும் அறிக்கைகளை விடுத்தனர்.

**அரசியலமைப்பு திருத்தம், நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி முறை ஒழிப்பு, அரச உடைமைகளை தனியார் மயப்படுத்துவதை நிறுத்தல்-சுதந்திர வர்த்தக வலய ஊழியர் பிரச்சினை-இரணவெல அமெரிக்க வானொலி அஞ்சல் நிலையம், என்ற இன்னோரன்ன பிரச்சனைகளில் ஜே.வி.பிக்கும் அரசுக்கும் இடையில் முரண்பட்ட போக்கே நிலவி வருகின்றது.**

இதன் பின்னர் எத்தனையோ சம்பவங்கள் நடந்தன. இவற்றுக்கெல்லாம் இறுதியாக கடந்த மே மாதமளவில் சமார் 13 ஆண்டுகளின் பின் ஜேவிபி இன் அரசியல் குழு தங்காலையில் கூடியது.

ஜேவிபி இன் முன்னாள் தலைவரான றோகண விஜேவீரவின் பிறந்த இடமான தங்காலையில் இந்தக் கூட்டம் நடந்தது.

பல பாகங்களிலிருந்தும் வந்த அறுநூறுக்கும் மேற்பட்ட ஜேவிபி உறுப்பினர்கள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் ஜேவிபி இன் புதிய தலைவராக சோமவன்ச அமரசிங்க தெரிவு செய்யப்பட்டார்.

பொதுச் செயலாளராக ரில்ரன் சில்வாவும், பிரச்சார உத்தியோகத்தராக விமல் வீரவன்சவும் தெரிவாகினர்.

இந்தக்கூட்டத்தில் ஜேவிபி இன் எதிர்காலத் திட்டங்கள் பற்றிய குறிப்பிடத்தக்க விடயங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை என கலந்து கொண்டோர் கூறுகின்றனர். ஜேவிபியை அரசியல் மயப்படுத்தும் தீர்மானமும் பழைய தவறுகளை மீண்டும் ஏற்படாதவாறு தடுக்கும் முடிவும் இக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்ட சில கோரிக்கைகளாகும்.

கூட்டத்தின் முடிவில் ஜேவிபி இன் அரசியல் போக்கு பற்றிய செய்தி காலக்கிரமத்தில் வெளியிடப்படும் என்ற தகவல் மாத்திரம் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது.

இது இவ்வாறிருக்க, அரசிற்கும், ஜேவிபிக்கும் இடையிலான உறவு நிலை பற்றி செய்தியாளர்களால் பெரிதாக விமர்சிக்கப்படுகின்றது.

ஜேவிபி மீண்டும் ஆழமாகத் தன் காலை ஊன்றிக் கொள்ளும்வரை அரசடனான உறவு தேவைப்படும். ஒன்றாகவே இருப்பதாக ஜேவிபி இல் ஒருசாரார் கருதுகின்றனர்.

அரசின் பக்கம் சனாதிபதி சந்திரிகாவிற்குள்ள அரசியல் நெருக்கடிகள், உட்கட்சிப் பூசல்கள் மத்தியில் ஜேவியியின் உறவு அவருக்கும் வேண்டியதொன்றாகவே இருக்கிறது.

எனவே, பரஸ்பரம் ஒருவருக்கொருவர் உதவியாக இருப்பது என்ற நிலையே ஜேவிபிக்கும் அரசக்கும் இடையில் இன்று உருவாகியுள்ளதாகும் என அரசியல்



ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இந்த உறவு எத்தனை காலத்திற்கு நீடிக்கும் என்பது பலமான கேள்வியாகுமென இவர்களால் முன்வைக்கப்படுகின்றது.

அரசியலமைப்பு திருத்தம், நிறைவேற்று அதிகாரமுடைய சனாதிபதி முறை ஒழிப்பு, அரச உடைமைகளை தனியார் மயப்படுத்துவதை நிறுத்தல்-சுதந்திர வர்த்தக வலய ஊழியர் பிரச்சினை-இரணவெல அமெரிக்க வானொலி அஞ்சல் நிலையம், என்ற இன்னோரன்ன பிரச்சினைகளில் ஜேவியிக்கும் அரசக்கும் இடையில் முரண்பட்ட போக்கே நிலவி வருகின்றது.

றோகண விஜேவீர இல்லாத ஜேவிபி- ஒரு கட்டத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசின் கைப்பொம்மையாக மாறிவிடுமா எனவும் அரசியல் வட்டாரங்களில் கேள்வி எழுப்பப்படுகின்றது.

பலமான தலைமை என்ற ஒன்று இல்லாத மாத்திரத்தில் ஜேவிபி இன் போக்குகளும் அதன் உள்வீட்டு வெடிப்புக்களும் எவ்வாறு அமையப் போகின்றது என்பதும் சந்தேகத்திற்குரியதாக மாறிவிட்டது.

**அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதான ஜே.வி.பி உறுப்பினர்கள் பலர் வடக்குக்குக் கொண்டுவரப்பட்டு, யாழ் கோட்டையிலும் தடுத்து வைக்கப்பட்டனர்.**

**இவர்களை மீட்கவென புகையிரதத்தில் யாழ். நோக்கி வந்த ஜே.வி.பி குழுவொன்று, மதவாச்சியை அடைய முன்னர் காவல்துறையால் கைது செய்யப்பட்டது.**

றோகண விஜேவீரவின் உண்மையான பெயர், டொன் நந்தசிறி விஜேவீர என்பதாகும். 1943ஆம் ஆண்டு யூலை மாதம் 14ஆம் நாள் தங்காலையில் பிறந்த இவரது குடும்பப் பின்னணியே இவரை அரசியலுக்குள் இழுத்ததெனலாம்.

கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த இவரது தந்தை கக்மீமன தேர்தல் தொகுதியில் போட்டியிட்ட தனது கட்சி வேட்பாளருக்காகப் பிரச்சாரம் செய்து கொண்டிருந்த போது எதிர்த்தரப்பினரால் தாக்கப்பட்டு படுகாயமடைந்தார்.

இந்தத் தாக்குதலால் எழுந்து நடக்கமுடியாத நிலையில் 18 ஆண்டுகள் கழிந்த பின்னர் இவர் மரணமானார்.

இதற்குப் பிறகு வறுமையில் கடுமையாக வாடிய விஜேவீரவிற்கு கம்யூனிஸ்ட் கட்சியின் சிபார்சில் மொஸ்கோ செல்லும் வாய்ப்புக் கிடைத்தது. அங்குள்ள பல்கலைக் கழகமொன்றில் மூன்றாண்டுகள் மருத்துவப்படிப்பை இவர் தொடர்ந்தார்.

அங்கு வைத்து, சீன கம்யூனிஸ்ட் சித்தாந்தத்தில் றோகண விஜேவீர ஈடுபட்டதால் இவருக்குரிய 'விசா' 1964 இல் மொஸ்கோவினால் இரத்துச் செய்யப்பட்டது.

இதனால் நாடுதிரும்பிய பின் சீனச் சார்பு கம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து, அதன் வாலிப முன்னணியின் செயலாளராக செயற்பட்டார். இக்கட்டத்தில் கட்சித் தலைவராக இருந்த என். சண்முகதாசனுடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டைத் தொடர்ந்து, கட்சியிலிருந்து வெளியேறி ஜனதா விமுக்தி பெரமுனையைத் தொடங்கினார்.

1971 ஏப்ரல் 3ஆம் நாள் ஜேவியியின் முதலாவது தாக்குதல் நடந்தது. கண்டியிலுள்ள பேராதனையில் நடந்த இக்குண்டு வெடிப்பில் மூவர் கொல்லப்பட்டனர்.

இதனால் அன்று பிரதமராயிருந்த சிறிமாவோவால் காவல்துறையினரும், இராணுவத்தினரும் தீவிரமாக உசார்ப்படுத்தப்பட்டனர்.

இதன் தொடராக றோகண விஜேவீர, ஜயதேவா உயங்கொட போன்றோர் இரவோடு இரவாகக் கைதாகினர்.

மகிந்த விஜேசேகர, விக்டர் ஐவன், எச்பி. கேரத், பயசிறி பெர்னாண்டோ போன்ற மத்திய குழு ஜேவிபி உறுப்பினர்கள் தலைமறைவாகினர்.

இதனையடுத்து 1971ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் நாள் நள்ளிரவுக்குப் பின்னர், 74 காவல்துறை நிலையங்கள் மீது ஒரே இரவில் தாக்குதல் நடத்தினர். வெள்ளவாயா, வறக்காப்பொலை, மாகோ, திசமகரகமை, கண்டி, கேகாலை, தங்காலை, மாத்தறை என இது தொடர்ந்தது.

இவற்றில் பல ஜேவிபி உறுப்பினர்கள் கொல்லப்பட்டனர். பலர் தாக்குதல் திட்டங்கள் வகுக்கும்போது கைது செய்யப்பட்டனர்.

ஜேவியியினர் தமது தாக்குதல் இலக்கை வானொலியில் மரண அறிவித்தல் மூலம் மற்றைய உறுப்பினர்களுக்கு அறிவித்து வந்தனர். அரசிற்கு இவ்விடயம் தெரியவந்ததும்- மரண அறிவித்தல்களை வானொலியில் ஒலிபரப்புவதற்கும் செய்தித்தாள்களில் பிரசுரிப்பதற்கும் அரச தடைவிதித்தது. இதனால் உறுப்பினர் பலர், தமது அடுத்த கட்ட நடவடிக்கைகள் பற்றி அறிய முடியாது காவல்துறையினரிடம் கைதாகினர்.

ஜேவியியின் பரிபாசைச் செய்திகள், 'ரோர்ச் லைட்' சமிக்கைகள் என்பனவும் காவல்துறையினரிடம் அகப்பட்டன.

கைதாகிய ஜேவியியினரது உடல்கள், காடுகளிலும்-ஆறுகளிலும் தொடர்ந்து ஒதுங்கத் தொடங்கின.

அரசிற்கு, இந்தியாவிடமிருந்து இராணுவ உதவி பெறப்பட்டது. சீனாவிலிருந்தும் தன்னியக்க ஆயுதங்கள் பெறப்பட்டன. தென்னிலங்கைக் காடுகளில் பாரிய அளவில் தேடுதல்கள் மேற்கொள்ளப்பட்டன.

புத்தளம் மற்றும் அனுராதபுரம் காட்டுப் பகுதிகளில் இவ்வாறான தேடுதல்கள் அதிகம் நடைபெற்றன.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் கைதான ஜேவிபி உறுப்பினர்கள் பலர் வடக்குக்குக் கொண்டுவரப்பட்டு, யாழ் கோட்டையிலும் தடுத்து வைக்கப்பட்டனர்.

இவர்களை மீட்கவென புகையிரதத்தில் யாழ். நோக்கி வந்த ஜேவிபி குழுவொன்று, மதவாச்சியை அடைய முன்னர் காவல்துறையால் கைது செய்யப்பட்டது. இதன்போது நடந்த சண்டையில் ஜேவிபி. மத்தியகுழு உறுப்பினரும், இன்று 'ராவய' செய்தித்தாள் ஆசிரியராக இருப்பவருமான விக்டர் ஐவன் கையொன்றை இழந்தார்.

இந்தக் காலப்பகுதியில் சமார் 200 ஜேவிபி உறுப்பினர்களே கொல்லப்பட்டதாக அரச கூறினாலும், 14,000

தொடர்ச்சி : 19 ஆம் பக்கம்

நிர்மலராஜன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தனித்துவமான இலக்கினை நோக்கி

## -காந்தரூபன் அறிவுச்சோலை- அறிமுகம்

இந்திய இராணுவப் புண்ணியவான்களாலும், சிறீலங்கா இராணுவத் தர்மிஸ்டர்களாலும், இலங்கையின் வடக்கு- கிழக்கு மக்கள் சொல்லொணாத் துயரங்களையும் துன்பங்களையும் அனுபவித்து வருகின்றனர். கணவன்மாரை இழந்த மனைவியர், மனைவியரை இழந்த கணவன்மார், பிள்ளைகளை இழந்த பெற்றோர், பெற்றோரை இழந்த பிள்ளைகள், எங்கும் ஒரே சோகம்- எங்கும் ஒரே துன்பம். இராணுவ நடவடிக்கைகளால் கூடுதலாகப் பாதிக்கப்படுபவர்கள், பெண்களும் சிறுவர்களுமே. பெண்களைப் பொறுத்தமட்டில் அரசசார்பற்ற நிறுவனங்கள் தங்கள் தங்கள் இயல்பிற்கேற்றவாறு புனர்வாழ்வு நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன. ஆனால் சிறுவர்களைப் பொறுத்தமட்டில், சிறுவர் இல்லங்கள் என்ற பெயரில் சில புனர்வாழ்வு வேலைகள் நடை-பெற்றாலும், இச்சிறுவர்களைச் சமுதாயத்தில் இணையக்கூடியவர்களாக உருவாக்குவது அரிது. இதை மையமாக வைத்தே தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்களால், 1993 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 1 ஆம் நாள் வட-கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்டு, பெற்றோரை



இழந்த 50 சிறார்களுடன் தொடங்கப்பட்டதே காந்தரூபன் அறிவுச்சோலை. ஒரு நாட்டின் வளங்களுள் மிகச்சிறந்த இயற்கைவளமெனக் கருதப்படுவது இச்சிறார்களே. எனவே இவர்கள் பராமரிக்கப்பட வேண்டியவர்கள். அது மாத்திரமின்றி இவர்கள் சமுதாயத்தில் இணைந்து வாழவும், சமுதாயம் ஏற்கக்கூடியவர்களாகவும் வளர்க்கப்பட வேண்டும். இதுதான் காந்தரூபன் அறிவுச் சோலையின் பணி.

### அமைவிடம்

காந்தரூபன் அறிவுச்சோலை, யாழ் நகரில் இருந்து ஐந்து கிலோ மீற்றர் தொலைவில் இராச பாதையில் மாவீரர் துயிலும் இல்லத்திற்கப்பால் கோப்பாய் கிராமத்தில் உள்ளது. கதிரவன் ஒளியும், தூய்மையான காற்றும், நல்ல குடிநீரும் கொண்டு, செம்பாட்டு நிலத்தில் அடர்ந்த மாஞ்சோலைகளுக்கிடையே இச்சோலை காணப்படுகிறது.

இராசபாதையிலிருந்து கிழக்கு நோக்கி 200 மீற்றர் கல்லொழுங்கை முடிவில் காந்தரூபன் அறிவுச்சோலை நுழைவாயில் உள்ளது. மூடியிருக்கும் வாயிலைத் திறந்து அடிவைத்ததும் செப்பனிடப்பட்ட தெரு ஒன்று அறிவுச்சோலையை இரு கூறுகளாக்கி நிற்கின்றது. பாதையின் இரு மருங்கிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட பெரும் விளையாட்டு மைதானத்திடல்கள் உண்டு. விளையாட்டுத் திடல்களைக் கடந்தால் பூங்கா, அலுவலகம், பாடசாலை, மாணவர் விடுதி என்பனவற்றைக் காணலாம்.

### நோக்கம்

இப்படியான சிறுவர் இல்லங்கள் எத்தனையோ, குறிப்பாக யாழ். மாவட்டத்தில் காணப்படுகின்றன. ஆனால் இவையாவும் குழந்தைகளை அரைகுறை மனிதனாக்குவதிலேயே கவனமெடுக்கின்றன. குழந்தைகளை குடும்ப சூழலில் வாழ்க்கைக்கு ஏற்றவர்களாக்கும் நோக்கினைக் கொண்டு வளர்ப்பதில்லை. இதனால் குழந்தைகள் வளர்ந்து இல்லங் களைவிட்டு வெளியேறியதும், அவர்கள் சமூகத்தோடு இணையாது அந்நியப்படுகின்றனர். இவற்றை மனதிற் கொண்டே இதில் ஒரு மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு அறிவுச் சோலை இயங்குகின்றது. மனிதனை மனிதனாக்குவதே இதன் நோக்கம்.


பிற நாடுகளிற் காணப்படுவது போன்று பூரணமான, தனித்துவமான சூழலைக்கட்டி எழுப்புவதே எமது நோக்கம். ஆரம்பப் பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழகம் வரை இதற்குள் தோன்றுவதோடு தொழிற்கூடங்கள், வைத்தியசாலைகள், வங்கிகள் போன்றனவும் என்றோ ஒரு நாள் இங்கு அமைய வேண்டும். இதுவே ஆரம்ப கர்த்தாக்களின் அவா. ஒரு மாணவன் தான் விரும்பிய பாடத்தை, விரும்பிய நேரத்தில், விரும்பிய ஆசிரியரிடம் கற்கும் சூழல் ஏற்பட வேண்டும்.

'இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவோமே இயந்திரங்கள் பல செய்திடுவோமே'

என்ற பாரதியின் கனவு நனவாகப் பாடுபடுவதே இச்சோலையின் நோக்கு. 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்பதுபோல், வெள்ளைச் சட்டை வேலைகளை வெறுத்து கசங்கிய காக்கியோடு, பாரிய இயந்திரங்களோடு போராடும் தொழிலாளர்களை உருவாக்கி, நாட்டிற்கு நல்லனவற்றையே செய்ய ஊக்குவிக்க வேண்டும். இதையே எம்பிள்ளைகளும் கற்க வேண்டும். பல்துறைகளிலும் தன்னம்பிக்கையுள்ள சமுதாயத்தைக் கட்டி எழுப்பக்கூடிய சமூக வல்லுனர்களை இவ்வறிவுச் சோலையில் உருவாக்க விரும்புகின்றோம்- விளைகின்றோம்.

### இன்றைய நிலை

> *கடந்த மாதம் 10.07.95 அன்று கரும்புலி மேஜர் காந்தரூபன் நினைவு நாளாகும். நாட்டிற்காகத் தம்முயிரைத் தற்கொடையாக்கியோர் வரிசையில் மேஜர் காந்தரூபனும் ஒருவன். சிறு வயதிலேயே தாய் தந்தையரை இழந்து வளர்ப்புப் பெற்றோரின் ஆதரவில் வளர்ந்தவன்தான் காந்தரூபன். கரும்புலிகளின் வாழ்வின் இறுதி விருப்பங்கள் விடுதலைப் புலிகளால் கூடியளவு நிறைவேற்றி வைக்கப்படுகின்றன. இவ்வரிசையில் மேஜர் காந்தரூபனின் இறுதி ஆசையாகத் தோன்றியதே. 'காந்தரூபன் அறிவுச் சோலை". காந்தரூபன் அறிவுச்சோலை பற்றிப் பலருக்குத் தெரியாது. காந்தரூபன் அறிவுச்சோலை என்றால் அது என்ன செய்கின்றது என்று சிலருக்குத்தான் தெரியும். எனவேதான். காந்தரூபன் அறிவுச்சோலை பற்றிய அறிமுகம். இன்றைய நிலை. எதிர்பார்ப்புக்கள் போன்றன இங்கு கட்டுரையாளரால் விளக்கப்படுகின்றது.*



மிக அண்மையில் தொடங்கப்பட்ட நிறுவனமாக அமைந்துள்ள போதிலும், மற்றவர்களால் எதிர்பார்க்க முடியாத இலக்குகளை எட்டியுள்ளோம். சிறீலங்கா அரசின் பொருண்மியத் தடைகளுக்கு மத்தியிலும் உள்ளூர் மூலப் பொருட்களால் உருவாக்கப்பட்ட கட்டடங்களைத் தன்னகத்தே கொண்டு, சின்னஞ் சிறியமனித நெஞ்சங்களோடு பசுஞ் சோலையாகப் பூத்துக் குலுங்குகின்றது. அறிவுச்சோலையில், சொந்தத்தில் ஒரு பாடசாலை அமைத்து, 16 ஆசிரியர்களுடன் பாடசாலைக் கல்வியும் மற்றும் உடற்கல்வி, அழகியற் கல்வி என்பனவற்றோடு கராத்தே, யோகாசனப் பயிற்சி போன்றனவும் வழங்கப்படுகின்றது. அறிவுச்சோலை பொறுப்பாள்கை, மாணவரின் விருப்பிற்கும் வளர்ச்சிக்கும் ஏற்றதாக படிப்பிக்கப்படுகின்றது. பாடங்களின் வகையையும் பொருள் தொகுப்பையும் கல்வி உளவியல் அடிப்டையில் திட்டமிட்டு, பள்ளிப் பொறுப்பாள்கையிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

### எதிர்பார்ப்பு

எமது நோக்கம் பரந்துபட்டது - நெகிழ்வுடையது. எனவே எதிர்பார்ப்புக்கள் விசாலமானதாக இருக்கும். காந்தரூபன் அறிவுச்சோலை தங்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாகப் பாரிய மனிதாபிமான சேவையில் ஈடுபட்டுள்ளது. எனவே வடக்கு - கிழக்குச் சிறார்களுக்கு உதவுவதற்கு உதவுங்கள். தன்மானத்தோடும், தன்னம்பிக்கையோடும் உள்ள சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதற்கு நல்மனங் கொண்டோரையும், கொடைவள்ளல்களையும் நாடி நிற்கின்றோம்.

**நன்றி- கதிர்**

---

## கடற்கரும்புலி மேஜர் காந்தரூபன்

**காந்தரூபனே!**

'உன்னை நெஞ்சில் சுமந்து
வழித்தடம் பிசகாது நடப்போம்' என்று
சென்றவருடம் உறுதியெடுத்தோம்.
இன்றும் உன் நினைவு நாள்
கடலின் காற்றுத் தழுவும் போதும்
அதிரும் வெடியோசையை அறியும் போதும்
கடற்கரும்புலியே!
உன்நினைவு எம்மில் நெருப்பு மூட்டும்
இந்தப் பிஞ்சுக் கொடிகள்
பற்றிப்படரும் கொழுகொம்பே!
உன் இறுதி ஆசை
இந்தோபார் செழித்து வளர்ந்து
திசையெங்கும் விசாலித்துள்ளது.
எங்கள் தலைவர்
உனக்கு வாக்குறுதி தந்தார்
எமக்கு வாழ்விடத்தை வழங்கினார்.
காந்தரூபன் அறிவுச்சோலை மலர்ந்தது
நாங்கள்
துள்ளியாடும் சிட்டுக்களாகப் பாடுகின்றோம்
காந்தரூபனே!
எம் அன்பினுக்குரிய ஆணிவேரே!
உன் நினைவில் நனைகின்றோம்.

**காந்தரூபன் அறிவுச்சோலைப் பிள்ளைகள்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கிழக்கில் புலிகளின் தந்திரோபாயம் என்னுந் தலைப்பில் 'ஐலண்ட்' செய்தித்தாள் எழுத்தாளர் தாரகி எழுதிய கட்டுரையின் தமிழாக்கம் இங்கே தரப்படுகின்றது

## கிழக்கிற்கும் பாதுகாப்பான பாதை

# புலிகளின் நிலைப்பாடு

மூன்றாம் ஈழப்போரிலே கிழக்கிற் புலிகளின் தாக்குதல் வழிமுறைகள் தெளிவாக உள்ளன.

இராணுவ ரீதியிலான மேலாதிக்கம் பெறுவதை நோக்காகக் கொண்டு நான்கு நதிக்கரைப் பிரதேசங்களிற் தாக்குதல் இலக்குகளாக வகுத்து அவர்கள் செயற்படுகின்றனர்.

கட்டுமுறிவுக்குளத் தாக்குதலும் பணிச்சங்கேணியில் நடைபெற்ற அதிரடியும், வாகரைப்பகுதியிலிருந்த இராணுவ அணியொன்றை அப்பகுதியிலிருந்து அகற்றியது.

வாகரைப் பகுதியானது பெரியளவில் அமைந்த உதவி அரச அதிபர் பிரிவாகும். மட்டக்களப்பு மாவட்டத்தின் வடமுனையிலுள்ள இப்பகுதிக்கு வாழைச்சேனை-பொலனறுவை வீதி தெற்கு எல்லையாகவும், வெருகல் ஆறும் திருமலை மாவட்டமும் வடக்கு எல்லையாகவும் அமைந்துள்ளன.

சமார் தொண்ணூறு வீதமான இப்பகுதி காடுகளும், புதர்ச்செடிகளும், முட்செடிகளும் கொண்டதாகக் காணப்படுகின்றது.

இங்கு தளர்வாக அமைந்துள்ள குடியிருப்புக்கள் பெரும்பாலும் மூதூர் எல்லையோரமாகச் செல்லும் நெடும் வீதியிலேயே அமைந்துள்ளன. இப்பகுதியின் பெரிய இராணுவத்தளமும் இங்கேதான் அமைந்துள்ளது.

இரண்டாவது ஈழப்போரிற் சமார் இரண்டு ஆண்டுகளாக வாகரைப் பகுதி புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது.

வாகரையின் எல்லையோரமாகச் செல்லும் நெடுவீதி ஒன்றேதான் இப்பகுதிக்கு வாகனங்கள் செல்லக்கூடிய வீதியாகும்.

இப்பகுதியிற் கவரும் அம்சம் யாதெனில்-கடற்பகுதிக்கும் காட்டுப்பகுதிக்கும் இடையிலான தொடர்புள்ள பாதையாகும். ஆனால் கிழக்கிலுள்ள ஏனைய நதிக்கரைப் பிரதேசங்கள் புலிகளின் இலக்குகளுக்குப் பொருத்தப்பாடற்றவையாகும்.

புலிகள் தமது தாக்குதல் இலக்குகளை வைத்துள்ள பிரதேசம் திரியாய் புல்மோட்டைப் பகுதியாகும். முதலாம் ஈழப்போரின் ஆரம்பக் கட்டத்தில் - முல்லைத்தீவின் தெற்குப் பிரதேசத்தை ஒரு எல்லையாகவும், திருகோணமலையின் வடக்குப் பிரதேசத்தை ஒரு எல்லையாகவும் கொண்ட இப்பகுதியின் முக்கியத்துவம் உணரப்பட்டிருந்தது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்குத் தொடர்பை ஏற்படுத்தும் பகுதியாகவும் இப்பிரதேசம் விளங்குகின்றது.

முல்லைத்தீவு-திருகோணமலை எல்லையோரத்தில் முக்கியமான கிராமமான தென்னமரவாடியில் மக்கள் வெளியேற்றப்பட்ட நிலையும் மணலாற்றில் தொகுதி தொகுதியாக அமைக்கப்பட்ட இராணுவ முகாம்களும் முல்லைத்தீவு-திருமலைப் பாதையைப் புலிகள் பயன்படுத்துவதில் தடைகளை ஏற்படுத்தியிருந்தன.

ஆனாலும், புலிகள் பயன்படுத்தும் வேறு சில மார்க்கங்களைத் தடுப்பதில் உள்ள அபாயங்களை இராணுவம் அறிந்திருந்தது.

படையினரின் கட்டுப்பாட்டில் யான் ஓயாவின் இருமருங்கிலும் உள்ள வரட்சியான காட்டுப்பகுதி புலிகளுக்குப் பயன்தரமுடியாது என்றே கருதப்பட்டது.

தினமும் தங்களது தளங்களை இப்பிரதேசத்தில் இடம்மாற்றியபடி புலிகள் இருந்தனர்.

மிகவும் அபாயகரமான இப்பயணம் நிலவில்லாத காலங்களில் சமார் 35 மைல்களை நடையிலேயே கழிக்க வேண்டியதாக உள்ளது.

ஆயினும், கிழக்குக்குப் புலிகள் சென்றுவர இப்பகுதி மிகவும் அவசியமான இடமாகவே உள்ளது. திரியாயின் மேற்குப்புறமாகப் பிரவேசிக்கும் புலிகளின் அணிகள்-தெற்குப்புறமாகச் சென்று ஓரிரு தினங்கள் ஓய்வெடுத்த பின்னர், கும்புறுப்பிட்டியின் மேற்கிலுள்ள அடர்ந்த காடுகள் வழியாகப் பேராறு பகுதிக்குள் வருகின்றன.

அல்லது திரியாயின் கிழக்குப் பகுதிக்குச் சென்று தெற்காகத் திரும்பிப் புடவைக் கட்டைப் புலிகளின் அணிகள் அடைகின்றன.

சிறிய முசுலிம் கிராமமான இங்கிருந்து விரைவுப் படகுகளில் கிழக்கின் மற்றைய பகுதிகளுக்குப் பயணங்கள் தொடர்கின்றன.

இவ்வாறான வழிக்குக் கல்லிறவு பகுதியில் அமைந்துள்ள சிங்களக் குடியேற்றமும், படைமுகாமொன்றும் தடையாக அமைந்தன.

கிழக்குக் கடற்பிராந்தியத்திற் தமது பலத்தைக் கடற்புலிகள் விரிவாக்கிச் செல்லும் வழியிற் பெரியளவில் இராணுவத்துடனான சமர்களுக்கும் புடவைக்கட்டைத் தமது பூரண கட்டுப்பாட்டிற் புலிகள் வைத்திருக்க முனைகின்றனர்.

புல்மோட்டை, திரியாப் பகுதியிற் தற்காலிகமாகவேனும் புலிகள் தங்கள் அதிகாரத்தைக் காடுகளிலும் கரையோரப் பகுதிகளிலும் பெற்றுள்ளனர்.
கடலாலும், தரையாலும் கிழக்கிற்குச் செல்லும் முக்கியமான இப்பகுதியை மட்டுமன்றி மணலாறு தொட்டு, கொக்கிளாய் வரையான நீண்ட தரைவழிப்பாதையொன்றைக் கிழக்கிற்குச் செல்வதற்குப் பெற்றுக் கொள்வதற்கேதுவாகத் தரைவழியாகவும் அழுத்தங்களைப் புலிகள் கொடுக்க ஆரம்பித்துள்ளனர்.

புலிகளிடம் சிக்கியுள்ள மூன்றாவது பகுதி வடமுனைப் பிரதேசமாகும். அண்மையில் அழிக்கப்பட்ட தாராக்குளம் இராணுவ முகாம் இப்பகுதியிற் தந்திரோபாயமான இடத்தில் அமைக்கப்பட்ட முக்கியமான முகாமாகும். நான் பலமுறை இப்பகுதியின் முக்கியத்துவம் பற்றி இவ்வாறான கட்டுரைகளிற் குறிப்பிட்டுள்ளேன்.

மகாவலித் திட்டத்தின் 'பி' பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பகுதி தமிழ் அரசியலில் உணர்ச்சியூட்டப்படக் கூடிய பிரதேசமாகும்.

இப்பகுதிக்குக் கடல் வழியான பாதைகள் இல்லாததால் வாகரைப் பகுதியிலேயே விநியோகத்திற்கும் இடம் மாற்றத்திற்கும் இப்பிரதேசம் தங்கியுள்ளது.

இப்பகுதியின் முக்கியத்துவம் யாதெனில் அடர்ந்த பரந்த காட்டுப் பிரதேசமாக இது திகழ்வதாகும். பெரியளவில் தளங்களை அமைப்பதற்கும், விநியோக மையங்கள், பயிற்சி முகாம்கள், மருத்துவ சிகிச்சைகள் வழங்குதல் போன்றவற்றுக்கும் இப்பகுதி மிகப் பொருத்தப்பாடுடையது.

இராணுவத்தினர் இப்பகுதியைச் சில காரணங்களுக்காக 'தொப்பிகல' காட்டுப்பகுதி என அழைக்கப்ப்டுவதையே விரும்புகின்றனர். மாலுமிகளுக்கும், ஆழ்கடல் மீன் பிடிப்பவர்களுக்கும் முக்கியமான கடற்கரையோர இனங்காட்டும் பிரதேசமாக இப்பகுதி விளங்குகின்றது.

கிழக்குக் கடற்பிராந்தியத்திற் தமது பலத்தைக் கடற்புலிகள் விரிவாக்கிச் செல்லும் வழியிற் பெரியளவில் இராணுவத்துடனான சமர்களுக்கும் புடவைக்கட்டைத் தமது பூரண கட்டுப்பாட்டிற் புலிகள் வைத்திருக்க முனைகின்றனர்.
மகாவலித் திட்டத்தின் 'பி' பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இந்தப் பகுதி தமிழ் அரசியலில் உணர்ச்சியூட்டப்படக் கூடிய பிரதேசமாகும்.

இந்தப் பிரதேசமானது, பதுளை-செங்கலடி வீதியைத் தென் எல்லையாகவும், வாழைச்சேனை-பொலனறுவை வீதியை வடக்கு எல்லையாகவும் கொண்டுள்ளது.

தற்போது மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வடபுறமாக நுழைவதற்கு இவை முக்கிய வீதிகளாக இருக்கின்றன.

இந்த இரண்டு வீதிகளையும் இராணுவத்தின் கட்டுப்பாட்டிலிருந்து தளர்த்திக்கொள்வதற்குப் புலிகள் துரிதமாகவும், நேர்த்தியாகவும் செயற்பட்டு வருகின்றனர்.

இதன் காரணமாக இரண்டு ஆண்டுகளுக்குப் பின்னர் தினமும் பாதுகாப்பாக இந்த வீதிகளைப் புலிகள் கடந்து வருகின்றனர்.

மட்டக்களப்பின் தெற்குப்புறப் பகுதியிலும் இவ்வாறு மௌனமாகக் கிழிசல்கள் தலைதூக்குகின்றன.

இதன் மூலம் மட்டக்களப்பின் வடபகுதியில் அவர்களின் அதிகாரத்திலுள்ள வடமுனைப் பகுதியில் இராணுவத்தின் வலுவைச் சிதறடிப்பது புலிகளுக்கு இலகுவாகிறது.

நான்காவது பிரதேசம் கஞ்சி குடிச்சாறுப் பகுதியாகும். பத்தொன்பது விசேட அதிரடிப்படையினர் இங்கு புலிகளாற் கொல்லப்பட்டனர்.

இந்தப் பகுதி இந்திய அமைதிப்படையினராற் பயிற்சியளிக்கப்பட்டு ஆயுதங்கள் வழங்கப்பட்டிருந்த தமிழ்த் தேசிய இராணுவத்தை அகற்றியதும் புலிகளாற் கைப்பற்றப்பட்டது.

கிழக்கிற் புலிகளின் தந்திரோபாயம் குறுகிய காலப்பார்வைகளால் அவதானிக்கப்பட்டுள்ளது.

கட்டுமுறிவுக்குளம், தரவைக்குளம், வடமுனைப்பகுதிகளில் புலிகள் நடத்திய தாக்குதல்கள், சிறியளவிலான இராணுவ முகாம்களை மூட வேண்டிய அவசியம் பற்றித் தீவிரமாகக் கவனம் கொள்ள வைத்துள்ளன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவத்துடன் இயங்கும் முன்னாள் தமிழ்க்குழுக்களில் இருந்தவர்கள், 23 சிறிய இராணுவ முகாம்கள் மூடப்பட்டு-அவற்றிலுள்ள இராணுவத்தினர் பெரிய முகாம்களில் இணைக்கப்பட வேண்டுமெனக் கூறுகின்றனர்.

முகாம்களுக்கான விநியோகத்தைத் தடுத்துக் குறிப்பிட்ட பிரதேசங்களிலிருந்து படையினரை அகற்றுவதற்குப் புலிகள் கவனமாகத் திட்டமிடுகின்றனர்.

புல்மோட்டை, திரியாய் பகுதியிற் தற்காலிகமாகவேனும் புலிகள் தங்கள் அதிகாரத்தைக் காடுகளிலும் கரையோரப் பகுதிகளிலும் பெற்றுள்ளனர்.

கடலாலும், தரையாலும் கிழக்கிற்குச் செல்லும் முக்கியமான இப்பகுதியை மட்டுமன்றி, மணலாறு தொட்டு, கொக்கிளாய் வரையான நீண்ட தரைவழிப்பாதையொன்றைக் கிழக்கிற்குச் செல்வதற்குப் பெற்றுக் கொள்வதற்கேதுவாகத் தரைவழியாகவும் அழுத்தங்களைப் புலிகள் கொடுக்க ஆரம்பித்துள்ளனர்.

இரண்டாம் ஈழப்போரின் இறுதிக்கட்டத்தின் போதான கிளர்ச்சி எதிர்ப்பு நடவடிக்கைகளில் இராணுவம் கைக்கொண்ட அணுகுமுறையை மாற்றி-வடக்கிலும் இராணுவத்தினர் தமது மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்கு முற்பட வேண்டும்.

திரியாயின் மேற்குப்புறமாகப் பிரவேசிக்கும் புலிகளின் அணிகள்—தெற்குப்புறமாகச் சென்று ஓரிரு தினங்கள் ஓய்வெடுத்த பின்னர், கும்புறுப்பிட்டியின் மேற்கிலுள்ள அடர்ந்த காடுகள் வழியாகப் பேராறு பகுதிக்குள் வருகின்றன.
அல்லது திரியாயின் கிழக்குப் பகுதிக்குச் சென்று, தெற்காகத் திரும்பிப் புடவைக்கட்டைப் புலிகளின் அணிகள் அடைகின்றன.
சிறிய முசுலிம் கிராமமான இங்கிருந்து விரைவுப் படகுகளில் கிழக்கின் மற்றைய பகுதிகளுக்குப் பயணங்கள் தொடர்கின்றன.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இலட்சிய தீபங்கள்

1987 ஆம் ஆண்டு இந்நாளில் தான் கரும்புலி கப்டன் மில்லர் முதலாவது கரும்புலித் தாக்குதலை நெல்லியடி மகாவித்தியாலயத்தின் மீது நடத்தினான். அதன் பின்னர் தரையிலும் கடலிலுமெனக் கரும்புலிகள் உலகை அதிர்ச்சிக்குள் ஆழ்த்தினதும் சிறீலங்கா ஆயுதப்படையினரைக் கதிகலங்க வைத்ததுமான பல கரும்புலித் தாக்குதல்களை நடத்தியுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் ஒரு வலுவான போர் வடிவமாக மாறியுள்ள கரும்புலிகள் ஒரு சிறுபான்மை இனமாக இனஅழிவை எதிர் கொண்டுள்ள தமிழ் மக்கள் கூட்டத்தின் காப்பரணாக இன்று உருவாகி உள்ளார்கள்.

உலக விடுதலைப் போராட்ட அமைப்புக்களில் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கமானது தனித்துவமானது. அதன் வழிமுறைகளும் தனித்துவமானவை. இத் தனித்துவமே விடுதலைப் புலிகளின் வீரசாதனைகளுக்கும், உலகம் வியக்கும் அர்ப்பணிப்புக்களுக்கும், இராணுவ வெற்றிகளுக்கும் அடிப்படையாக உள்ளது.

விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பொறுத்து அனைவருமே கரும்புலிகள் போன்றவர்கள் தான். அவர்கள் எவ்வேளையிலும் தமது மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் தம் இன்னுயிரை ஈகம் செய்யத் தயாராகவே உள்ளனர். இவ்வாறு பல ஆயிரம் வீரர்கள் தம் இன்னுயிரை ஈகம் செய்தும் உள்ளனர். இந்த வகையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் ஈகத்திற்கு முன்னுதாரணமானவர்தான் என்றாலும், கரும்புலிகளின் ஈகமானது இவர்களில் இருந்தும் வேறுபட்டதாகும். குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட இலக்கில், தன்னுயிர் இழக்கப்படும் என்ற நிலையிலும் தமது இலட்சியம் குறிக்கோள் என்பனவற்றில் எதுவித தளம்பலும் இன்றி உறுதியுடன் செயற்படுபவனே கரும்புலியாவான்.

ஆனால் இதனைச் சாதாரண மனிதர்கள் எல்லோராலும் செய்துவிட முடியாது. இது அவரின் சிந்தனைக்கே அப்பாற்பட்டது. இதனைச் செய்வதற்கு மரணத்தை மிஞ்சிய ஆத்மீக பலமும், மனோதிடமும் தேவையாகும். இது மரணத்தை மறந்து தமது குறிக்கோளை அடைய முனையும் ஓர் இலட்சியவாதியின் உன்னத போராட்டமாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில் கரும்புலிகளின் சாதனை மகத்தானதாகும். அவர்கள் புரிந்த ஒவ்வொரு தாக்குதலிலும் சிறீலங்காவின் இராணுவ-இயந்திரம் ஆட்டம் கண்டது. அரசியல் வரலாறு பாதிப்பிற்குள்ளானது. அத்தோடு இது சிறீலங்கா அரசின் உள்நாட்டு அரசியலை மட்டும் பாதிப்பதாக அமையவில்லை. சிறீலங்கா அரசின் வெளியுறவுக் கொள்கையையே மாற்றியமைக்கும் சக்தி வாய்ந்ததாக இருந்தது.

இவ்வுன்னத தியாகத்திற்குத் தனியாக ஆண்கள் தான் உரியவர்கள் என்பதல்ல. பெண்கரும்புலிகள் கடற்பரப்பில் மேற்கொண்ட மகத்தான சாதனைகள் உலக இராணுவ வரலாற்றில் புறந்தள்ள முடியாத இடத்தைப் பிடித்துக் கொண்டவை. அதேவேளை, சிறீலங்கா கடற்படையின் நடவடிக்கைகளைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வர பெரும் பங்காற்றியவையும் ஆகும்.


இப்போராட்ட வடிவமானது உலகத்தைப் பொறுத்து தனித்துவமானது மட்டுமல்ல, அந்நியர்களினால் புரிந்து கொள்ள முடியாதவையும் ஆகும் கரும்புலிகளின் துணிவும், மனோபலமும், அர்ப்பணிப்பும் அவர்களின் சிந்தனைக்கு அப்பாற்பட்டதாகவே உள்ளது. சில ஆய்வாளர்கள் கரும்புலிகளுக்கு இம்மனோபலம் எங்கிருந்து கிடைக்கின்றது எனக் கண்டறியப் பெரும் ஆவலாய் உள்ளனர்.

ஆனால் கரும்புலிகளின் இம்மனோபலத்தை அந்நியர் எவராலும் புரிந்து கொள்ளவோ, விளங்கிக் கொள்ளவோ முடியாது. ஏனெனில் இது ஓரினத்தின் இலட்சியப் பயணத்தின் தூண்டுதலால் உருவானது. இது இம்மண்ணிற்கே உரியது. இது இம்மண்ணின் மைந்தர்களுக்கே உரிய தனித்துவமானது.

இத்தனித்துவமான பேராயுதமே, இன்று சிங்களப் பேரினவாதத்திலும் இருந்து தமிழ் மக்களைப் பாதுகாக்கும் முக்கிய ஆயுதமாயுள்ளது. கரும்புலிகள் எமது இனத்தின் தற்காப்புக் கவசங்கள், எமது போராட்டப் பாதையின் தடை நீக்கிகள், எதிரியின் படைபலத்தை மனோபலத்தால் உடைத்தெறியும் நெருப்பு மனிதர்கள்.

இவ்வாறாகக் கரும்புலிகள் மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் தமது சாவையே தம்மடியில் சுமந்து செல்லும் உன்னத புருஷர்கள். இவர்கள் அர்ப்பணிப்புக்களில் ஒப்புவமை அற்றவர்கள். மரணத்தை வென்ற இம்மாவீரர்கள் வணக்கத்திற்குரியவர்கள். தமிழினம் உள்ளவரை இவர்கள் நாமம் போற்றப்படும்.

**தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் கரும்புலிகள் நாளின்போது ஆற்றிய உரையிலிருந்து...**



## இலக்குத் தவறாத ஏவுகணைகள்



இவர்களின் உடல் என்ன
பிளாஸ்ரிக் c - 4ஆ? - அல்லது
'பென்ரலைற்' 'சக்கை'யா?
இல்லையே....
இவர்களின் நாடி நரம்புகள்
என்ன 'கோடெக்ஸ்' வயரா?
அல்லது கொழுத்தும் திரிகளா?

ஆனால்
இலக்குப்பிசகாத ஏவுகணைகள்!
கணப்பொழுதுக்குள்
காற்றாகிப்போகும்
உயர்சக்தி வெடிமருந்தின்
ஒரு புதிய வகை......

உணர்வும் உறுதியும் இவர்களுக்கு
உருக்கிரும்பாலே ஊற்றப்பட்டதல்ல
தேசத்தின் வேதனை கண்டு
மனம் பொறுக்காது பிறந்தவையே...
வாழ வழியின்றி எம்மினம்
வதைந்த நிலைகண்டு - தம்
எலும்பும் தசையுமே
ஈயக்குண்டாய் எதிரியை அழிக்க
தடமின்றி தம்மையே அழிக்கும்
தற்கொடை!

கு.அறிவுக்குமரன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இஸ்ரேல் நாட்டுக்கு வித்திட்ட பணம்



இரண்டாம் உலகப் போர்க் காலகட்டத்தின் போது, கிட்லரால் 60 இலட்சம் யூதர்கள் கொலலப்பட்டனர். இதன் பின்புதான் தாயகம் ஒன்றை அமைக்க வேண்டுமென்பதன் அவசியத்தை யூதஇனமும், உலகமும் உணர்ந்து கொண்டன. ஆனால் அதற்கு முன்பே உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் யூதர்கள் தமது மத நம்பிக்கையின் அடிப்படையில் 'வாக்களிக்கப்பட்ட பூமியான பாலஸ்தீனத்தில்' குடியேற ஆரம்பித்திருந்தனர். அப்போது பாலஸ்தீனத்தை ஆக்கிரமித்திருந்த பிரித்தானியரின் ஆயுத, யூத குடிவரவு தடைகளிற்கு மத்தியிலும் சுற்றிவர இருந்த அரபுநாடுகளின் அச்சுறுத்தல்களிற்கு இடையிலும் இஸ்ரேல் என்ற நாட்டை உருவாக்க யூதர்கள் கடுமையாகப் பாடுபட்டார்கள். எண்ணெய் வளமுள்ள செல்வந்த அரபுநாடுகளின் பெரும்படையணிகளுக்கு எதிராக யூதர்களிடமிருந்தது, புத்திக்கூர்மையும், பிடிவாதமான மனவுறுதியும், தளராத வீரமும்தான். அவர்களின் போராட்டத்திற்கு நிதி தேவைப்பட்டபோதெல்லாம் வெளிநாடுகளில் வசிக்கும் யூதர்கள் அள்ளி வழங்கினார்கள்.

1948ஆம் ஆண்டு பிறக்கவிருந்த இஸ்ரேல் என்ற நாட்டை கருவிலேயழிப்பதற்குச் சுற்றிவர இருந்த அரபுநாடுகள் தயாராக இருந்தன. தமது நாட்டைப் பாதுகாக்க, ஹகான்னா எனும் யூத இராணுவத்தைப் பலப்படுத்த பெருமளவு நிதி யூதர்களிற்குத் தேவைப்பட்டது. பெரும் நெருக்கடியான இந்த நேரத்தில்தான் 'கோல்டாமெயர்' எனும் புகழ்பெற்ற பெண்மணி யூதமக்களிடம் நிதி திரட்டுவதற்காக அமெரிக்கா சென்றார். பென்குரியன் எதிர்பார்த்தது 16 மில்லியன் டொலர் பணத்தையே. ஆனால், கோல்டாமெயர் என்ற பெண்மணியின் அற்புதமான செயற்பாட்டால் 50 மில்லியன் டொலர் பணத்தைப் பெறக்கூடியதாக இருந்தது. அப்பணத்தைப் பெறுவதற்காக கோல்டாமெயர் மேற்கொண்ட அமெரிக்கப் பயணத்தைத் தொடர்ந்து படியுங்கள்.

ஜனவரி மாதத்தில் ஒருநாள் மாலை, அவர்களுடைய பொருளாளரான எலியேசர் கப்ளன் என்பவரின் அறிக்கையைக் கேட்கும்படி அவர்கள் பணிக்கப்பட்டிருந்தனர். கப்ளன் அமெரிக்காவுக்கு நிதி திரட்டும் பயணமொன்றை மேற்கொண்டு விட்டுத் திரும்பியிருந்தார். அவர் நிதியின்றி வெறுங்கையோடு வந்திருந்தார். சீயோனிச இயக்கத்திற்கு இதுவரை காலமும் பாதுகாப்புச் சுவராக இருந்த அமெரிக்க யூத சமூகம், பாலஸ்தீனிய சகோதரரின் தொடர்ச்சியான வேண்டுகோள்களினால் மிகவும் சலிப்படைந்து போயிருக்கிறார்கள் என்று அவர் தெரிவித்தார். கசப்பான உண்மைக்கு முகம் கொடுக்கும் காலம் வந்துவிட்டதென கப்ளன் கூறினார். இனி வரவிருக்கும் நெருக்கடி மிகுந்த மாதங்களில் எச்சந்தர்ப்பத்திலும் அமெரிக்காவிலிருந்து ஐம்பது இலட்சம் அமெரிக்கன் டொலர்களுக்கு மேல் எதிர்பார்க்க முடியாது என்றும் அவர் கூறினார்.

கப்ளனைச் சூழ இருந்தவர்களை, அத்தொகையின் அளவு இடிபோலத் தாக்கியது. ஒருவர் பின் ஒருவராக அங்கிருந்தவர்களது பார்வை, கப்ளனின் அறிக்கையை, வெறுப்பை மறைக்கமுடியாத, பொறுமையீனத்துடன் அவதானிக்கும் அந்தத் தடித்த உருவத்தின்மீது விழுந்தது. டேவிற்-பென்-குரியன், கப்ளனின் அறிக்கையில் பொதிந்திருந்த விளைவுகளின் பயங்கரத் தாக்கத்தை மற்றவர்களைவிட நன்கு புரிந்து கொண்டிருந்தார். பிராக் நகருக்கு சுரிகுழல் துப்பாக்கிகள், இயந்திரத் துப்பாக்கிகள் ஆகியவற்றை வாங்கி வருவதற்காகத் தான் அனுப்பிய எகுட் அவ்ரில் அவற்றுடன் திரும்பி வந்துவிட்டால் பாலஸ்தீனிய அராபியர்களைத் தடுத்து நிறுத்தக்கூடியதாக இருக்கும். முறைமையாக அராபிய இராணுவங்களின் டாங்கிகள், ஆட்டிலறி பீரங்கிகள், விமானங்கள் ஆகியவற்றை யிசுவ் ஒரு நாள் நிச்சயமாகச் சந்திக்க வேண்டியேற்படும், அப்போது எவ்வளவு தைரியத்துடன் அவர்கள் போராடினாலும் அது பயனற்றதாகிவிடும். பென்-குரியன் ஒரு நவீன இராணுவத்திற்குத் தேவையான உபகரணங்கள் வழங்குவதற்குத் திட்டம் தீட்டியிருந்தார். இதைச் செயற்படுத்துவதற்கு, கப்ளன் குறிப்பிட்ட தொகையைப் போலக் குறைந்தது ஐந்து அல்லது ஆறு மடங்கு தொகை கூடுதலாகத் தேவைப்பட்டது. தனது இருக்கையில் இருந்து எழும்பிய பென்-குரியன் தன்னைச் சுற்றி அமர்ந்திருந்தவர்களைப் பார்த்து 'கப்ளனும் நானும் உடனடியாக அமெரிக்காவிற்குச் சென்று இங்குள்ள நிலைமை எவ்வளவு மோசமாக இருக்கின்றது என்பதை அமெரிக்கர்களுக்கு உணரச் செய்ய வேண்டும்' என்று தெரிவித்தார்.

*1948ஆம் ஆண்டு பிறக்கவிருந்த இஸ்ரேல் என்ற நாட்டை கருவிலேயழிப்பதற்குச் சுற்றிவர இருந்த அரபுநாடுகள் தயாராக இருந்தன. தமது நாட்டைப் பாதுகாக்க, ஹகான்னா எனும் யூத இராணுவத்தைப் பலப்படுத்த பெருமளவு நிதி யூதர்களிற்குத் தேவைப்பட்டது. பெரும் நெருக்கடியான இந்த நேரத்தில்தான் 'கோல்டாமெயர்' எனும் புகழ்பெற்ற பெண்மணி யூதமக்களிடம் நிதி திரட்டுவதற்காக அமெரிக்கா சென்றார்.*


அக்கணமே ஓர் சாந்தமான பெண்ணின் குரல் அவரைக் குறுக்கீடு செய்தது. அக்குரல், சீயோனிசத்தின் ஈடுபாடு காரணமாக முன்பு ஒரு தடவை அமெரிக்க மாகாணமான கொலராடோவின் டென்வர் நகரில் நிதி திரட்டிய ஒரு பெண்ணுடையதாகும்.

"நீங்கள் இங்கு செய்வதை என்னால் செய்யமுடியாது" என்று கோல்டாமெயர் பென்-குரியனிடம் கூறினார். "எப்படியாயினும், நீங்கள் அமெரிக்காவில் செய்ய விரும்புவதை என்னால் செய்யமுடியும். நீங்கள் இங்கே தங்கியிருங்கள். என்னை நிதிதிரட்ட அமெரிக்காவுக்குப் போகவிடுங்கள்" என்றார்.

பென்-குரியனின் முகம் கோபத்தால் சிவந்துவிட்டது. தனது பேச்சின் இடையே யாரும் குறுக்கிடுவதையோ, மறுத்துப் பேசுவதையோ அவர் விரும்புவதில்லை. இந்த விடயம் மிகவும் முக்கியம் வாய்ந்ததாகையால் தானும் கப்ளனும் போக வேண்டும் என்பதில் மிகவும் பிடிவாதமாக அவர் இருந்தார். மற்றைய முகவர்கள் கோல்டாமெயர் சொல்வதையே ஆதரித்தனர். இரண்டு நாட்களின் பின்னர் தான் அணிந்திருந்த இளவேனில் கால உடுப்புடனும் ஒரு கைப்பையுடனும் வேறு எந்தவிதமான பயணப் பைகளும் இல்லாமல் மிகவும் கடுமையான குளிர்கால இரவுநேரத்தில் அவர் நியூயோர்க் வந்திறங்கினார். கோல்டாமெயரின் பயணம் மிகவும் விரைவுபடுத்தப்பட்டதால் வாகன அணியில் ஜெருசலேமுக்கு அழைத்துச் சென்று, மாற்று உடை எடுப்பதற்குக்கூட அந்த அம்மையாருக்கு அவகாசம் கிடைக்கவில்லை. நியூயோர்க் நகரத்திற்குக் கோடிக்கணக்கான அமெரிக்க டொலர்களைத் தேடிவந்த அந்தப் பெண்ணின் பணப்பையில் அன்றைய மாலைப் பொழுதில் சரியாக பத்து டொலர்கள் தான் காணப்பட்டன. குழப்பத்திற்குள்ளான சுங்கப்பகுதி அதிகாரி, அவர் எவ்விதம் அமெரிக்காவில் தன்னைப் பராமரித்துக் கொள்வார் என்று வினவிய பொழுது, அவர் தன்னுடைய குடும்பத்தவர்கள் அங்கு இருப்பதாகப் பதிலளித்தார்.

*இன்னும் சில மாதங்களில் யூதநாடு பாலஸ்தினத்தில் தோன்றும். நாங்கள் அதன் பிறப்பிற்காகப் போராடுவோம். அது இயற்கை. அதற்காக எம் இரத்தத்தால் நாம் விலை கொடுப்போம். அது எமக்குச் சர்வ சாதாரணம். எங்களில் சிறந்தவர் பலர் மடிய நேரிடலாம். அது நிச்சயம். ஆனால் எங்களை ஆக்கிரமிப் போர் எவ்வளவு படைப்பலம், ஆட்பலத்துடன் வந்தாலும் எங்கள் மனவுறுதி தளர்ச்சி அடையாது. இதுவும் நிச்சயம் என்று அவர் எடுத்துக்கூறினார்.*

இரண்டு நாட்களுக்குப் பின்பு சிக்காக்கோவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில், சொற்பொழிவு மேடையில் நடுக்கத்துடன் காணப்பட்ட கோல்டாமெயர், அந்தப் புகழ்பெற்ற குடும்பத்தின் உறுப்பினர்கள் முன்னால் தான் நிற்பதை அவதானித்தார். அவர்கள் யூத சமாஜங்களின் மன்றத்தினுடைய தலைவர்களாவர். அவர்கள் அமெரிக்காவில் 48 மாநிலங்களிலிருந்தும் வந்திருந்தார்கள். அவர்களது கூட்டமும் கோல்டாமெயரின் வருகையும் ஓர் எதிர்பாராத நிகழ்வுப் பொருத்தமாகும். சிக்காக்கோவின் ஒரு விடுதி அறையில் கோல்டாமெயரின் முன்னே, யார் யாரிடம் நிதிஉதவி கோரவேண்டுமென்று அவர் அனுப்பப்பட்டிருந்தாரோ, அதே அமெரிக்க யூத சமூகத்தவரின் பொருளாதாரத் தலைவர்களில் பலர் அங்கு சமூகமளித்திருந்தனர்.




உக்ரேனைச் சேர்ந்த தச்சுத்தொழிலாளியின் மகளான அப்பெண்ணுக்கு அது ஒரு பயமுறுத்தும் சவாலாகவே தோன்றியது. 1938ஆம் ஆண்டுக்குப் பின்பு அமெரிக்காவிற்கு அப்பெண் போகவில்லை. இப்பெண்ணுடைய இதற்கு முந்திய பயணங்களில் அவருடன் சென்ற கூட்டாளிகள் அனைவரும், அர்ப்பணிப்புள்ள சீயோனிசவாதிகளும் அவரைப் போன்ற சமவுடைமைவாதிகளும் ஆவர். அமெரிக்க யூத எண்ணங்களின் முழுமையான பாரிய தோற்றத்துக்குத்தான் அப்போது அவர் முகம்கொடுத்தார். அதில் அநேகமானவர்கள் அப்பெண்ணுடைய சீயோனிச சித்தாந்தங்களுக்கு மாறான எண்ணங்களையுடையவர்களாகவும் அதுபற்றி எவ்வித அக்கறையற்றவர்களாகவும் இருந்தனர்.

நியூயோக் நகரத்திலுள்ள அப்பெண்ணுடைய தோழர்கள் இந்தக் கூட்டத்தை எதிர்கொள்வதைக் கைவிடும்படி அப்பெண்ணைக் கேட்டனர். இந்த மன்றத்தின் தலைமைத்துவம் சியோனிசச் சார்புடையது அல்ல. அதன் உறுப்பினர்கள் தங்களுடைய சொந்த அமெரிக்க நிறுவனங்களுக்கு, வைத்தியசாலைகளுக்கு,

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அமெரிக்க யூதர்களின்

செபக்கூடங்களுக்கு, பண்பாட்டு நிலையங்களுக்கு நிதி உதவி செய்யவேண்டிய அழுத்தத்திற்கு உட்பட்டிருக்கிறார்கள். கப்ளன் கண்டுபிடித்தது போலவே அவர்கள் வெளிநாட்டிலிருந்து நிதி உதவி வேண்டுகோள்களைக் கேட்டுச் சலிப்படைகிறவர்களாக இருந்தார்கள்.

ஆயினும் கோல்டாமெயர் பிடிவாதமாக இருந்தார். சிக்காக்கோவிலுள்ள ஐக்கிய யூத மேன்முறையீட்டு அமைப்பின் இயக்குனரான கென்றி மொன்ரெர் என்பவருக்கு அந்தக் கூட்டத்துக்கான பேச்சாளர்களின் பட்டியல் ஏற்கனவே தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் தொலைபேசி மூலம் தான் அங்கே நேரே புறப்பட்டு வருவதாகத் தெரிவித்தார். அதன் பின்பு அமெரிக்காவின் குளிர்காலத்தைத் தாங்குவதற்காக ஒரு 'கோட்' மாத்திரம் வாங்கிவிட்டு உடனே சிக்காக்கோ நகருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

> 'ஆக்கிரமிப்பாளர்களின் பிரங்கிகளுக்கு முகம்கொடுக்கூடிய கனரக ஆயுதங்களைப் பெற இருபத்தைந்து அல்லது முப்பது மில்லியன் டொலர்கள் தேவை. என் நண்பர்களே. நாங்கள் மிகக் குறுகிய நிகழ்காலத்தில் வாழ்கிறோம். நான் இதைச் சொல்லும்போது உடனடியாக இந்த நிதி தேவைப்படுகிறது. அதன் கருத்து அடுத்த மாதமல்ல. அதற்கடுத்த மாதமல்ல, உடனடியாகத் தற்பொழுதே வேண்டும் என்பதுதான்."

அப்போது அறிவிப்பாளர் தனது பெயரை வாசிப்பதைக் கோல்டாமெயர் கேட்டார். மிகவும் எளிமையான, சாதாரணமான அவர் உருவம் மேடையை நோக்கிச் சென்றபொழுது, கூட்டத்திலிருந்த ஒருவர், 'பைபிளில் வரும் பெண்மணி போல் இருக்கிறாள்' என்று முணுமுணுத்தார். எதுவித தயாரிப்புக் குறிப்புகளுமின்றி 'ஜெருசலேத்தின் தூதுவர்' வந்து பேசத் தொடங்கினார்.

'நீங்கள் என்னை நம்பவேண்டும். நான் அமெரிக்காவுக்கு வந்ததன் முக்கிய நோக்கம் பூமித்தாயின் மடியிலிருந்த ஏழுஇலட்சம் யூதர்கள் துடைக்கப்படுவதைத் தடுப்பதற்கு மட்டுமல்ல, கடந்த காலங்களில் யூத இனத்தவர்கள் அறுபது இலட்சம் மக்களை இழந்துவிட்டனர். அத்துடன் மேலும் ஏழு இலட்சம் யூதர்கள் உயிராபத்துக்குள்ளாகியிருக்கின்றனர் என்பதை உலக யூத மக்களுக்கு நினைவூட்டுவது எங்களுடைய கடமை என்று கருதுகிறேன். ஆனால் விடயம் இதுவல்ல, இந்த ஏழு இலட்சம் யூதர்கள் தப்பிப் பிழைத்தால், உலகில் உள்ள ஏனைய யூதர்களும் அவர்களுடன் சேர்ந்து தப்பிப் பிழைப்பார்கள். மேலும் அவர்களுடைய விடுதலை எக்காலத்திற்கும் உறுதிப்படுத்தப்பட்டுவிடும். அவர்கள் காப்பாற்றப்படாவிட்டால், பல நூற்றாண்டுகளுக்கு யூத மக்கள் இருக்கமாட்டார்கள் என்பதிற் சிறிதளவே, சந்தேகம் இருக்க முடியும். யூத நாடே இருக்கமாட்டாது. மேலும் எங்களுடைய எல்லா நம்பிக்கைகளும் சிதறடிக்கப்பட்டுவிடும்'.

'இன்னும் சில மாதங்களில் யூதநாடு பாலஸ்தீனத்தில் தோன்றும். நாங்கள் அதன் பிறப்பிற்காகப் போராடுவோம். அது இயற்கை. அதற்காக எம் இரத்தத்தால் நாம் விலை கொடுப்போம். அது எமக்குச் சர்வ சாதாரணம். எங்களில் சிறந்தவர் பலர் மடிய நேரிடலாம். அது நிச்சயம். ஆனால் எங்களை ஆக்கிரமிப்போர் எவ்வளவு படைப்பலம், ஆட்பலத்துடன் வந்தாலும் எங்கள் மனவுறுதி தளர்ச்சி அடையாது. இதுவும் நிச்சயம்' என்று அவர் எடுத்துக்கூறினார்.




'ஆயினும் அந்த ஆக்கிரமிப்பாளர்கள் பீரங்கிகளுடனும், கவசவாகனங்களுடனும் வருவார்கள். அந்த ஆயுதங்களுக்கு முன்னால், விரைவாக அன்றேல் தாமதமாக, எங்கள் துணிவு அர்த்தமற்றதாகிப் போய்விடும். ஏனெனில் அதற்குள் நாங்கள் நிலைபெற முடியாமல் அழிந்துவிடுவோம்' இவ்வாறு அவர் எச்சரிக்கை விடுத்தார்.

'ஆக்கிரமிப்பாளர்களின் பீரங்கிகளுக்கு முகம்கொடுக்கக்கூடிய கனரக ஆயுதங்களைப் பெற இருபத்தைந்து அல்லது முப்பது மில்லியன் டொலர்கள் தேவை. என் நண்பர்களே, நாங்கள் மிகக் குறுகிய நிகழ்காலத்தில் வாழ்கிறோம். நான் இதைச் சொல்லும்போது உடனடியாக இந்த நிதி தேவைப்படுகிறது. அதன் கருத்து அடுத்த மாதமல்ல, அதற்கடுத்த மாதமல்ல, உடனடியாகத் தற்பொழுதே வேண்டும் என்பதுதான்.'

'எங்கள் போராட்டத்தைத் தொடர்வதா அல்லது விடுவதா என்று முடிவு செய்வது உங்கள் கடமையல்ல. நாங்கள் போராடியே தீருவோம்., பாலஸ்தீனிய யூத சமூகத்தவர் ஜெருசலேம் முப்தியின் முன்னால் வெள்ளைக்கொடியை ஒருபோதும் ஏற்ற விடமாட்டார்கள்— ஆனால் நீங்கள் ஒரு முடிவு செய்யலாம். அதாவது வெற்றி எங்களுடையதாக இருக்கவேண்டுமா அல்லது முப்தியினுடையதாக இருக்கவேண்டுமா என்பதைத் தீர்மானிக்கலாம்' இவ்வாறு கோல்டாமெயர் கூறிமுடித்தார்.

கூட்டத்தவர் மத்தியில் அமைதி நிலவியது. ஒரு கணம் கோல்டாமெயர் தான் தோல்வியைத் தழுவியதாகவே நினைத்தார். அதன்பின் முழு அவையினரும் - ஆண்களும, பெண்களும் - செவிடுபடும்படியான ஆரவார அலைமோதலுடன் எழுந்தார்கள். அதன் எதிரொலி உணவு அறையூடாக ஒலித்துக் கொண்டிருந்த. அதேவேளை, விரும்பிப் பணம் தருவோரில் முதற்பகுதியினர் மேடையிலிருந்து முண்டியடித்துத் தங்கள் நன்கொடைக்கான வாக்குறுதிகளைக் கொடுத்தார்கள். கோப்பி வழங்கப்படுவதற்கு முன்பு பத்துஇலட்சத்துக்கு மேற்பட்ட டொலர்கள் கோல்டாவுக்கு வாக்குறுதியளிக்கப்பட்டன. அது இதற்கு முன்பு இல்லாத ஒரு முன்மாதிரியாக, உடனடிப் பணமாகக் கிடைக்கக் கூடியதாக இருந்தது. ஆண்கள் தங்கள் வங்கியாளர்களைத் தொலைபேசியில் அழைத்துத் தங்கள் பெயரிற் பெறக்கூடிய கடன் தொகைகளை உறுதிப்படுத்திக்கொண்டார்கள். அந்தக் கடன் தொகை தமது சமூகத்திவர்களிடம் பின்பு பெற்றுக்கொள்ளும் உதவித் தொகைகளையும் சேர்த்துக்கொண்டதாக இருந்தது. அந்த நம்பமுடியாத நண்பகல் வேளை முடிந்தபோது, கோல்டாமெயர், பென்குரியனுக்குத் தனது உறுதிப்பாடான 'இருபத்தைந்து ஸ்ரீபன்ஸ்' (250 இலட்சம் டொலர்களை) தன்னாற் திரட்டமுடியும் என்று தந்தி கொடுத்தார். (அவர்கள் தெரிந்து எடுத்திருந்த சமிஞைப் பெயரான 'ஸ்ரீபன்ஸ்' அமெரிக்காவின் சீயோனிசத் தலைவர் ராபி ஸ்ரீபன் எஸ். வைஸன் பெயரை அடிப்படையாகக் கொண்டது.)

கோல்டாவினது சிக்காக்கோ வெற்றியினால் அதிர்ச்சியடைந்த அமெரிக்க சீயோனிசத் தலைமைத்துவம் அவரை நாட்டைச் சுற்றிச் சுற்றுலா போகும்படி தூண்டியது. கென்றி மொகன்தா என்ற பீராங்கிலின் ட ரூஸ்வெஸ்ட் அரசின் முன்னாள் திறைசேரியின் செயலாளரது துணையுடன் களைப்புத் தரக்கூடிய ஒரு பயணத்தைக் கோல்டா மேற்கொண்டார். ஒருநாளுக்கு மூன்று, நான்கு தடவை அவர் பேச வேண்டியிருந்தது. நகரத்துக்கு நகரம் தனது புனிதப் பயணத்தைத் தொடர்ந்தார். ஒவ்வொரு சபையினர் முன்பாகவும் தனது தத்ரூபமான வேண்டுகோளைப் புதுப்பித்துக் கூறினார். சிக்காக்கோவில் கிடைத்த உடனடியான திணறடிக்கும், தாராராளமான விளைபயனையே எல்லா இடங்களிலும் அவர் பெற்றுக் கொண்டார். ஒவ்வொரு தரிப்பிடத்திலுமிருந்து ரெல் அவிவிற்கு நேரத்துக்கு, நேரம் அன்றைய 'ஸ்ரீபன்ஸ்' திரட்டுதல் பற்றித் தந்தி கொடுக்கப்பட்டது. வேறு தந்திகளும் நேரத்துக்கு நேரம் அவரது உணவுவிடுதி அறையிலிருந்து கொடுக்கப்பட்டது. பிராக்கிலிருந்த எகுட் அவ்ரிலுக்கும், அன்ட்வேப்பிலிருந்த சீயேல் பெடமானுக்கும் யூத இராணுவத்திற்குத் தேவையான பொருட்களை வாங்குவதில் ஈடுபட்டிருந்த வேறுபலருக்கும் அந்தத் தந்திகள் அனுப்பப்பட்டன. அவர்களுக்கு மீண்டும் நம்பிக்கையூட்டும் செய்தியை அந்த மனிதர்கள் அத்தந்திகளின்மூலம் பெறக்கூடியதாக இருந்தது. வங்கி வைப்பு மாற்றங்கள் பற்றிய விபரங்களே இவை. இது அவர்களின் கொள்வனவுக்கு உதவியாக இருக்கும்.

ஒரே தடவை மட்டும் அவர் தனது அசாதாரண யாத்திரையிற் தட்டுத் தடுமாறினார். அது புளோறிடாவின் 'பாம் பீச்சில்' ஆகும். தனக்கு முன்பாக இரவுணவு அருந்த வந்திருந்த மிக நாகரிகமான கூட்டத்தை நோக்கியபோது, அவர்களின் அணிகலன்கள், விலங்குகளின் உரோமங்களாலான கம்பளி ஆடைகள், விருந்துச்சாலையிற் சாளரத்தினூடாக நிலா வெளிச்சத்திற் தெரிந்த கடல், இவையனைத்தையும் பார்த்தபோது திடீரென்று யூதேய மலைகளில் அன்று இரவு குளிரில் நடுங்கும் தனது ககான்னா போர்வீரர்களை அவர் நினைவுகூர்ந்தார். பால் கலக்காத கோப்பியை அருந்தியவண்ணம் இருந்தவருக்கு தான் இருக்கும் விருந்துச்சாலையின் காட்சிக்கும் மனதில் எழுந்த தனது போர்வீரர்களுடைய காட்சிக்கும் இடையிலான முரண்பாடானது அவரது கண்களில் நீரை நிரப்பியது. இந்த மக்கள் போராட்டத்தைப் பற்றிக் கேட்கவோ, பாலஸ்தீனத்தின் மரணங்களைப் பற்றி அறியவோ விரும்பமாட்டார்கள் என்று அவர் நினைத்தார். ஆனால் அதை அவர்கள் உணர்ந்தார்கள். அந்த மாலை முடிவதற்குட் பாம்பீச் மிகுந்த உணர்ச்சியோடு பதினைந்து இலட்சம் டொலர்களை உறுதிப்படுத்தியது. அதனைக்கொண்டு ககான்னாவின் ஒவ்வொரு போர்வீரருக்கும் ஒரு குளிர்கால மேற்கோட்டை அவர் வாங்கக் கூடியதாக இருக்கும்.

ஜனவரி மாத்தின் கசப்பான குளிர்கால இரவில் அமெரிக்காவிற் பத்து டொலர்கள் பையில் இருக்க வந்திறங்கிய அந்தப் பெண் ஐந்நூறு இலட்சம் (50 மில்லியன்) டொலர்களுடன் வெளியேறினார். எலிசர் கப்ளன் குறிப்பிட்டதிலும் பத்து மடங்கு அதிகமானதாகவும்,

> 'எங்கள் போராட்டத்தைத் தொடர்வதா அல்லது விடுவதா என்று முடிவு செய்வது உங்கள் கடமையல்ல. நாங்கள் போராடியே தீருவோம். பாலஸ்தீனிய யூத சமூகத்தவர் ஜெருசலேம் முப்தியின் முன்னால் வெள்ளைக்கொடியை ஒருபோதும் ஏற்ற விடமாட்டார்கள்....... ஆனால் நீங்கள் ஒரு முடிவு செய்யலாம். அதாவது வெற்றி எங்களுடையதாக இருக்கவேண்டுமா அல்லது முப்தியினுடையதாக இருக்கவேண்டுமா என்பதைத் தீர்மானிக்கலாம்"

டேவிற்-பென்-குரியன் கணிப்பீடு செய்ததிலும் பார்க்க மூன்று மடங்கு அதிகமானதாகவும், 1947ஆம் ஆண்டிற்கான சவுதி அரேபிய முழு எண்ணெய் வியாபார வருவாயைப்போல் 3 மடங்கு அதிகமானதாகவும் அந்தத் தொகை இருந்தது. அவரது வருகைக்காக லைடா விமானநிலையத்தில் (அவரிற்குப் பதிலாக அமெரிக்கா போகவிரும்பிய மனிதனாகிய) டேவிட்-பென்-குரியன் காத்திருந்தார். கோல்டாமெயரது அமெரிக்க சாதனையின் அளப்பரிய பரிமாணத்தையோ அல்லது சீயோனிச குறிக்கோளுக்கான அதன் முக்கியத்துவத்தையோ பென்-குரியனைப்போல வேறு எவரும் உணர்ந்திருக்கமாட்டார்கள். 'வரலாறு எழுதப்படும் நாளில் ஒரு யூதப் பெண்மணி யினாற்தான் யூத நாடு பிறந்தது என்று பதிவு செய்யப்படும். என்று அவர் பயபக்தியுடன் கோல்டாவிடம் கூறினார்.

நன்றி:- **ஓ ஜெருசலேம்!**

பிற்குறிப்பு- டேவிட்-பென்-குரியன் யூத நாட்டை உருவாக்கப் பாடுபட்டவரும், இஸ்ரேலின் முதலாவது பிரதம மந்திரியுமாவர்.

முப்தி - பாலஸ்தீனத்திலுள்ள அரபுக்களில் தன்னைத் தலைவராகக் காட்டிக்கொண்டவர்.

www.tamilarangam.net



# நுணுக்குக் காட்டி

❋ 'விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில், இராணுவத்திற்கும் அரசியல்துறைக்கும் பிரபாகரன் ஒருவரே பொறுப்பாக உள்ளார். இராணுவமும் அரசியலும் ஒன்றுடன் இன்னொன்று கைகோர்த்தபடி முன்நோக்கிச் செல்கின்றன. அவர் இராணுவ சமிக்ஞை காட்ட விரும்பினால், நாம் இழப்புக்களைப் பற்றிப் பேசவேண்டியதாகிறது'

'விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரையில் அவர்கள் தரமான இயக்கக் கட்டுக்கோப்புடன், திறமையான திட்டங்களுடன், போதுமான பயிற்சிகளுடன், சிறந்த தலைமைத்துவத்துடன் இருக்கின்றனர்'

-சண்டே லீடர் செவ்வியில்,

(முன்னாள் இராணுவ அதிகாரி)

மேஜர் ஜெனரல் தகநாயக்க

❋ 'பிரபாகரனைப் பாராட்டும் முறையில் நான் ஒன்றைக் கூறவேண்டும். இன்று அவர் பலரின் வீரர். பல தசாப்தங்களாக நிமிர்ந்து நிற்க முடியாதவர்கள் இன்று எழுந்து நிற்கிறார்கள். எப்படிப் போரிடுவது! எப்படி மடிவது என்று, பிரபாகரன் சிங்களவர்களுக்குக் கற்றுக்கொடுக்கிறார்'

-சுசில் முனசிங்க

(ஐ.தேக நாடாளுமன்ற உறுப்பினர்)

21-05-95 சண்டே ஐலண்ட் செவ்வியில்.

❋ 'எல். ரி. ரி. ஈயை நீங்கள் நம்பாவிட்டால், யாழ்ப்பாண மக்களிடமிருந்து எதை நீங்கள் எதிர்பார்க்கிறீர்கள்!

புலிகளை நம்பவில்லை என்று கூறுகிறீர்கள். பேச்சுவார்த்தையின்போது சனாதிபதி தன்னுடைய நிலைப்பாட்டை அடிக்கடி மாற்றிக்கொண்டதிலிருந்து, சமாதானப் பேச்சுவார்த்தையின்மேல் அரச எவ்வித அக்கறையும் காட்டவில்லை என்பதுதான் புலனாகின்றது.

வெளிநாட்டு அரசுகள் புலிகளைக் கண்டித்துள்ளதாக எமக்குச் சொல்லப்பட்டது. முன்பும் அவர்கள் கண்டிக்கத்தான் செய்தனர். 1988ஆம் ஆண்டும் 1990ஆம் ஆண்டும் அவர்கள் கண்டித்தனர், கண்டனங்களைப் பெற்றுக் கொள்ளலாம்: தேநீரையும் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் எமது இரத்தத்தை நாம் சிந்தியே ஆகவேண்டும். சில வெளிநாடுகளிடமிருந்து கண்டனங்களைப் பெற்றுக்கொள்வதற்காக வேண்டி நாம் எமது இரத்தத்தைச் சிந்த வேண்டியிருக்கிறது!'

-ரணில் விக்கிரமசிங்க

(எதிரக்கட்சித் தலைவர்)

சிறீலங்கா நாடாளுமன்றத்தில்,

'வீரகேசரி' (17-05-95).

❋ '1972 ஆம் ஆண்டின் சிறீலங்கா அரசமைப்பில் பௌத்த மதத்திற்கு மிக முக்கிய இடம் வழங்கப்பட்டது. இவ்வாறு பெரும்பான்மையினரின் மதத்திற்கு வழங்கப்பட்ட விசேட அந்தஸ்தினால் மற்ற மதங்கள் குறைவான அந்தஸ்துக்குத் தள்ளிவிடப்பட்டன'

-கலாநிதி கார்லோ பொன்சேகா

('சிலோன் டெய்லி நியூஸ்' கட்டுரையில்).

❋ 'கடந்தகால இரு இன முரண்பாட்டு நிகழ்வுகளில் முசலிம்களது பங்கும் கணிசமாக உள்ளதனை நேர்மையுடன் ஏற்றுக் கொள்ள வேண்டும். வட-கிழக்கில் முசலிம்கள் மிகுந்த ஐக்கியத்துடன் வாழ்ந்து வந்துள்ளனர். ஆயின், மிகத்திட்டவட்டமான முறையிலேயே இங்கு இன ஐக்கியம் சிதைக்கப்பட்டுள்ளது. முசலிம் அரசியல் தலைமைகளின் பேரினவாத சார்புநிலை, இவ்வாறான முரண்பாடுகளுக்கு முக்கியமானதொரு காரணமாகும். சகோதர சிறுபான்மைச் சமூகம் உயிர்வாழ்வதற்கான போராட்டத்தில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும்போது, அச் சிறுபான்மைச் சமூக இனக் கோரிக்கைகள் தொடர்பாக அசிரத்தையான அறிக்கைகள் விடுதல், சிங்களப் பேரினவாத அரசுக்கு நம்பகமாய் ஒத்துழைப்புக் கொடுத்தல் மற்றும் போராளிகளைக் காட்டிக்கொடுத்தல் போன்ற பிற்போக்குத்தனமான நடவடிக்கைகளை, முசலிம் அரசியல் தலைமைகள் வெற்றிகரமாக நடாத்தி முடித்துள்ளன. இச்சம்பவங்களுக்கு வெறுமனே ஐ.தே. கட்சி தலைமைகள் மட்டுமன்றி, முசலிம் காங்கிரஸ் தலைமைகளும் பொறுப்பான பங்கை வகித்துள்ளன. அரசியல் தலைமைகளின் இச்சம்பவங்களுக்கு அப்பால், முசலிம் சமூகத்தின் போராளிக் குழுக்கள் என்று தங்களைத் தாமே அடையாளப்படுத்த முனைந்த சிறு சிறு குழுக்களும் தமிழ் மக்கள் மீது வன்முறையைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளன. இக்குழுக்களுக்கு, சிங்கள அரசின் கூலிப்படைப் பிரிவினர் தாராளமாக ஆயுதங்களை வழங்கியதும் குறிப்பிடத்தக்கதே'

-ஆர். எம். இம்தியாஸ்

'சரிநிகர்' (மே 18-மே 31, 1995).

❋ 'போர் ஆரம்பமானவுடன் ஆக்ரோசமான தாக்குதலை அரச தொடங்கிய போதும் புலிகளின் அவ்ரோ விமானங்கள் மீதான ஏவுகணைத் தாக்குதல்கள் இந்த ஆக்ரோசத்தைத் தணித்துள்ளன. ஆயினும் இத்தாக்குதல் நடவடிக்கையின் பின், நிராயுதபாணிகளான மக்கள் மீது குண்டுகளையும், எறிகணைகளையும் வீசி, மனிதப் படுகொலைகளை ஆயுதப் படைகள் செய்துகொண்டிருந்தபோதும் சரி, அமெரிக்கா, இசரேல் போன்ற பயங்கரவாத அரசுகளுடன் நட்புக்கொண்டாடி, ஆயுதங்களும் பயிற்சிகளும் பெற்றுக்கொண்டபோதும் சரி, ஏகாதிபத்தியச் சதி குறித்து மௌனம் சாதித்த பலர், புலிகளின் கையில் ஏவுகணைகள் இருப்பதாக அறிந்ததும் அதனை, ஏகாதிபத்தியச் சதி என்றும், பிராந்தியப் பாதுகாப்புக்கான அச்சுறுத்தல் என்றும் கூறத் தொடங்கியுள்ளனர்.

புலிகள் பேச்சுவார்த்தையிலிருந்து முறித்துக்கொண்டது சரியா தவறா என்பதைவிட, புலிகள் அவ்வாறு முறித்துக்கொள்ள வேண்டுமென்ற உள் நோக்குடனேயே, அரச இயங்கியது என்ற உண்மை முக்கியமானது'

-ஆசிரியர் 'சரிநிகர்'

(மே 18 -மே 31-1995).

❋ இப்போது இப்பிரச்சினை வடக்கு-கிழக்குடன் மட்டும் வரையறுக்கப்பட்ட ஒரு பிரச்சினையாக இல்லை. பெருமளவு படையினர் கொல்லப்படும்போது, தென்னிலங்கையில் உள்ள ஒவ்வொரு வீட்டுக்கு முன்னாலும் இப்பிரச்சினை வந்துவிட்டது.

கொழும்பு இப்போது மிகவும் மோசமான ஒரு இடமாகிவிட்டது. வடக்கு-கிழக்கை விட கொழும்பு ஆபத்தான இடமாகிவிட்டது. நாட்டின் முக்கிய தலைவர்கள் பலர் வடக்கு-கிழக்கில் கொல்லப்படவில்லை. கொழும்பிலேயே கொல்லப்பட்டுள்ளனர்.'

-எம்.எச்.எம். அசுரப்

(அமைச்சர்)

'தினகரன்' (27-05-95).

❋ 'வடக்கிற்கான அத்தியாவசியப் பொருட்கள் மீதான தடை நீக்கப்படவேண்டும்: அவ்வாறானால், அரச தமிழ் மக்களுக்கு எதிராகப் போர் புரியவில்லை என்ற சனாதிபதி குமாரதுங்காவின் கூற்று உறுதிப்படுத்தப்படலாம்.'

-இனங்களுக்கிடையில் நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கம்

'வீரகேசரி' (02-06-95).

❋ 'புலிகளை இராணுவ ரீதியில் பலவீனப்படுத்திவிட்டால் தமிழ் மக்களின் அரசியல் உரிமைக் கோரிக்கைகளை உடைப்பில் போட்டுவிடுவது ஒன்றும் கஸ்டமல்ல என்பது அரசுக்குத் தெளிவாகத் தெரியும். இது புலிகளுக்கு மட்டுமல்ல, வடக்கு-கிழக்கு மக்களுக்குக்கூடத் தெரியும். இதனால்தான் பூநகரி முகாம் விவகாரத்தில் குறிப்பாக வடக்கு மக்களின் நிலைப்பாடு, புலிகள் பக்கமாக இருக்கிறது'

-நாசமறுப்பான்

(பத்தி எழுத்தாளர்)

'சரிநிகர்' (மார்ச்23 - ஏப்ரல்05 1995).

❋ 'இராணுவ முகாமாக மாற்றப்பட்ட நகரமாக மட்டக்களப்பு காணப்படுகிறது. அங்குள்ள அனைத்துப் பொலிஸ் நிலையங்களும் முட்கம்பி வேலிகளால் சூழப்பட்டுள்ளன. முக்கிய இடங்களில் எல்லாம் பாதுகாப்புக் காவலரண்கள் நிறுவப்பட்டுள்ளன.

இராணுவ வாகனங்கள் அங்கும் இங்குமாக ஓடித்திரிகின்றன. வீதியால் செல்பவர்கள் சந்திகளில் நிறுத்தப்பட்டு முகமூடிகளின் முன்னால் வரிசையாகச் செல்வதைக் காணமுடிகிறது.

படை அதிகாரிகள் பீதியுடன் நடமாடுகின்றனர். தற்போது நடக்கும் மோதல்களில் பெரும்பாலும் சிக்குண்டிருப்பது பொதுமக்களே ஆவர்.

கால் துண்டிக்கப்பட்ட நிலையில் பல பெண்கள் மட்டக்களப்பு மருத்துவமனையில் உள்ளனர். நிலக்கண்ணிகள் உள்ள பகுதிகளில் சோதனை நடாத்துவதற்கு படை அதிகாரிகள் தங்களைக் கேடயமாகப் பயன்படுத்தினர் என்று, அவர்கள் தெரிவித்தனர்.'

-ஜோர்ஜ் ஆர்னி

(பிபி.சி. கொழும்பு நிருபர்

'உதயன்' (17-06-95).

❋ 'விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனைக் கைதுசெய்து ஒப்படைக்குமாறு இந்தியா விடுத்துள்ள கோரிக்கை, சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க முடியாதவாறு முட்டுக்கட்டை நிலைமையை ஏற்படுத்தியுள்ளது'

-ஏ.சி.எஸ். கமீத்

(முன்னாள் வெளியுறவு அமைச்சர்)

சிறீலங்கா நாடாளுமன்றத்தில்,

'உதயன்' (22-06-95).

❋ பதுளை நகரில் கடந்த திங்களன்று நடந்த சமாதான ஊர்வலத்தில் பாதுகாப்பு நிதியத்துக்கு நிதி சேகரிக்கப்பட்டது. சமாதான ஊர்வலத்தில் சென்றவர்கள் உண்டியல்களைக் குலுக்கி நிதி சேகரித்தனர்.

சுமார் ஆயிரம் பேர் கலந்துகொண்ட இந்த ஊர்வலத்தில், பெரும்பான்மையாக மாணவர்களே காணப்பட்டனர். சமாதானத்தை வலியுறுத்தும் பதாதைகளும் ஊர்வலத்தில் எடுத்துச் செல்லப்பட்டன'

-'உதயன்' (22-06-95).

❋ 'சமாதானத்தின் பெயரால் மரணமும், அழிவுகளும் நாளாந்த நிகழ்வுகள் ஆகிவிட்டன'

-அதி. வண. ஜே. கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

(மட்டு - திருமலை ஆயர்)

'உதயன்' (22-06-95).

❋ 'எனது இனிய நண்பர் காலநிதி நீலன் திருச்செல்வம், மிக மூத்த இந்தியப் பிரமுகர் ஒருவரிடம், மூன்று மாதங்களுக்கு முன் இப்படிச் சொன்னதாகச் செய்தி: 'யாழ்ப்பாணமும், திருகோணமலையின் வடபுறமும் புலிகள் கட்டுப்பாட்டில் இருப்பதை இலங்கை அரச ஒப்புக்கொண்டு, அதன்பேரில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும்.'

அதோடு இதையும் சேர்த்துக் கொள்ள விரும்புகிறேன்: நிலத்திலும் கரையோர கடல்வழியிலும் புலிகள் போர்த் தாக்குதல் நடத்தியதை வைத்துப் பார்க்கையில், புலிகளின் கரங்கள் இலங்கையின் பெரும்பாலான பகுதிகள் வரை எட்டுகிறது என்பதை இலங்கை அரச உணரவேண்டும். தமிழரின் சுயாட்சிக் கோரிக்கையை ஏற்று, அதிகாரத்தை நியாயமாகப் பகிர்ந்தளிக்க இலங்கை அரச தவறினால் இனமோதல் தொடரும் என்பதையும் அனைவரும் உணர வேண்டும்.

யாழ்ப்பாணம், திருகோணமலை வாழ் தமிழர்கள் புலிகள் அமைப்பைப் போற்றுகிறார்கள்: தமிழர்களுக்கு புலிகளிடம் ஒரு பிடிப்பு ஏற்பட்டிருக்கின்றது.

ஆனால் இலங்கையின் நிலவரத்தில் மறுபடியும் நாம் (இந்தியா) போர்ரீதியாக இறங்கிவிடக்கூடாது: பட்டது போதும்.'

-ஜே.என். டிக்சிற்

(இந்திய ராஜதந்தரி)

'இந்தியா ருடே' (யூன் 6-20-1995).

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net



உலகின் முதலாவது மிகையொலி போர் விமானமான எவ்-104 ரக விமானங்கள் மிக உயரத்தில் பறக்கும் உளவு விமானமான யூ-2 விமானங்கள், சப்பசொனிக் டி-21, ஒலியின் வேகத்தைவிட 32 மடங்கு அதிக வேகமுடைய எஸ்ஆர்-71 எனப்படும் 'கரிக்குருவி' (Black Bird) விமானங்கள் என்பவை இந்த பர்பாஸ் நிலையத்தின் உற்பத்திகளாகும்.


# புலனாய்வில் சாதனை படைக்கும்

# அதிவேக உளவு விமானங்கள்



அமெரிக்காவின் ஆகாய விமான உற்பத்தியில் மிக இரகசியமாகப் பேணப்படும் ஆராய்ச்சி நிலையம் கலிபோர்னியாவிலுள்ள 'பர்பாஸ்' என்னுமிடத்தில் அமைந்துள்ளது. இங்கு-மிகப் பிரபலம் வாய்ந்த விமானங்கள் பல உற்பத்தியாகியுள்ளன. இதன் தலைமைப் பொறியியலாளரான கிளாரன்ஸ் ஜோன்ஸ் மற்றும் வெப்ப இயக்கவியல் நிபுணரும் இந்த இரகசிய ஆராய்ச்சி நிலையத்தின் தலைவருமான பென். ஆர். ரிச் என்பவர்களது வழிகாட்டலில் இவை உருவாகியுள்ளன.

உலகின் முதலாவது மிகையொலி போர் விமானமான எவ்-104 ரக விமானங்கள்



மிக உயரத்தில் பறக்கும் உளவு விமானமான யூ-2 விமானங்கள், சப்பசொனிக் டி-21, ஒலியின் வேகத்தைவிட 32 மடங்கு அதிக வேகமுடைய எஸ்ஆர்-71 எனப்படும் 'கரிக்குருவி' (Black Bird) விமானங்கள் என்பவை இந்த நிலையத்தின் உற்பத்திகளாகும். மிக வேகமாகச் செல்லும் இவ்விமானம் வளியுடனான உராய்வினால் வெப்பமேறுவதைத் தடுக்க இது வெப்பத்தால் பாதிக்கப்படாத டைட்டேனியம் உலோகத்தினால் உருவாக்கப்பட்டதாகும்.

இங்கு கடந்த இரண்டு தசாப்த காலத்துள் தயாரான எவ்-117 ஏ ஸ்டெல்த் தாக்குதல் விமானம், வளைகுடாப் போரில் பலத்த தாக்கங்களை ஏற்படுத்தியது.

டயமண்ட் வடிவமுடைய இந்த விமானங்கள் ஈராக் அதிபர் சதாம் குசையினுடைய முக்கிய நிலைகளை ராடர் திரையில் அகப்படாவண்ணம் சென்று தாக்கி அழித்தன.

**-ரகுராம்**



இந்த விமானங்கள் தமது பகிரங்க பறப்பை மேற்கொள்ளும் வரை அமெரிக்காவில் பல படைத்துறைத் தளபதிகள்கூட இந்த விமானங்களைப் பற்றி அறிந்திருக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது.

அமெரிக்க புலனாய்வாளர்களின் தகவலின்படி, 16000 ஏவுகணைகளையும், 3000 விமான எதிர்ப்பு நிலைகளையும் பாதுகாப்பை மீறி பாக்தாத்தை இந்த விமானங்கள் தாக்கின எனக் கூறப்படுகின்றது. ரசியா கூட மொஸ்கோவின் பாதுகாப்புக்காக பாக்தாத்தைப் போல இவ்வளவு தொகை ஏவுகணைகளை நிறுத்தியிருக்கவில்லை எனவும் அவர்கள் கூறுகின்றனர்.


போரின் ஆரம்பத்தில், பத்து எவ்-117 ஏ விமானங்கள் பாக்தாத்தின் இலக்குகளைத் தாக்கி அழித்தபோது, அவற்றை ஈராக்கியப் படையினரால் இனம் காணக்கூட இயலவில்லை.

இத்தகைய இரகசிய விமான உற்பத்தி பற்றி உலகளாவியரீதியில் இராணுவப் புலனாய்வாளர்கள் வியப்புத் தெரிவித்தே வருகின்றனர்.

இந்த இரகசிய உளவு விமானங்கள் பற்றி 1954 லிருந்து இந்த ஆராய்ச்சி நிலையத்தில் இணைந்து செயற்பட்டு பின்னர் 1975 ஆம் ஆண்டிலிருந்து 1991 ஆம் ஆண்டு வரை தலைவராகக் கடமையாற்றிய பென் ரிச் என்பவர் 'Skunk Works- A Personal Memory of my years' என்ற நூல் ஒன்றையும் எழுதியுள்ளார்.

1973 இல் இசுரேல், சிரியா, எகிப்து நாடுகள் சம்பந்தப்பட்டிருந்த யோம் கிப்பூர் (Yom Kippur) போரிற்குப் பின்னரே -ராடர் திரைக்கு அகப்படாத விமானங்களின் தேவை பற்றிய முக்கியத்துவம் எழுந்தது. ஏனெனில் அந்தப் போரிற்கான ராடர் திரைக்கு அகப்படாது செல்ல வேண்டுமென்பதற்காக தாழப்பறந்து சென்ற 109 இசுரேலிய விமானங்களை 18 நாட்களுக்குள் எதிரிகள் சுட்டு வீழ்த்தினர். இது அமெரிக்காவின் இராணுவத் தலைமையகமான பென்ரகனை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. இதனைத் தொடர்ந்து ராடர் திரைக்கு அகப்படாத விமானங்கள் வடிவமைக்கப்பட்டன.

இந்த வடிவமைப்பில் வெற்றிகரமாக உருவாக்கப்பட்ட எவ்-117 ஏ விமானங்கள் சோவியத்தின் ராடர்களிலிருந்து திறமையாகத் தப்பித்துக் கொண்டன. லொக்கீட்டிலிருந்து வெளியான இன்னுமொரு வெற்றிகரமான உருவாக்கம் யூ-2 உளவு விமானமாகும். சிஐஏக்காக



உருவாக்கப்பட்ட இந்த விமானம் தனியே இரகசியமாகப் புகைப்படங்கள் எடுப்பது மட்டுமன்றி- ராடர் மற்றும் இலத்திரனியல் சைகைகளை ஆராய்ந்தறிவதிலும் திறன் மிக்க செயற்பாடுகளைக் கொண்டது.

இந்த யூ-2 உளவு விமானங்கள் சீனாவிலும், கியூபாவிலும் சில முக்கிய இலக்குகளை உளவறிந்ததாகக் கூறப்படுகின்றது.

ஆனால் அமெரிக்க விமானப்படையின் உளவுவிமானத் தொடரில் யூ-2 உளவு விமானங்கள் ஓர் அத்திவாரமாகவே அமைந்தன.

இன்று இத்தகைய விமானங்கள் அமெரிக்காவுக்கு வெளியே தென்கொரியாவிலுள்ள ஓசான் தளத்திலும், சவூதி அரேபியாவிலுள்ள ராய்வ் (Taif) தளத்திலும், சைப்பிரசிலுள்ள பிரித்தானியாவின் றோயல் விமானப்படைத் தளத்திலும், பிரித்தானியாவின் அல்கன்பரியிலுள்ள றோயல் விமானப்படைத் தளத்திலும் தொழிற்படுகின்றன.

வளைகுடாப் போரிலும் யூ-2 விமானங்கள் பெரும் பங்காற்றின. யூ-2 விமானங்கள் பங்கு கொண்ட நடவடிக்கைகளுக்கு கட்டளை அதிகாரியாக இருந்த கேணல் ஆஸ்லேவேர்ட்டி (Col Ashlafefrty) குறிப்பிடுகையில், தொண்ணூறு வீதம் அமெரிக்க இராணுவம் பெற்ற தகவல்களை யூ-2 விமானங்களே தந்ததாகக் கூறுகிறார். இந்த தகவல்களின்படி நடந்த 80 சதவீதமான தாக்குதல்கள் வெற்றியைத் தந்ததாக அமெரிக்க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இன்று உலகில் நடைபெறும் போர் ஏற்பாடுகள், படை நகர்வுகள் மட்டுமன்றி, விஞ்ஞான ரீதியிலான தகவல்களை ஆராய்ந்தறிந்து கொள்ளவும் இந்த விமானங்கள் உதவி வருகிறது.

ஒட்டு மொத்தத்தில் அமெரிக்காவின் விமானப்படையின் வலுவிலும், சிஐஏயின் செயற்பாடுகளிலும், லொக்கீட் கம்பனியாரின் இந்த உளவு விமானத் தொழிற்சாலையின் பங்கு அளப்பரியது என்பது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டே உள்ளது.

**இன்று உலகில் நடைபெறும் போர் ஏற்பாடுகள், படை நகர்வுகள் மட்டுமன்றி விஞ்ஞான ரீதியிலான தகவல்களை ஆராய்ந்தறிந்து கொள்ளவும் இந்த விமானங்கள் உதவி வருகிறது. ஒட்டு மொத்தத்தில் அமெரிக்காவின் விமானப்படையின் வலுவிலும், சி.ஐ.ஏயின் செயற்பாடுகளிலும், லொக்கிட் கம்பனியாரின் இந்த உளவு விமானத் தொழிற்சாலையின் பங்கு அளப்பரியது.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தாயகத்தைச் சிதைக்கும் திட்டம்

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களால் ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் தாயகப் பிரதேசங்களைத் தாரைவார்த்துக் கொடுக்கத் தமிழர் விடுதலைக் கூட்டணி முன்வந்துள்ளது. அதற்கு விளக்கம் அளிப்பதற்கு அது தயாராக உள்ளது.

தமிழர் தேசிய இயக்கத் தலைவர் திரு. ப. நெடுமாறனுக்கு, தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரான சிவசிதம்பரம் எழுதிய கடிதத்திலிருந்து இதை அறிந்து கொள்ளக் கூடியதாக உள்ளது. இலங்கையில் தமிழர் தாயகப் பிரதேசத்தில் இருந்து அம்பாறைப் பகுதி முற்றாகப் பறிக்கப்படுவதற்குத் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம் இணங்கியது குறித்து தாம் ஆச்சரியப்படுவதாக திரு. ப. நெடுமாறன் தெரிவித்ததற்குப் பதிலாக, தாரை வார்த்துக் கொடுப்பதற்கு விளக்கம் அளித்துள்ளார். இவ்விளக்கத்தில், இன்றைய நிலையில் அம்பாறைப் பகுதியில் 97 வீதம் சிங்களவர் உள்ளனர். எனவே அம்பாறைப் பகுதியைத் தொடர்ந்தும் கிழக்கு மாகாணத்துடன் இருக்கவிட்டால், தமிழரின் தாயகப் பிரதிநிதித்துவம் வெகுவாகப் பாதிக்கப்படுமெனக் குறிப்பிட்டுள்ளார். இது தனது தனிப்பட்ட தீர்வு அல்ல எனவும், முன்னாள் தலைவர் அமிரின் காலத்தில் இருந்தே உள்ள எண்ணமும் எனச் சிவசிதம்பரம் தெரிவித்துள்ளார்.

இவ்விளக்கமானது, அம்பாறை மாவட்டத்திற்குக் கொடுக்கப்பட்டாலும் ஏனைய சிங்கள ஆக்கிரமிப்புப் பிரதேசங்களுக்கும் பொருத்தமானதாக எடுத்துக் கொள்ளலாம். ஏனைய பிரதேசங்கள் தொடர்பாக நெடுமாறன் அவர்களுக்கு பதில் அளிக்கப்படவில்லை என்பதே உண்மை நிலையாகும். 1977இல் தமிழர்கள் தனிநாட்டுக் கோரிக்கைக்கு வாக்களித்துள்ளார்கள் என்று எண்ணிய சிங்களத் தலைவர்கள், தமிழரின் தாயகத்தைப் பகுதி பகுதியாகப் பிரித்து எடுக்க முயன்றனர். அதற்கு விளக்கம்கூற முன்வந்து இருப்பது மட்டுமல்ல, கூட்டணியைப் பொறுத்து இதுமட்டும் தான் முரண்பாடு என்பதல்ல. கூட்டணியினர் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான இராணுவ நடவடிக்கைக்கு ஒத்துழைப்பு வழங்குதல் அவர்களின் நிலைப்பாட்டைத் தெளிவாக விளக்கக்கூடியதாக உள்ளது. ஆகையினால் தமிழர் தாயகத்தின் ஒரு பகுதியை அவர்கள் தாரைவார்ப்பதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. ஏனெனில் இராணுவ நடவடிக்கைமூலம் தமிழர் தாயகத்தைச் சிங்கள இராணுவம் முழுமையாக ஆக்கிரமித்திருப்பதற்கும், இனப்படுகொலைகளுக்கு ஆதரவளிப்பதற்கும் ஒரு பகுதியை விட்டுக்கொடுத்து அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும் தீர்மானித்திருப்பது ஆச்சரியமானதல்ல.

அம்பாறைப் பகுதியில் 97 வீதம் சிங்களவர் இன்று என்றால் அது எப்படி வந்தது?

திட்டமிட்ட வகையில் தமிழர் பிரதேசங்கள் மீது சிங்களக் குடியேற்றங்களைச் சிங்கள ஆட்சியாளர்கள் நடத்தியதினால் தான் இது உருவாகியது. ஆகையினால் திட்டமிட்ட வகையில் எமது பகுதியைக் கொள்ளை அடித்து, இன்று அதை ஆட்சி செய்பவன் என்பதால் பதில் பேச்சின்றி அப்பகுதியைத் தாரை வார்க்க முடியுமா?

ஒன்று அவனாக வெளியேற வேண்டும் அல்லது வெளியேற்றப்பட வேண்டும். இதற்கு சக்தியில்லாதவர்கள், வீட்டில் தனது ஆதிக்கம் செல்ல வேண்டுமென்பதற்காக கொள்ளைக்காரன் வந்து புகுந்ததும் முழு வீட்டையும் அவனிடத்தில் ஒப்படைக்க எண்ணுவது அப்பட்டமான மிகமோசமான காட்டிக்கொடுப்பாகும். இதை விடுத்து எமது முன்னைய தலைவர்கள் என்று சொல்லிக்கொண்டு அவர்கள் செய்த தவறான செயல்களையும் காரணம் சொல்வது கபடத்தனமாகும். முன்னைய தலைவர்களுக்கு, தமிழர்கள் தமது தாயகத்தையும், தம்மையும் பாதுகாக்குமாறு வாக்குகளை வழங்கினாரே தவிர, தாயகத்தைத் தாரைவார்க்கவோ அல்லது தமிழர்களைக் காட்டிக்கொடுக்கவோ உத்தரவு வழங்கவில்லை. ஆனால் இன்றைய கூட்டணித் தலைவர் பதிலானது முன்னைய தலைவர்கள் செய்த காட்டிக்கொடுப்பைத் தாமும் செய்தாலென்ன, அதன்மூலம் வரும் அதிகார சுகத்தைத் தாமும் ஒருமுறை அனுபவித்தால் என்ன! என்பது போன்று உள்ளது. நல்லவேளை, தமிழர் தாயகத்தைச் சிங்களப் பேரினவாதிகள் முற்றாக ஆக்கிரமிக்கவில்லை. அவ்வாறு ஆக்கிரமித்து இருந்தால், தமிழர் தாயகம் என்பதை அவர்கள் மறந்துவிட்டு, இலாபத்துக்கான அதிகாரப் பரவலாக்கம் என்பதைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பார்கள்.

# மற்றுமொரு அச்சுறுத்தல்

புலிகள் வேறு, தமிழர் வேறு எனக்கூறும் சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவும் அவரது அரசும், புலிகளின் தேவைகளை நிறைவு செய்யாமல் தமிழரின் தேவைகள் யாவும் நிறைவு செய்யப்படும் எனப் பிரச்சாரப்படுத்துகிறார். ஆனால் நடைமுறையில் தமிழர்களின் பொருண்மிய வாழ்க்கையைச் சீரழித்து அவர்களைப் பட்டினியின் கோரப்பிடியில் தள்ளும் வகையில் திட்டமிட்டு அரச செயல்படுகின்றது என்பதே உண்மை நிலையாகும். கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக போர் நடைபெற்றுக்கொண்டு இருந்தும், தற்போதைய நிலைபோன்று பொருண்மியத்தை முற்றாகக் குலைக்கவும், அத்தியாவசியத் தேவைகளும், சேவைகளும் கிடைக்கப்பெறாமல் தடைசெய்வது செயல்படுத்தப்படவில்லை என்றே கூறலாம். இத்திட்டத்தின் ஒரு அங்கமாக பொருண்மியத் தடையை கடந்த கால ஆட்சியில் ஐதேகட்சி அரச கொண்டு வந்தது. இதனால் பொருட்கள் தடை ஒன்றையும் கொண்டு வந்தது.

இந்நிலையானது தமிழர் பிரதேசத்தின் பொருண்மியத்தை கணிசமாகப் பாதிப்பதோடு அத்தியாவசியத் தேவைகள் என்பன மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் கிடைக்கக்கூடிய நிலையை உருவாக்கி இருந்தது. ஆயினும் தாமதமாகியும், பற்றாக்குறையாயினும் ஓரளவு அவற்றைப் பெறக்கூடியதாகவே இருந்தது என்றே கூறலாம். ஆனால் தற்பொழுது இந்நிலைமையானது முன்னரைவிட மிக மோசமான ஒரு கட்டத்தை அடைந்துள்ளது. சந்திரிகா அரசானது திட்டமிட்ட ரீதியில் அத்தியாவசியப் பொருட்கள் மற்றும், தேவைகள் என்பனவற்றை முழுமையாகத் தடுக்கவும் கட்டுப்படுத்தவும் செயல்பட்டு வருவதோடு பொருண்மிய நடவடிக்கைகளை முற்றாக அழிக்கும் நிலையை உருவாக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது. இந்த வகையில் முதலாவதாக அத்தியாவசியப் பொருள்களினதும் மருந்துப் பொருள்களினதும் விநியோகத்தை திட்டமிட்டு நிறுத்தி வைத்துள்ளதைக் குறிப்பிட முடியும். தொடக்கம் முதலே தாண்டிக்குளம் ஊடாக பொருள்களை மிகவும் குறைவாக அனுமதித்து வந்தது. தற்போது யாழ். குடாநாட்டுக்கு முக்கிய விநியோகப் பாதையாக இருந்த கப்பல் வழி விநியோகத்தை முற்றாகத் தடுக்கவோ அல்லது தாமதப்படுத்தவோ விரும்பிய சந்திரிகா அரசு, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்துடன் திட்டமிட்ட ரீதியில் விவகாரத்தை வளர்த்துக் கொண்டது. இதன்மூலம் கடல் வழி விநியோகத்தை முடக்கியுள்ளது.

இந்நிலையானது, போர்ச்சூழலில் அல்லலுறும் மக்களை மேலும் இன்னல்களுக்கு உள்ளாக்கும் நடவடிக்கையாகும். இதைத் தவிர ஏற்கனவே கடல்வலயத் தடை, எரிபொருள் தடை என்பவற்றால் பெரிதும் பாதிப்புக்குள்ளாகியுள்ள மக்களின் பொருண்மிய நடவடிக்கைகளை மேலும் முடக்கிவிடவும் சிறீலங்கா அரசு திட்டமிட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றது. இதில் முக்கியமாகக் குறிப்பிடக்கூடியது தடைசெய்யப்படாத தேவைகளை வடக்கே அனுப்ப அரசு போடும் முட்டுக்கட்டைகளாகும். இதன்மூலம் விவசாயப் பொருள்களின் உற்பத்திகளை பாதிப்படையச் செய்து பொருண்மியத்தை முடக்குவதோடு, இவ்வளவு காலம் ஒருவிதத்தில் இயங்கிவந்த நிலமையை உடைத்து மேலும் மேலும் அத்தியாவசியப் பொருள் தட்டுப்பாட்டை ஏற்படுத்துவதே அரசின் குறிக்கோளாகவுள்ளது. இதன் ஒரு வடிவமே கடந்த 3 மாதங்களாக முடக்கப்பட்டுள்ள தபால் விநியோகமாகும். இந் நடவடிக்கையானது வெளிநாடுகளில் இருந்து தமிழீழத்திற்கு வரும் நிதி உதவியை நிறுத்தி, இதன்மூலம் ஏனைய பொருண்மியத்தடை நடவடிக்கைகளினால் பாதிப்புக்குள்ளாகும் பொருண்மியத்தை முற்றாக இயங்கவிடாமல் அழிப்பது நோக்கமாகும். ஒட்டுமொத்தமாக பார்க்கப் போனால் அத்தியாவசிய தேவைகள் விநியோகத்தை முடக்குவதன் மூலமும், உற்பத்திகளை முடக்குவதன் மூலமும் பெரும் உணவு மற்றும் தேவைகளுக்கான நெருக்கடியை உருவாக்குவதோடு, தபால் விநியோகத் தடைகள் மூலம் 'நிதிப்பற்றாக்குறையையும் குறிப்பிட்ட அளவு ஏற்படுத்துவதில் அரசு முனைகின்றது. ஆனால் விடுதலைக்காகப் போராடும் ஒரு இனம் தம்மை அடிபணிய வைக்க அரசு அத்தியாவசியப் பொருள்களுக்கான தடையை எத்தனைமுறை முயன்றாலும் அவ் இனம் இறுதியில் தம் இலட்சியத்தில் வென்றே தீருவார்கள்.

ஆனால் தமிழ் மக்கள் தனது மக்கள் எனக் கூறும் சிறீலங்கா அரசு, தமிழ் மக்களின் தேவைகளை எந்த வகையிலாவது நிறைவு செய்தாக வேண்டும். இது அதன் கடமையாகும். இல்லாவிட்டால் தனது மக்கள், தமிழர் வேறு புலிகள் வேறு என்ற கோமாளித் தனமான பேச்சை விடுத்து, தமிழர் பிரதேசத்தில் இருந்து வெளியேறி விடவேண்டும்.

# வடபகுதியில் உணவு நெருக்கடி

வடபகுதியில், குறிப்பாக யாழ் குடாநாட்டில் பெரும் உணவு நெருக்கடி உருவாகும் சாத்தியப்பாடுகள் தென்படுகின்றன. ஏற்கனவே அத்தியாவசியப் பொருள்களுக்கு நெருக்கடி இருந்துவந்த போதும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்புக்குக் கீழ் கப்பல் போக்குவரத்து நடந்து கொண்டிருந்தபடியால் உணவு நெருக்கடி ஏற்படுவது தடுக்கப்பட்டுவந்தது என்று கூறலாம்.

ஆனால், சிறீலங்கா அரசு திட்டமிட்டு மேற்கொண்டு எடுத்த நடவடிக்கையினால் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கப்பல்களுக்கு வழங்கி வந்த பாதுகாப்பை விலக்கிக் கொள்ள வேண்டிவந்துள்ளது. இது குடாநாட்டிற்கு வரும் உணவு விநியோகத்தைப் பாதிக்கலாம். இந்நிலையானது, தற்செயலாக ஏற்பட்டதொன்றல்ல. தமிழரின் தேசிய இன விடுதலைப் போராட்டத்தைத் தோற்கடிக்கும் ஒரு வழிமுறையாக, சிறீலங்கா அரசு திட்டமிட்டு மேற்கொள்ளும் நடவடிக்கை இதுவாகும். சிறீலங்கா அரசைப் பொறுத்து இராணுவ நடவடிக்கைகளால் மட்டும் வெற்றி ஏற்படாது என்ற நிலை ஏற்படுவதால் அந்த நடவடிக்கைக்குத் துணையாக ஏனைய நடவடிக்கைகளை அது தொடங்கியுள்ளது. இதில் முக்கியமானதொன்றே பொருண்மியத் தடையாகும். கடந்த ஐதேக. அரசே இப்பொருண்மியத் தடையை அறிமுகம் செய்து வைத்தது. சந்திரிகா தலைமையிலான அரசும், அதைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதில் தீவிரமாக உள்ளது. ஒருவகையில் பார்க்கப்போனால் முன்னரைவிட சந்திரிகா அரசு, பொருண்மியத் தடையில் கடுமையான போக்கைக் கடைப்பிடிக்கின்றது என்றே கூறலாம். இதனொரு அம்சமாகவே தற்பொழுதுள்ள பொருண்மியத் தடையை மேலும் இறுக்கமானதாகவும், அதேவேளை அத்தியாவசியப் பொருள்களுக்கான தடையை அமுலாக்குவதிலும் சந்திரிகா அரசு முனைப்பாக உள்ளது. இந்த வகையிலேயே சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்பு இல்லாமற் செய்வதன்மூலம், அத்தியாவசியப் பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஒன்றை ஏற்படுத்த அரசு முனைகின்றது. இதே போன்ற நிலையையே இன்று மட்டக்களப்பு மாவட்டத்தின் வடபகுதியான வாகரைப் பிரதேசத்தில் அரசு கடைப்பிடிக்கின்றது. இராணுவத் தீர்வில் வெற்றி கொள்ளமுடியாத நிலையில் முற்றுமுழுதான பொருண்மியத் தடையை அரசு அமுல்படுத்த முயல்கின்றது. இதனால் அங்குள்ள மக்கள் சொல்லொணாத் துன்பத்தை அனுபவிக்க வேண்டியுள்ளது.

ஆனால், அரசு இந்த நடவடிக்கையைத் திடீரெனத் தொடங்கவில்லை. படிப்படியாகச் செய்வதால் பெரும் விமர்சனத்திற்கும், கண்டனத்திற்கும் உட்படாத வகையிலேயே செயற்படுத்தி வந்தது. முதலில் வடபகுதிக்கு வரும் பொருள்களின் அனுமதி படிப்படியாகக் குறைந்தது. பின்னர் சிலபொருள்களின் அனுமதியை முற்றாக நிறுத்தி, மேலும் அனுப்பப்படும் பொருள்களின் தொகையைக் குறைத்தது. தற்போதைய நடவடிக்கைகள் காரணமாக யாழ் செயலகம் உணவுப் பற்றாக்குறையைப் பற்றி சந்திரிகாவிற்கு அவசரக்கடிதம் எழுதவேண்டிய நிலைக்கு வந்துள்ளது.

இது சந்திரிகா அரசின் நடவடிக்கையாக இருப்பினும், யாழ் செயலக அதிகாரிகளின் அசமந்த நிலையும் இதற்கு ஒரு காரணம் என்றே கூறவேண்டும். முன்பு யாழ் குடாநாட்டில் உணவுத் தேவைகளைத் தாம் பூர்த்தி செய்வதாக அரசு பொய்ப்பிரச்சாரம் செய்து வந்தவேளை, அதனை மறுக்கவோ, உண்மை நிலையை வெளிப்படுத்தவோ அவர்கள் முன்வரவில்லை. உண்மையை வெளிப்படுத்தாமல், அரசின் நிலையிலேயே அக்கறை காட்டினர். தற்பொழுது கடைசிநிலையில், அதாவது 'தலைக்கு மேலே வெள்ளம்' வந்த பின்னர் அரசு வெளியிடும் செய்திகளை மறுப்பதிலும், சனாதிபதிக்கு அவசரச் செய்தி அனுப்புவதிலும் அக்கறை காட்டுகின்றனர். இது இவர்களின் அசட்டைத்தனமான நடவடிக்கையா? அல்லது உண்மையான தவிப்பா? என்ற கேள்வியே எழுகின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## மேஜர் காளி நினைவாக ....

(இவர் மன்னார் மாவட்டத்தில் 14.05.95
அன்று சிறீலங்கா இராணுவத்தினருடனான
நேரடி மோதலில் வீரச்சாவடைந்தார்)

தவளை பாய்ந்ததால்
சிங்கம் இறந்தது
புதிய வரலாற்றின் பாத்திரம் நீ
முள்ளிக் குளத்தில்
ஆனையிறவில்
சிலாவத்துறையில்
துள்ளி வந்த கைமுனுக்கள்
துடித்துப்போய் எரிந்தனர்.
புலிப்பாய்ச்சல் வேகத்தைப்
புரிய வைத்தவர்களில் ஒருவன் நீ!
யாழ்தேவியைத்
தரையிலே தடம்புரள
விட்டவர்கள்
தூளாகித் திக்கெட்டும்
திசைமாறிச் சிதறினர்
தண்டவாளந்
தவறியபேர்களின்
தொண்டையில் சாவை
இறுக்கிய
புலிகளின்
தாக்குதல்
அணிப்பொறுப்பாளன் நீ!
காதல் இருந்தாலும்
இலட்சியத் தீக்குள்ளே
கரைத்துவிட்டு
களத்திலே வெடியொலித்து
தமிழீழக் காதலைப்
பாடிய புலவன் நீ!
பூநகரி மண்
பெருமையாய்த் தோள்
தட்டும்
புதல்வன் நீ!
தளபதி லக்சுமன்
கண்களிற்கூட
கண்ணீர்ப் பூக்களைக்
கீறிச் சென்ற
களப்புற ஓவியன் நீ!
மேஜர் காளி!
நீ தான் மண்ணடியிற்
பொன் விழிகள்
மூடிக்கிடக்கின்றாயா?
அலையெறியும் பொறாஸ்கடல்
அமைதி கொண்டு உறங்குமா?
உறங்கும்!
ஏனென்றால்,
தோழா! நீ உறங்குகின்றாயே!
உன்னோடு இருந்தவர்கள்
பகிர்ந்தவர்கள் மகிழ்ந்தவர்கள்
பக்கத்திலே நிற்கிறோம்
உறங்கு!
உன் கனவுகளையும் காதலையும்
காற்றுக் கூடக் கலைக்காது
சூரிய ஒளித்திரளை
மேகம் மறைக்கலாம்
கரைக்காது!
அதனால்
உறங்கு தோழனே!
உனக்கும் சேர்த்து
இனிப் பாரம் சுமப்போம்!
எமக்குள்ளே நீ
உயிர்த்துக் கொண்டிருப்பதால்
மேஜர் காளி!
எரித்த சாம்பரிலே
உயிர்த்துச் சிறகடிக்கும்
பீனிக்ஸ் பறவை
இருக்கிறதாமே!
அது உன் உருவில்
எம் கண்ணில் தெரிகிறது.
தாய் வயிற்றிலிருந்து
தரையிலே விழுமுன்பு
முட்டையுடைந்து
வானத்தை நோக்கி
வீச்சாக எழுமாமே
'கோமோ' குஞ்சு
அது நீதானென நாமறிவோம்
உன் இலட்சியம் கீழே விழுவதில்லை!
உன் உயிர்ப்புக்கு என்றும் இறுதியில்லை!
நேசத்துக் குரியவனே!
மறைந்து நின்று மாயாவிகள்
குண்டிறைக்க
நிறைந்த மனத்தோடு நிலத்துக்கு
செந்நீரிறைத்தவனே!
உறங்கு!
உதய காலத்தில் மீண்டும் எழுப்புவோம்!!

-மன்னார் மாவட்டப் போராளிகள்

## கரும்புலிகள் நினைவலைகள்

— முருகனடியான்

கொடியதோர் நாகநஞ்சினை மாற்றக்
கொணர்ந்ததோர் மூலிகை என்கோ!
இடியொடு மின்னல் தாக்கவோர் குடையை
எடுத்தவன் பெருமையை என்கோ!
விடிவிலாத் துன்பம் சூழ்ந்திடத் தமிழர்
வெதும்பிடும் துயரது போக்க
அடிபணியாத தலைவனின் தகவால்
அணியெழக் கரும்புலி ஆனீர்
படிமிசை உங்கள் இடியதிர் வெல்லாம்
பார்த்தவர் மெய்விதிர்ப்புற்றார்
வெடிபொதியோடுவிரைந்துயிர் செகுக்கும்
விடுதலை உணர்வினை வியந்தார்
நெடிதுயர் வானும் நீள்தரை கடலும்
நினைத்துமே பார்த்திடா முனைப்பால்,
வடிவெடுத் தீழ மண்ணினில் வந்தீர்,
வரமெலாம் தந்துளீர் வாழ்க.

# விதைக்கப்பட்ட கவிதைகள்



## ஈடிணையில்லார் - இவர் சாகார்!

காவி உடுத்து, காடு திரிந்து,
காய்கனி உண்டார் — ஒரு சாரார்
மாளிகை கட்டி மாதொடு மக்கள்
நீழ இருந்தார் — ஒரு சாரார்
நீடுலகத்தில் வாழும் நினைப்பில்
நேரம் இழந்தார் — ஒரு சாரார்
நேசமும் பந்த பாசமும் உந்த
நீதி மறந்தார் — ஒரு சாரார்
போரென அஞ்சி நாடு துறந்து
போய் விடுகின்றார் — ஒரு சாரார்
போரிடை நின்று வாணிபம் செய்யும்
வாழ்வை மகிழ்ந்தார் — ஒரு சாரார்
மேடை அமர்ந்து மாலை அணிந்து
மேன்மை அடைந்தார் — ஒரு சாரார்
ஆணை செலுத்தி ஆரும் நடுங்க
ஆள நினைத்தார் — ஒரு சாரார்
தீயுமிழ் கின்ற ஊர்தி சுமந்து
தேகம் கரைந்தார் — சிலவீரர்
தேசவிலங்கு தூள்பட ஓங்கு
தீயினுள் பாய்ந்தார் — சிலவீரர்
ஆழ்கடலூடு ஓர்வெடியோடு
ஆவி இழந்தார் — சிலவீரர்
ஆரும் நெருங்கவே முடியாத
பேரரண் யாவும் பொடியாக
மோதி இனத்தின் மானம் நிறுத்தி
வீரன். நம் மில்லர். வெடியானான்!
மூலபலத்து ராணுவம் ஓடி
வீழ. ஒரு போர்க் கொடியானான்!
நோய் நொடி என்று பாயில் விழுந்து
போய் நலிவுண்டா இவர் போனார்?
நோவுகள் கண்டு ஓடிஒளிந்து
நூறு திசைக்கா இவர் போனார்?
ஆழி முழக்கம் நீழ ஒலிக்கும்
நாள் வரை வீரர்—இவர் சாகார்!
ஈழமுனைப்பு மூள எழுந்த
ஈடிணை யில்லார் — இவர் சாகார்

— நம்பியாரூரன்

நிலமும் துயரும் நினைத்து எழுந்தோம்
நெருப்பை நாம் உண்போம்-தமிழன்
இருப்புக் குயிர் துறப்போம்-எங்கள்
புயலைக் கடக்க பூமி எங்கும்
புலிகள் நாம் என்போம்-கரும்
புலிகள் நாம் என்போம்

தாயின் நெற்றித் திலக முத்தம்
தந்து விடை பெற்றோம்-உயிர்
சிந்தும் படை பெற்றோம்-இந்தப்
பாயும் புலியின் உயிரின் உயிலில்
பாதை புதிதாகும்-விடியல்
கீதை பதிவாகும்!

## கரும்புலிகள்

நெல்லியடியில் மில்லர் பதித்த
நிரைகள் நாம் ஆனோம்-இரும்புத்
திரைகள் உருக் கானோம்-எங்கள்
சொல்லில் எழுதும் தேசச் சுவடு
கல்லில் எழுத் தானோம்-நாம்
வில்லில் கணை ஆவோம்!

இந்த யுகமும் எந்த யுகமும்
என்றும் சரிதம் நாம்-அணு
குண்டின் உடலம் நாம்-எம்
தந்தை தாயர் இருப்பும் நிலமும்
தாங்க வெடியாவோம்-எமைக்
காணாப் பொடியாவோம்!

எங்கள் பாதம் பதித்த சுவடு
என்றும் அழியாது-யுகம்
நின்றும் அகலாது-நாம்
வெங்களத்தில் உயிர்வெடியாய்
விதைத்த புலிகளடா-எம்
சிதையும் உயிர்களடா!!

- புதியபாரதி

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# போராட்டம்...

பின்னடிப்பதற்குக் காரணம், அவர்கள் போராட்டத்தை வெறுக்கின்றார்கள் என்பதல்ல. அல்லது தமிழீழம் அமைவதை அவர்கள் விரும்பவில்லை என்பதும் அல்ல. அதற்கு உண்மையான காரணம், போர் தொடர்பான மிகைப்படுத்தப்பட்ட அச்சமும், தயக்கமும் மற்றும் எதிர்காலம் சம்பந்தப்பட்ட தன்னல எதிர்பார்ப்பும் போராட வேண்டிய தேவையை - அவசியத்தை அவர்களுக்குச் சரிவர உணர்த்தாமையும் ஆகும்.

பெரும்பாலான பெற்றோரும் மற்றும் குடும்பத்தின் மூத்தோரும் தமது பிள்ளைகளுக்கு அல்லது சகோதரங்களுக்கு போர் தொடர்பான அச்சத்தை ஊட்டி, அல்லது இயக்கத்தில் இணைந்தால் எதிர்கொள்ள வேண்டிய கஸ்டத்தைச் சொல்லி வெருட்டி, அவர்களைப் போராட்டத்தில் இணையவிடாது தடுக்க முயல்கின்றார்கள். அத்தோடு, தமிழரின் அவலநிலையை அவர்களுக்கு எடுத்துச்சொல்லி யதார்த்தத்தை அவர்களுக்குக் காட்டாமல் மறைப்பதுடன், சுயநல ஆசைகளை அவர்களது மனதில் விதைக்கவும் முயல்கின்றார்கள். இதனால், எமது இளம் சமூகத்தின் பெரும் பகுதியினர் உண்மை நிலையை உணராது இருளினுள் வைக்கப்பட்டுள்ளனர்.

*இந்த மண்ணின் இன்றைய நிலைபற்றி இந்த இளம் சமூகத்திற்கு விளக்கிக் கூறவேண்டிய வரலாற்றுக் கடமை. புலிகள் இயக்கத்திற்கு உண்டு. எமது இனம் சந்தித்து நிற்கும் அவல வாழ்வுபற்றி எதிரிப் படைகளின் அடக்குமுறை. பற்றி. அதில் இருந்து விடுபடுவதற்காக ஆயுதம் ஏந்த வேண்டிய அவசியம்பற்றி. எமது சமூகத்திற்கு விளக்கிச் சொல்ல வேண்டும். இந்தச் சரித்திரக் கடமையை நிறைவேற்ற ஒவ்வொரு கிராமம் கிராமமாக எமது போராளிகள் வரும்போது. பெரியவர்களின் தலையீடுகளால் அந்த இளம் சமூகத்தின் கணிசமான பகுதியை எம்மால் சந்திக்க முடியாமல் போகின்றது.*

ஆயினும், இந்த மண்ணின் இன்றைய நிலைபற்றி இந்த இளம் சமூகத்திற்கு விளக்கிக் கூறவேண்டிய வரலாற்றுக் கடமை, புலிகள் இயக்கத்திற்கு உண்டு. எமது இனம் சந்தித்து நிற்கும் அவல வாழ்வுபற்றி - எதிரிப் படைகளின் கொடூரமான அடக்குமுறை, அட்டூழியங்கள் பற்றி- அதில் இருந்து விடுபடுவதற்காக ஆயுதம் ஏந்த வேண்டிய அவசியம்பற்றி, எமது சமூகத்திற்கு விளக்கிச் சொல்ல வேண்டும். இந்தச் சரித்திரக் கடமையை நிறைவேற்ற ஒவ்வொரு கிராமம் கிராமமாக எமது போராளிகள் வரும்போது, பெரியவர்களின் தலையீடுகளால் அந்த இளம் சமூகத்தின் கணிசமான பகுதியை எம்மால் சந்திக்க முடியாமல் போகின்றது. அத்துடன், இந்த இளம் சமூகத்தின் கணிசமான பகுதி மாணவர் சமூகமாக விளங்குகின்றது. எனவேதான், இந்த இளம் சமூகம் சுதந்திரமாக ஒன்றுகூடும் இடங்களில் - பாடசாலை அல்லது தனியார் கல்வி நிலையங்கள் அல்லது பொது வீதிகளில் - அவர்களைச் சந்தித்து, இன்றைய யதார்த்தம் பற்றி எடுத்துச் சொல்லி, அவர்களுக்கு மறைக்கப்பட்ட மறுபக்கத்தைக் காட்டுவதுடன், அவர்களது தேசியக் கடமைபற்றியும் எமது கருத்துக்களைக் கூறுகின்றோம். எமது கருத்துக்களைச் செவிமடுத்து விழிப்படைந்த இளைஞர்- யுவதிகள் போராடவேண்டிய தேவையை உணர்ந்து இயக்கத்தில் இணைகின்றனர். தேசியத் தேவைகருதி நாங்களும் அதை ஊக்குவிக்கின்றோம். இதுதான் உண்மை.



போர் விமானங்களின் இரைச்சல்களையும், குண்டுச் சத்தங்களையும் அன்றாடம் கேட்டபடி - படுகொலைச் சம்பவங்களையும், இராணுவ வெறியாட்டச் செய்திகளையும் நாள்தோறும் அறிந்தபடி-அதற்குள் தமது பள்ளிப் படிப்பைத் தொடரும் எமது மாணவர்களுக்கு, போர்க்கால கருத்துரைகள் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்ற குற்றச்சாட்டை எவருமே ஏற்கமாட்டார்கள். தேவையானால் ஒரு விடயத்தை ஒப்புக்கொள்ளலாம். அதாவது, எமது கருத்துரைகளால் தெளிவடைந்து - யதார்த்த உலகைக் காணும் ஒரு மாணவன் அல்லது ஒரு மாணவி, தான் தேசத்திற்குச் செய்யவேண்டிய கடமை பற்றிச் சிந்திக்கும்போது, அந்த சிந்தனை அந்த மாணவரது மனதில் ஒரு தாக்கத்தை விளைவிக்கின்றது என்று ஏற்றுக்கொள்ளலாம். ஆனாலும் அந்த உயர்ந்த சிந்தனை அந்த மாணவரது கல்வியைக் குழப்புகின்றது என்று - குறுகிய வட்டத்திற்குள் வைத்துப்பார்த்து -தீர்ப்புக்கூற முடியாது.

எனவே, பாடசாலைகளிலோ அல்லது தனியார் கல்வி நிலையங்களிலோ 'போர்க்கால கருத்தரங்குகள்' நடாத்துவதைப் பலர் விமர்சிப்பதற்குக் காரணம், மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுகின்றது என்பதனால் அல்ல. மாறாக, எமது இளம் சமூகமானது சுதந்திரமாக ஒன்றுகூடி - தலையீடுகளின்றிச் சிந்தித்து முடிவெடுக்கக்கூடிய இத்தகைய இடங்களில், அந்த இளம் சமூகத்தைப் புலிவீரர்கள் சந்தித்துக் கருத்துரைகள் வழங்கி, போராட்டப் பாதையிலே அவர்களை இணைத்துக்கொள்ள முயல்கின்றார்கள் என்பதனாலேயே ஆகும்.

இதேவேளை, போரால் ஏற்பட்ட உயிரிழப்புக்களையும் - பொருள் அழிவுகளையும் - கல்வி, பொருண்மியத் துறைகளில் ஏற்பட்டுள்ள பின்னடைவுகளையும் சுட்டிக்காட்டும் சிலர், இதற்கெல்லாம் காரணம் இந்த விடுதலைப் போராட்டம்தான் என்று குற்றம் சுமத்தி - கொச்சைப்படுத்த முயல்கின்ற தன்மையையம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அத்துடன், இத்தகைய மனித அழிவுகளையும், பொருண்மியக் கல்விப் பின்னடைவுகளையும் கொண்ட தமிழீழம் தேவையா என்று, இடக்குத்தனமான கேள்வியையும் சிலர் எழுப்ப விரும்புகின்றனர்.

போர் என்பது உயிர் அழிவுகளையும் - பொருண்மிய நாசங்களையும் கொண்டு வருகின்றது என்பது உண்மைதான். ஆயினும் அழிவுகளுக்குப் பயந்து ஒரு தேசம் அல்லது ஒரு தேசிய இனம், தன் மீதான ஆக்கிரமிப்பைச் சகித்துக் கொண்டிருக்க முடியாது. அவ்விதம் சகித்துக்கொண்டு வாழவேண்டும் என்று கூறுபவர்கள், ஆக்கிரமிப்புவாதிகளின் அடிவருடிகளாகவே இருப்பர். அல்லது இனப்பற்று - சமூகப்பற்று அற்ற வெறும் உதிரிகளாகவே இருப்பர்.

இதேவேளை, உலகின் பல விடுதலைப் போராட்டங்களுடன் ஒப்பிடும்போது, எமது மண்ணில் ஏற்பட்டுள்ள உயிர்ச்சேதம் என்பது மிகக்குறைவு. வியட்னாம் விடுதலைப் போரிலும் - எரித்திரிய விடுதலைப் போரிலும் பல இலட்சம் மக்கள் பலியாகியுள்ளனர். சில விடுதலைப் போராட்டங்களில் பல்லாயிரம் மக்கள் பலியாகியிருந்தாலும், போராட்டம் வளர்ச்சியடையாது பின்னடைந்து கிடப்பதையும் காணக்கூடியதாக உள்ளது. ஆனால், எமது போராட்டம் அவ்வாறானதொன்று அல்ல.



ஆறு ஆண்டுகளே நடந்த இரண்டாம் உலகப் போரில், சோவியத்யூனியன் தனது மக்களில் இரண்டரைக் கோடிப் பேரை இழந்தது. இதேபோல அந்த உலகப்போரில் இலண்டன் நகர்மீது, ஜேர்மனிய விமானங்கள் நடாத்திய தொடர் விமானத் தாக்குதலில், ஒருநாள் மட்டும், ஆயிரத்து இருநூறு பேர் மாண்டனர். அத்துடன் ஒவ்வொரு இரவும் நடந்த கண்மூடித்தனமான விமானக் குண்டுவீச்சில், நாளொன்றுக்கு நூற்றுக்கும் மேற்பட்டோர் என்ற வீதத்தில் பொதுமக்கள் பலியாகியதுடன். இலண்டன் மாநகர் கற்குவியலாகவும் மாறியது. இந்த வகையில் சோவியத்யூனியன், பிரிட்டன் என்பவற்றைப்போல - யப்பான், சீனா, கொரியா, ஜேர்மனி மற்றும் பல நாடுகள் இரண்டாம் உலகப்போரில் சந்தித்த உயிர் - பொருள் இழப்புக்களுக்கு அப்பால், இன்று அடைந்துள்ள பாரிய பொருண்மிய முன்னேற்றத்தை நாம் மறுக்க முடியாது. இந்தத் தகவல்களின் மூலம், போர்செய்து அழிவுகளைச் சந்தித்தால்தான் ஒரு தேசம் முன்னேற்றமடையலாம் என்ற கருத்தை நாம் கூற வரவில்லை. மாறாக, போர் என்பது ஒரு தேசத்தின் எதிர்காலத்தை இருள்நிறைந்ததாக்கிவிடும் என்று பயமுறுத்துபவரின் கூற்றை மறுக்கவே, மேற்குறித்த உதாரணங்களைக் காட்டியுள்ளோம்.

*போர் என்பது உயிர் அழிவுகளையும் — பொருண்மிய நாசங்களையும் கொண்டு வருகின்றது என்பது உண்மைதான். ஆயினும் அழிவுகளுக்குப் பயந்து ஒரு தேசம் அல்லது ஒரு தேசிய இனம். தன் மீதான ஆக்கிரமிப்பைச் சகித்துக் கொண்டிருக்க முடியாது. அவ்விதம் சகித்துக்கொண்டு வாழவேண்டும் என்று கூறுபவர்கள். ஆக்கிரமிப்புவாதிகளின் அடிவருடிகளாகவே இருப்பர். அல்லது இனப்பற்று — சமூகப்பற்று அற்ற வெறும் உதிரிகளாகவே இருப்பர்.*

தமிழினத்தைப் பொறுத்தவரை, தற்போதைய போர் இனஅழிப்பிற்கு எதிரான ஒரு தற்காப்புப் போர் ஆகும். என்ன விலை கொடுத்தேனும் இந்தத் தற்காப்புப் போரை நாம் நடத்தியே ஆக வேண்டியுள்ளது. நாம் போரிலும் வெற்றிகளைக் குவித்தபடியே இருக்கின்றோம். ஆயினும் போரில் ஏற்படும் உயிரிழப்புக்களும் - அதனால் ஏற்படும் மானுட அவலங்களும் ஈடுசெய்யப்பட முடியாதவைதான். ஆயினும் பொருண்மிய, கல்வி இழப்புக்கள் என்பவை ஈடுசெய்யப்படக் கூடியவையே ஆகும். திறமையான தலைமைத்துவத்துடன் கூடிய தேசாபிமானங்கொண்ட ஒரு அரசு, இந்தப் பொருள் இழப்புக்களைத் துரிதகதியில் ஈடுசெய்துவிடும். யப்பானிலும், சீனாவிலும், ஜேர்மனியிலும், இங்கிலாந்திலும் இதுதான் நடந்துள்ளது.

எனவே, முதலில் எமது படைத்துறை ஆட்பலத்தை அதிகரித்து, போரை விரைவாக வெல்ல முயலுவோம். போரை வென்றால், தென்ஆசியாவின் சிறப்புமிக்க தேசமாக தமிழீழம் அமையும். இது உறுதி!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# கோடரிக் காம்பு

சிறு கதை

ஒவ்வொரு நாட்களையும் போலவே அன்றைய காலையும் விடிந்தது. நீண்ட இடைவெளியின் பின்னர் மழை துாறல்போடத் தொடங்கியிருந்தது.
கோடைவெயிலால் காய்ந்து போன நிலம் குளிர்ந்து போனதால் ஈரமண்ணின் வாசனை படுக்கையிலிருந்த ஜீவாவின் மூக்கை நெருடியது.
'இப்ப என்ன நேரம் இருக்கும்' என்று எண்ணியவாறே ஜீவா படுக்கையை விட்டு எழுந்தான். வழமைபோல் காலைக்கடன்களை முடித்து, உணவையும் முடித்துக்கொண்டு தனது கடமைக்குப் புறப்பட ஆயத்தமானான். ஏதோ ஒன்றை தவறவிட்டதாக அவனது புலன்கள் உணர்த்தவே, மளமளவென்று விடுதிக்குள் சென்று சிகரெட் பக்கெற் ஒன்றை எடுத்து பொக்கற்றுக்குள் திணித்துக் கொண்டான். காற்சட்டை பைக்குள் கையைநுளைத்து துழாவியவன் அங்கே 'லைட்டர்' இருப்பதை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டான். தனது கடமைக்குரிய 'பொயின்ரை' நோக்கி நடந்தான்.

மனோகரனை இராணுவச்சிப்பாய் ஒருவன் அடோ! நில்லு என்று தடுத்து வைத்தான். படபடக்கும் இதயத்துடன் நின்றுகொண்டிருந்தான் மனோகரன். பயம் அவனை முற்றாக ஆட்கொள்ள மெதுவாகத் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தான். அவனது மேனி எங்கும் நடுங்கத் தொடங்கியிருந்தது.
'என்ன அடோ முறைச்சுப்பாக்கிறது போடா அங்கே' ஒரு உலுக்கு உலுக்கி அவனைப்பிடித்துத்தள்ளி விட்டான். அந்தச் சிங்களச் சிப்பாய்.விழப்போனவன் ஒருவாறு சமாளித்துக் கொண்ட பொழுது மற்றொருவன் வந்து அவனை இழுத்துக்கொண்டு உள்ளே போனான்.

நேரம் சரியாக ஒன்பதுமணி இனி தடைமுகாமிற்குள் வடக்கே இருந்து வரும் மக்கள் பிரவேசிக்கும் நேரம் நெருங்கிவிட்டது. சாக்கு மூடைகளால் அடுக்கப்பட்டிருந்த பொயின்ருக்குள் கடமையிலிருந்த சிறீலங்காச்சிப்பாய் இவனைக்கண்டதும் என்ன ஐசே! இம்புட்டு நேரங்! என்று கூறி முகம்மலர வரவேற்றான். தனக்குப் பேச்சுத்துணைக்கு ஆள் கிடைத்துவிட்ட திருப்தி அவனுக்கு, பதிலுக்கு ஒரு புன்சிரிப்பை முகத்தில் தவழவிட்டான் ஜீவா.
சாரிசாரியாக மக்கள் தத்தம் பொதிகளுடன் வரிசைக்கிரமமாக நுழைந்துகொண்டிருந்தார்கள். ஜீவா, சாக்குமூடைகளின் மத்தியிலிருந்த துவாரத்தினூடாக பார்வையைச் செலுத்தினான். ஒரு குறிப்பிட்ட தொகையினர் உள்நுழைந்ததும் மிகுதிப்பேர் வெளியிலேயே தடுத்து நிறுத்தப்பட்டனர். உள்ளே வந்தவர்களின் பொதிகள் ஒவ்வொன்றாக பரிசோதிக்கப்பட்டன. பரிசீலித்து முடிந்ததுதான் தாமதம், சிப்பாய்கள் மக்களை 'போ! போ!' என்று விரட்டத்தொடங்கினர். மக்கள் தத்தம் உடைமைகளை அவசர அவசரமாக பொதிகளுள் திணித்துக்கொண்டு போயினர்.
அடுத்து மறுதொகுதியினர் தடைமுகாம் பகுதியினுள் அழைக்கப்பட்டனர். ஜீவா ஒவ்வொருவராக துவாரத்தினூடாக அவதானித்துக் கொண்டிருந்தான். அவற்றுள் நீலநிற ரீசேட் அணிந்த ஒருவனைக்கண்டதும் அவனது மூளையில் பளிச்சென்றொரு மின்னல் தாக்கியது.
மறுகணம் அவனது கையிலிருந்த வோக்கி இயங்கியது 'புளூ கலர் ரீசேட்' பிளக் ரவுசர், அங்கே!.. ரவலிங் பாக்குடன் வரிசையில் போய்க்கொண்டிருந்த மனோகரனை இராணுவச்சிப்பாய் ஒருவன் அடோ! நில்லு என்று தடுத்து வைத்தான். படபடக்கும் இதயத்துடன் நின்றுகொண்டிருந்தான் மனோகரன், பயம் அவனை முற்றாக ஆட்கொள்ள மெதுவாகத் தலையை நிமிர்த்தி அவனைப் பார்த்தான். அவனது மேனி எங்கும் நடுங்கத் தொடங்கியிருந்தது.
'என்ன அடோ முறைச்சப்பாக்கிறது போடா அங்கே' ஒரு உலுக்கு உலுக்கி அவனைப்பிடித்துத்தள்ளி விட்டான், அந்தச் சிங்களச்சிப்பாய். விழப்போனவன் ஒருவாறு சமாளித்துக் கொண்ட பொழுது மற்றொருவன் வந்து அவனை இழுத்துக்கொண்டு உள்ளே போனான். அங்கு நான்கைந்து சிப்பாய்கள் கண்கள் சிவக்க நிறை போதையில் அமர்ந்திருந்தனர்.
மனோகரனைக் கண்டதும் ஒருவன் மிக உற்சாகமாக ஓடிவந்து 'அடோ கொட்டியா' என்று சொல்லித்தன் கையில் வைத்திருந்த துப்பாக்கியின் பட்டினால்



அவனைத்தாக்கினான். இன்னொருவன் வந்து அவனது தோளிலிருந்த பாக்கை பிடுங்கி கீழே எறிந்தான் பாக் போய் ஒரு மூலையில் விழுந்தது.
'ஐயோ! நான் கொட்டியா இல்லை என்னை அடிக்காதையுங்கோ!'
கெஞ்சிமண்டாடி அபயக்குரல் எழுப்பினான் மனோகரன். அதற்குள் இருந்த அத்தனை காமுகர்களும் ஒன்று திரண்டு அவனை அடித்தும், உதைத்தும் துன்புறுத்தினர். மனோகரன் மயங்கித்துவண்டு விழுந்தான் அவனது உதட்டில் இருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. தனதுகடமை நேரம் முடிந்ததும் ஜீவா அவ்விடத்திற்கு வந்தான். மயங்கிய நிலையில் மனோகரனின் வாய் 'தண்ணீ தண்ணீ' என முணுமுணுத்தது, தாய்மொழியில் அரற்றிய அவன்மீது எள்ளளவும் இரக்கம் பிறக்கவில்லை. மாறாக அவனைப்பழிவாங்கிவிட்டோம் என்ற திருப்தியுடன் அவனை எட்டி உதைத்துவிட்டுப் போனான்.
'டேய்! மனோகரா நீ சந்தியிலை வைச்சு என்ரை மரியாதையை வாங்கினதுக்குப் பழிவாங்கிவிட்டன்'
பழிவாங்கிவிட்ட திருப்தியுடன் வார்த்தைகள் ஜீவாவின் வாயிலிருந்து புறப்பட்டன.
அன்று இரவு ஆழ்ந்த உறக்கத்தில் இனிமையான கனவொன்றில் மூழ்கியிருந்த ஜீவாவை சிப்பாய் ஒருவன் தட்டியெழுப்பினான்.
'ஐசே அந்த ஆளுகுளோஸ்', நிம்மள் போயி புதைச் சிட்டுவாரதுதானே'
சர்வசாதாரணமாகச் சொன்னான் அவன். ஜீவாவுக்கும் அச்செய்தி ஒன்றும் வியப்பைத் தரவில்லை.
இவையெல்லாம் அங்கு சாதாரண விடயங்களே நேரத்தைப் பார்த்தான் சரியாக 2.35, விடிவதற்கிடையில் கிடங்குவெட்டிப் புதைத்துவிட வேண்டுமென்ற அவசரத்துடன் தனது சகதோழர்களான பாபுவையும், முரளியையும் எழுப்பினான்.
அதிகாலை நேரம் ஐந்துமணியாவதற்கு முன் கச்சிதமாகத் தங்கள் வேலையை முடித்துவிட்டு விடுதிக்குத் திரும்பினர் ஜீவா குழுவினர்.
ஜீவாவின் கைவிரலில் புதிதாக ஒரு மோதிரம் 'கே' என்ற எழுத்து அதில் பொறிக்கப்பட்டிருந்தது. பாபுவின் இடதுகை மணிக்கட்டில் ஒரு 'சீக்கோ'.
மீண்டும் படுக்கையில் விழுந்தபோது ஜீவாவின் மனதில் ஏதோ இனம்புரியாத நெருடல். அவனது மனச்சாட்சி விழிப்புற்று அவனை உலுப்பத்தொடங்கியது.
ஜீவா எழுந்து வெளியே வந்தான் 'சிகரெட்' ஒன்றை எடுத்து பற்ற வைத்துக்கொண்டவன், படியில் அமர்ந்துகொண்டான். சிகரெட்டின்புகையால் தனது மனச்சாட்சி எழுப்பும் குரலை அமுக்கிவிடலாம் என்று நினைத்தானோ என்னவோ புகையை உள்ளிழுத்து சிறிது நேரம் தங்க வைத்து பின் இரு நாசித்துவாரங்களாலும் வெளிவிட்டுக்கொண்டிருந்தான். அவனது சிந்தனை அலைகள் அவனது கடந்தகால வாழ்க்கையில் நடந்த சில சம்பவங்களை நோக்கிப் பாய்ந்தன.
ஜீவா படிப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவிட்டுச் சிறிது ஹாயாக இருந்த நாட்கள் அவை. அந்த நாட்கள்தான் எவ்வளவு இனிமையானவை, மாலை ஐந்து மணியானதும் அவனும் சில நண்பர்களுமாக வாசிகசாலை அமைந்திருக்கும் முச்சந்தியில் கூடுவார்கள். வீதியால் போவோர் வருவோரைப் பார்த்துக் கிண்டலாக ஏதும் சொல்லிக்கொள்வார்கள். மாலை ஆறுமணியாகியதும் அருகிலிருந்த 'டியூட்டறியில்' பயிலும் மாணவர்கள் அந்தச்சந்தியைக் கடந்துபோவது வழக்கம். சைக்கிள்களில் போகிறவர்கள் நேரத்துடன் போய்விடுவார்கள் இவர்கள் போனபின்னர்தான் சிலமாணவிகள் நடந்து போய்க்கொண்டிருப்பார்கள். சந்தியை அவர்கள் அண்மித்ததும், விசில் அடிப்பதில் தனித்துவம் வாய்ந்த ஜீவா முதலில் துவக்கி வைப்பான். மற்றவன் ஏதும் கேலியாய் கதைக்க எல்லோருமே சேர்ந்து 'கொல்' என்று சிரிப்பார்கள். இப்படியே நாட்கள் நகர்ந்து கொண்டிருந்தன.

தொடர்ச்சி: 18 ஆம் பக்கம் பார்க்க

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## பன்னீராயிரத்துக்கு மேற்பட்ட...

சந்திப்பு ஒன்றை நடாத்தி, மேற்படி மூன்று கோரிக்கைகள் அடங்கிய மனுவைக் கையளித்தனர்.

ஊர்வலம் தொடங்கப்படுவதற்கு முன்னர் நடைபெற்ற செய்தியாளர் மகாநாட்டில் கலந்து கொண்ட கொர்னாலியஸ்கோ, தமிழீழ விடுதலைப்புலிகளின் மத்தியகுழு உறுப்பினர் திருலோறன்ஸ் திலகர், விடுதலைப்புலிகளின் அனைத்துலகச் செயலக சட்டஆலோசகர் திருநசத்தியேந்திரா, முன்னாள் சிறீலங்கா அரச தொலைக்காட்சிக் கூட்டுத்தாபனத் தலைவர் திருஎம்வசந்தராஜா ஆகியோர், இலங்கைத்தீவிலுள்ள தமிழர்களின் இன்றைய நிலைபற்றிய கேள்விகளுக்குப் பதில் அளித்தனர்.

திருலோறன்ஸ் திலகர், அரசியல் தீர்வு என சிறீலங்கா அரசினால் கூறப்பட்டு வெளியிடப்பட்டுள்ள யோசனைகள், இராணுவ நடவடிக்கைத் திட்டங்களை மூடிமறைப்பதற்கான கவசம் எனக் கூறினார். மேலும், ஏதாவது அரசியற் தீர்வினைச் சிறீலங்கா, தமிழ் மக்கள் மேல் பலவந்தமாகத் திணிக்க முற்படுமானால், விடுதலைப்புலிகள் அதனை எதிர்ப்பார்கள் எனக்கூறியதுடன், சந்திரிகா அரச சமாதானத்திற்கான கதவைச் சாத்தினால் கூட, விடுதலைப்புலிகள் அமைதிவழி முயற்சிகளைக் கைவிடவில்லை' என்றார்.

திருவசந்தராஜா பேசுகையில், அமைதிப் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தமைக்கு மறைமுகமாக விடுதலைப்புலிகளை ஓரங்கட்ட முயன்றமையே காரணம்' என்றார். அத்துடன், இன்றைய அரசியல் தீர்வு என்பது, சிறீலங்கா அரசின் இராணுவ தந்திரோபாயத்தின் ஒரு பகுதியே' எனவும் கூறினார். அவர் மேலும் உரையாற்றுகையில், 'விடுதலைப் புலிகள் தங்களுக்கான ஆதரவை, மக்களைப் பயமுறுத்தியும், பலவந்தப்படுத்தியும் பெற்றுக்கொள்கிறார்கள் எனச் சிலரால் சிலவேளைகளில் கூறப்பட்ட வதந்தி ஒரு முற்றுமுழுதான பொய்ப் பிரச்சாரம் என்பதை, இங்கே பல்லாயிரக்கணக்கில் முழுமனதோடு கலந்துகொண்டுள்ள தமிழீழ மக்களாகிய உங்கள் ஒவ்வொருவரினதும் பங்களிப்பு உறுதிப்படுத்துகிறது' என்றார்.

இப்பேரணியின் போது, ஐநா தலைமைச் செயலக முன்றலில் தமிழீழத் தேசியக் கொடி, விடுதலைப் புலிகளின் மத்திய குழு உறுப்பினர் திரு. லோறன்ஸ் திலகர் அவர்களால் ஏற்றி வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் திரு. லோறன்ஸ் திலகர், திருஎம்வசந்தராஜா ஆகியோருடன், விடுதலைப் புலிகளின் சுவிஸ் கிளைப் பிரதிநிதி திரு. முரளிதரன், தமிழ்ச் சங்கக் கூட்டமைப்புப் பிரதிநிதி திரு. அன்ரன் பொன்ராஜா, திரு. ந. சத்தியேந்திரா, அமெரிக்கச் சட்டத்தரணியும் மனித உரிமைகள் செயற்பாட்டில் ஆர்வம் கொண்டவருமான திருமதி. கரன் பாக்கர் ஆகியோர் உரையாற்றினர்.

தேசியத் தலைவரின் படம் பேரணியில் கலந்து கொண்ட மக்களால் எடுத்துச் செல்லப்பட்டது. சுவிசில் முதல் முதலாக நடைபெற்ற தமிழ் மக்களின் மிகப்பெரிய இப்பேரணியில் இளம் வயதினர், வயோதிபர்கள், பெண்கள், குழந்தைகள் எனப் பரதரப்பினரும் கலந்துகொண்டனர். பேரணியின் முன்னணியில், 'தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரி' எனும் வாசகம் பொறித்த 30அடிக்கும் கூடிய அகலமான பதாகையொன்று, செம்மஞ்சள், சிவப்பு நிறங்களில் உடையணிந்து வந்த 20 க்கும் மேற்பட்ட பெண்களால் எடுத்துச் செல்லப்பட்டது. இப் பேரணியைச் சுவிஸ் நாட்டில் உள்ள பல செய்தி நிறுவனங்களும் முக்கியத்துவம் அளித்து செய்தி வெளியிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

## அடுத்த கட்டப்...

கூட வரி உயர்த்தப்பட்டு, இத்தகைய வரிஉயர்வுகள் மூலம் மேலதிகமாக இருநூற்று முப்பந்தைந்து கோடி ரூபா திரட்டப்படவுள்ளதாகத் தெரிகின்றது. அதேவேளை வெளிநாடுகளில் உள்ள சிறீலங்காத் தூதரகங்கள் கலாச்சார நிகழ்ச்சிகள், விளையாட்டுப் போட்டிகள், நிதி சேகரிப்புக்கள் மூலமும் பணத்தைத் திரட்டி அனுப்பும் என சிறீலங்காத் திட்டங்கள் தெரிவிக்கின்றன. இதேவேளையில் சிறீலங்கா தனது பாதுகாப்புச் செலவீனத்திற்கான தொகையை, மேலும் 430 கோடியால் அதிகரித்துள்ளதாகவும் தெரிகிறது. இப்பணங்களையும், அபிவிருத்தி புனர்வாழ்வு- புனர்நிர்மாண உதவிக்கென வெளிநாடுகள் கொடுத்த திட்ட உதவிகளையும் தந்திரமானமுறையில் நவீன ஆயுதக் கொள்வனவிற்காகச் சிறீலங்கா திருப்பியுள்ளதென கொழும்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. சிறீலங்கா, ஏவுகணைக்கு நிலைநிற்கக்கூடிய நவீன தொழில் நுட்பங்கள் அமைந்த விமானங்களைக் கொள்வனவு செய்வதில் அதிக அக்கறை காட்டி வருகிறது. இதேவேளை, இந்தியா மறைமுக ஆயுத, தத்துவார்த்த ஆதரவுகளைச் சிறீலங்காவுக்கு வழங்குகிறது என இந்திய அரசியல் வாதிகள் குறைகூறியுள்ளனர்.

அத்துடன், பாகிஸ்தானிலிருந்து துப்பாக்கி ரவைகளும், சிறுரக இராணுவ ஆயுதங்களும், வை-8 விமானம் ஒன்றும் சிறீலங்காவினால் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

மேலும், வெளிநாடுகளின் இராணுவ தொழில்நுட்ப ஆலோசகர்களைக் கூலிக்கு அமர்த்துவதிலும் சிறீலங்கா ஈடுபட்டு வருவதாகக் கூறப்படுகின்றது.

இரண்டாவது கட்டத்தில், தான் தொடங்க இருக்கும் தமிழீழ மக்கள் மீதான போரில் தமிழினப் படுகொலையைத் தான் செய்யும்பொழுது சர்வதேச கருத்து எதிராகத் திசை திரும்புவதைத் தடுக்கும் நோக்கில் சந்திரிகா, தீர்வுத் திட்ட யோசனைகளை வெளியிட்டு தாம் அரசியல் தீர்விலும் அக்கறை காட்டுவதாகவும், அதற்கு எதிராக உள்ள விடுதலைப் புலிகளையே தாம் அழித்தொழிக்க, போர் நடாத்திக் கொண்டிருப்பதாகவும் வெளியுலகிற்கு நம்பிக்கை ஏற்பட வைப்பதற்கான முயற்சியைத் தொடங்கியுள்ளார். தீர்வு யோசனைகள் பலனுள்ளவை என்பதற்குச் சாட்சிகளாக இத்தீர்வு திட்ட யோசனைகளைக் குறித்து சாதகமான கருத்துக்களைக் கூறும் முன்னாள் கூட்டணித் தலைவர்களையும், தமிழ்க் குழுக்களையும் சிறீலங்கா வெளியுலகிற்கு வெளிப்படுத்தி வருகிறது. சிறீலங்கா பல்லினமக்கள் தொகுதி. எனவே பல்லின சமுதாயத்திற்கான தீர்வு தான் சாத்தியமானது என வெளியுலகிற்கு நிறுவுவதன் மூலம் சிறீலங்கா தனது அதிகாரப் பரவலாக்கல் தீர்வை தமிழீழ மக்கள் மீது திணிப்பதை சர்வதேச நெருக்குதல்கள் மூலம் சலபமாக்கலாம் என சிறீலங்கா திட்டமிட்டு செயற்படுகிறது. தமிழ் மக்களுக்குக் கூடுதல் அதிகாரப் பரவலாக்கலை வழங்குவதைத் தடுக்கும் விடுதலைப் புலிகள் அழிக்கப்பட்டாலே அரசியல் தீர்வு சாத்தியம் எனக்கூறி, தான் தொடங்க இருக்கும் அடுத்தகட்ட தமிழின அழிப்பை நியாயப்படுத்தத் திட்டமிடுகிறது.

மூன்றாவது கட்டமாக, தமிழீழப் பகுதிகளுக்கு உணவு விநியோகத்தை முற்றாக சீர்குலைத்து தொடங்க இருக்கும் தாக்குதல் நீடிக்குமானால் மக்கள் பட்டினிச் சாவினை அடையச் செய்யும் முயற்சிகளில் சிறீலங்கா ஈடுபட்டுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தினர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக நடக்கின்றனர். அவர்களை நாட்டை விட்டு வெளியேற்ற வேண்டுமென்ற கோசத்தை சிறீலங்காவின் பௌத்த சிங்கள பேரினவாத சக்திகள் ஊக்கப்படுத்துகின்றன.

## வடபகுதியில்...

பாதுகாப்புத் தேவையில்லை என்று மறுத்து விட்டது.

மேலும், உணவுக் கப்பல்கள் வராததினால், களஞ்சியங்களில் இருப்பில் வைக்கப்பட்டிருந்த உணவுப்பொருட்கள் பெரும்பகுதி நுகரப்பட்டுவிட்டதாகவும் மாவு, அரிசி போன்ற அத்தியாவசிய சாமான்கள் கையிருப்பில் இல்லை எனவும் யாழ் செயலக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். இதனால் பொதுமக்கள் தரக்குறைவான உணவு வகைகளையே உண்பதாகவும், இவைகள் தற்போதைய நிலையில் உகந்தவை அல்ல எனவும் தெரிவித்துள்ளார். இதே வேளை கொழும்பில் உணவுப் பொருட்களுடன் செஞ்சிலுவைச் சங்கத்தின் இரண்டு கப்பல்கள் தயார் நிலையில் உள்ளதாகவும், இக்கப்பல் பருத்தித்துறைக்கு நேரடியாக செல்ல சிறீலங்கா அரச அனுமதிக்க வேண்டும் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கோரிக்கை விடுத்தும், இது தொடர்பான விடயத்தில் அரசு எதுவித அக்கறையும் காட்டவில்லை எனத் தெரியவருகிறது.

இதேவேளையில் சிறீலங்கா அரசின் மருந்துகள் மீதான தடையினால் ஆயிரத்துக்கு மேற்பட்ட குழந்தைகள் தொற்று நோய்களினால் பாதிக்கப்பட்டு அபாயகரமான நிலையை எதிர்நோக்கியுள்ளதாகவும், இந்நிலை தொடருமானால் மழை காலங்களில் நோய்வாய்ப்படும் குழந்தைகளின் தொகை அதிகரிக்குமென பிரிஜ செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

## வடக்கு-கிழக்கு...

செஞ்சிலுவைச் சங்கம் முடிவு செய்துள்ளது.

யாழ்ப்பாணப் பொதுமக்கள் மேலும் மேலும் தனிமையாக்கப்படுவதைக் கண்டு மிகவும் கவலையடைகின்றோம் என சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் விடுத்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கோடரிக் காம்பு...

மனோகரன்

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் 'எஞ்சினியரிங்' படித்துக்கொண்டிருந்தான். விடுமுறையில் ஊருக்குவந்திருந்தான். தங்களுக்குத் தினமும் ஜீவா குழுவினர் செய்து வரும் சேட்டைகளை, அந்த மாணவிகளில் ஒருத்தியான ராதா, தனது அண்ணாவிடம் முறையிட்டாள்.

இதனைக்கேட்டு ஆத்திரம் அடைந்த மனோகரன் தனது நண்பர்கள் சிலரையும் சேர்த்துக்கொண்டான். ஜீவா குழுவினரை கையும் மெய்யுமாகப் பிடித்து நல்ல பாடம் புகட்டத் திட்டமிட்டான்.

அன்று மாலை வழமை போலவே எல்லாம் நடந்து கொண்டிருந்தன. டியூட்டறி முடிந்து மாணவர்கள் சைக்கிள்களில் முன்னால் போய் விட்டனர். அவர்கள் பின்னால் மாணவிகள் வந்து கொண்டிருந்தனர்.

வாசிகசாலைக்குள் பெரியஅமர்க்களம் செய்துகொண்டிருந்தனர் ஜீவா குழுவினர். மாணவிகளைக்கண்டதும் ஜீவா பாய்ந்து முன்னால் வந்து, தன்னிரு கைகளின் ஆட்காட்டி விரல்களையும் வாய்க்குள் வைத்து நைசாக விசில் அடித்தான்.

'ஊய்ங்! ஊய்ங்!'

வாசிகசாலைக் கட்டிடத்திற்குப் பின்னால் மறைந்து நின்ற மனோகரன் ஓடிவந்து ஒரே தாவலில் எட்டிப்பிடித்தான். ஜீவா அணிந்திருந்த சேட்டின் ஒருபகுதி மனோகரனின் கையோடு வந்துவிட்டது. மனோகரன் மாறி மாறி அவனது முகத்தில் அறைந்தான். அரவங்கேட்டு பெரிய கூட்டமே அங்கு கூடிவிட்டது. கிழிந்த சேட்டுடன் தலை குனிந்து நின்றான் ஜீவா. இந்த நிகழ்வு அவனது மனதில் ஆழமான ஒரு தாக்கத்தை ஏற்படுத்திவிட்டது.

அதன் விளைவு- இன்றைய நிகழ்வுகள் யாவும் சங்கிலித் தொடராய்- அவனது எண்ண அலைகளில் மோதி மறைந்தது.

'ம்!'

நீண்ட பெருமூச்சொன்று அவனது அடி நெஞ்சிலிருந்து வெளிப்பட்டது. 'பழிக்குப்பழி' சொல்லிக் கொண்டவன் பற்களை நறநறவெனக் கடித்தான்.

'என்ர மானத்தை வாங்கிய மனோகரன் எங்கை! மண்ணுக்கை தான் நின்மதியாய்க் கிடக்கட்டும். நானும் நின்மதியாய் கிடப்பமெண்டால் நித்திரை வருகுதில்லையே' மீண்டும் ஒரு சிகரட்டை எடுத்து பற்ற வைத்தான். புகையை நன்கு உள்ளிழுத்து ஊதித்தள்ளினான் வளையங்களாகப் போய்க் கலைந்துபோகும் புகையை உற்று நோக்கியவாறே அமர்ந்திருந்தான் ஜீவா.

அன்றைய கடமை நேரம் அவன் பயணிகளை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்த போதும், அவனது புலன் அவர்கள் மீது செல்லவில்லை. ஒருவாறு கடமையை முடித்துக்கொண்டு விடுதிக்குத் திரும்பும் போது அவனுக்கு நேற்றைய நினைவுகள் தலை தூக்கவே மனோகரன் மயங்கிக்கிடந்த அறையை ஒருமுறை எட்டிப்பார்த்தான்.

அங்கே- மனோகரனது ரவலிங்பாக் அநாதரவாகக் கிடந்தது. என்ன நினைத்தானோ! ஜீவா குனிந்து அந்த பாக்கை எடுத்துக் கொண்டு தனது விடுதியை நோக்கி நடந்தான்.

பாக்கைத் திறந்து ஒவ்வொன்றாக ஆராய்ந்தான் ஜீவா. புத்தம் புதிய ரீசேட் ஒன்று தட்டுப்பட்டது. அதை எடுத்து ஒரு பக்கம் வைத்துக் கொண்டு மிகுதியை ஆராயத் தொடங்கினான். அதற்குள் வடிவாக பாக்பண்ணிய ஒரு மிக்சர் பாசல் இருந்தது. அவனுக்குத் திடீரென்று அம்மாவின் ஞாபகம் வந்தது. அம்மாவும் இப்படித்தான் மிக்சர் பைக்பண்ணி கொழும்பில் இருக்கும் மாமாவுக்கு குடுத்து விடுகிறவ. பார்சலைப்பிரித்து கொஞ்சத்தை கையில் கொட்டி வாய்க்குள் போட்டுக் கொண்டான். 'சரியாய் எங்கட வீட்டில சாப்பிட்ட மாதிரி இருக்கு' சொல்லிக் கொண்டே இன்னும் கொஞ்சத்தை கொட்டிச்சாப்பிட்டான்.

அடி பாக்கிற்குள் கையைவிட்டு துழாவிய போது அங்கே அல்பம் ஒன்று கிடந்தது. ஆர்வத்துடன் அதை எடுத்துப்பிரித்தான். பிரித்துப்பார்த்தவனது கண்கள் அப்படியே நிலை குத்தி நின்றன.

அவனுக்கு மண்டைக்குள் எரிவது போன்ற உணர்வு தலையைச் சற்றுமாப்போல் இருந்தது. தேகமெங்கும் வியர்வையால் நனைந்தது. அவனது உதடுகள் மெல்லத்திறந்தன.

'ஐயோ கலா உன்ர வாழ்க்கையை நாசமாக்கிப் போட்டேனே. உன்ரை அண்ணன் நான் உன்னைப்பழி வாங்கிப் போட்டேனே! ஐயோ! எனக்கு இனி எங்க மன ஆறுதல் கிடைக்கப் போகுது'

www.tamilarangam.net



## விழிப்பு!

தூக்கத்தில் இருக்கும் தமிழா
துயரமும் உன்னை நெருக்கும்
ஏக்கத்தில் வாழ்ந்தது போதும் – நம்
எல்லைக்கு வேலியாய் மாறு!

வாட்டமும் அயலுக்கு இல்லை – இதன்
வருத்தமும் ஊருக்கு இல்லை
வந்திடின் உனைநாடித் தொல்லை – உன்
வீரத்தால் வெல் அவை தன்னை!

முன்னோர் விட்டதோ தவறு – இது
முதியோரும் உணராத புதிரு – இதன்
பயனாலே படுகின்றோம் அழிவு – இதை
தடுக்கவே இளையோரின் துடிப்பு!

தார்மீகத் தலைவரின் தோற்றம் – செந்
தமிழின் நிலையான ஏற்றம்
கொண்டார் மனதினில் தியாகம் –
அதனால்
சென்றார் இலட்சியப் பயணம்!

நன்றி : சுதந்திரம்

# றோகண...

பேர்வரை கொல்லப்பட்டதாக மக்கள் கூறுகின்றனர்.

றோகண விஜேவீர வெலிக்கடைச் சிறையில் தடுத்து வைக்கப்பட்டார். அவரின் மேலான விசாரணைகளும் தொடங்கின.

இவ் ஜேவிபி கிளர்ச்சியில் பிரதமர் சிறிமாவோவின் மூத்தமகளின் கணவரான குமார் ரூபசிங்காவும் ஈடுபட்டது குறிப்பிடத்தக்கது.

பின்னர் 1977இல் ஐக்கிய தேசியக்கட்சியினால் ஜேவிபிக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட்டது. ஜேவிபி ஒரு அரசியல் கட்சியாகவும் பதிவானது.

1982இல் நடந்த சனாதிபதி தேர்தலில் ஜேவிபி சார்பில் றோகண விஜேவீர போட்டியிட்டார். ஆயினும் அத்தேர்தலில் ஜேஆர் வெற்றி பெற்றார்.

1983 யூலைக் கலவரத்தைத் தொடர்ந்து, ஜேவிபி அரசைக் கவிழ்க்கச் சதி செய்ததாகக் கூறப்பட்டு அது தடை செய்யப்பட்டது. இராணுவ அதிகாரிகள் சிலருடன் ஜேவிபி இணைந்து சதி முயற்சியில் ஈடுபட்டதாகக் குற்றம் சுமத்தப்பட்டது.

இதனால் ஜேவிபி மீண்டும் இரகசியமாக இயங்கத் தொடங்கியது. சுமார் நான்கு ஆண்டுகளின் பின்னர் 1987இல் இந்திய இராணுவம் இலங்கைக்கு வந்ததை எதிர்த்து, ஜேவிபி தெற்கில் மீண்டும் ஆயுதப் போராட்டத்தைத் தொடங்கியது. தெற்கின் வீதிகளில் 'ரயர்' கலாச்சாரம் தீவிரமடைந்தது. ஆறுகள், குளங்களில் தலையற்ற சடலங்கள் மிதந்தன. ஜேவிபியைச் சேர்ந்தோர், ஆதரவாளர், ஜேவிபி உறுப்பினர்களது உறவினர் எனப் பலதரப்பாரும் வகைதொகையின்றி கொல்லப்பட்டனர். இறுதியில் சுமார் 60,000 பேர் தெற்கில் கொல்லப்பட்டதாக அல்லது காணாமல் போனதாக அறிக்கைகள் தெரிவ-த்தன.

1989 நவம்பர் 12ஆம் நாள் கம்பளை வலப்பனையில் றோகண விஜேவீர கைதான-ார். பலத்த சந்தேகங்களை கிளப்பிய அவரது மரணம் 13ஆம் நாள் நடந்தது. இவருடன் ஜேவிபியின் முக்கிய உறுப்பினர்களான உபதிஸ்ச கமநாயக்க, எச்பி. கேரத் ஆகியோரும் சுட்டுக்கொல்லப்பட்டனர். ஒரு சகாப்தம் முடிந்தது.

இன்று றோகண விஜேவீர இல்லாத ஜேவிபி, அடுத்து எடுக்கப்போகும் நடவடிக்கைகள் எதுவாக இருந்தாலும் அதன் ஆரம்பகால நோக்கங்கள் இன்று காணாமல் போய்விட்டன என்றே கருத வேண்டியிருக்கிறது.

## தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரெஞ்சுக் கிளை நடாத்தும்

## தியாகி திலீபன் நினைவுதினப் போட்டிகள் 1995

இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக அகிம்சா ரீதியாகப் போராடி உயிர் நீத்த மாவீரன் லெப்.கேணல் திலீபன் நினைவுதினப் போட்டிகள் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரெஞ்சுக் கிளையால் கவியரங்குக்கவிதை, பேச்சு, ஓவியம், நாடகம் ஆகிய அம்சங்களின் கீழ் போட்டிகள் நடைபெறும்

### போட்டிகளுக்கான விதிமுறைகள்



*மக்கள் புரட்சி வெடிக்கட்டும்*
*தமிழீழம் மலரட்டும்*
- திலீபன்

- **பேச்சுப் போட்டி**

*22 - 18, 18 - 16 , 16 - 12 வயதெல்லைகுட்பட்ட ஆண் பெண் இருபாலாரும் இப்போட்டிகளில் கலந்து கொள்ளலாம். கலந்துகொள்பவர்கள் முறையே*
*"தமிழீழ விடுதலைப் போராட்டமும் எமது பங்களிப்பும்"*
*"அகிம்சையும் போரும் திலீபன் வழியில்"*
*"தமிழீழம் எமது தாய் நாடு"*
*ஆகிய தலைப்புக்களின் பேச்சுக்களை அமைத்து கொள்ளல் வேண்டும்*

- **கவிதை**

*22 - 18 வயதிற்குட்பட்ட இருபாலாரும் கலந்து கொள்ளலாம். கவிதைகளை வாசிப்பவர்களே ஆக்கதாரர்களாகவும் இருத்தல் வேண்டும். கவிதையின் பாடுபொருள், புலம்பெயர்ந்த வாழ்வின் அவலங்களைச் சுட்டி நிற்பதாய் , தேசிய விடுதலை சார்ந்ததாய், திலீபனின் தியாகத்தைப் பற்றி பாடுவதாய் அமைதல் வேண்டும்.*

- **ஓவியம்**

*16 - 12, 18 - 16 , 22 - 18 வயதிற்குட்பட்டவர்கள் ஆண், பெண் இருபாலாரும் கலந்து கொள்ளலாம். 22 வயதிற்கு மேற்பட்டவர்களும் கலந்து கொள்ளலாம். போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் ஓவியர்கள் திலீபனை, அவனது தியாகவாழ்வை, நல்லூரில் உண்ணாது இருந்து போராடிய நிகழ்வை, கொட்டும் மழைக்குள் நின்று கண்ணீர் சிந்திய மக்கள் பெருவெள்ளத்தையெல்லாம் காட்டுபவையாகவும் காட்சிப்படுத்துவதாய் அமைதல் வேண்டும். அனைத்து ஓவியங்களும் வர்ண ஓவியங்களாக இருத்தல் வேண்டும்.*

- **நாடகம்**


*15 நிமிடங்களுக்குட்பட்டதாய் இருத்தல் வேண்டும். நாடகக் கழகங்களும் இதில் கலந்து கொள்ள விண்ணப்பிக்கலாம். நாடகங்கள் புலம் பெயர்ந்த வாழ்வின் யதார்த்தங்களைப் பிரதிபலிப்பதாய், தலீபன் நனைவுகளை உணர்த்துவதாய் தாயக விடுதலைதான் அனைத்துத் தமிழர்களுக்கும் விடிவைத்தரும் என்பதாய் அமைதல் வேண்டும்.*

- விண்ணப்பஞ் செய்வதற்கான இறுதிநாள்: 15 - 09 - 1995

- **போட்டி விதிமுறைகள் பற்றியும் மற்றும் மேலதிக விபரங்களுக்கும்**

**தமிழீழ விடுதலைப் புலிகள் பிரஞ்சுக்கிளை**
341 Rue Des Pyreness
75020 PARIS

43 - 58 - 11 - 42



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்







விடுதலைப்புலிகளை
அங்கீகரிக்கக்கோரி, சுவிற்சலாந்தில்,
ஐக்கிய நாடுகள் சபைக்கு
முன்பாகத் திரண்ட
பன்னீராயிரத்துக்கும் அதிகமான
தமிழ்மக்கள் பேரணி

# இப்படை தோற்கின் எப்படை வெல்லும்

## அங்கீகரிப்பாய் அகிலமே புலிகளை

அங்கு நம்மவர் அழிகையில் நம்மினம்
வாளாவிருக்குமோ? வந்துபார் எம்மினம்
சங்காரம் செய்யவோ கங்கணம் கொண்டனை?
சம்மதியோம் நாம் சாவுக்கும் அஞ்சிடோம்
சிங்களமே! சிறுநரியும், சிறுத்தைகள் முன்பு
முறுக்குமோ மீசையை? பொறுக்குமோ புலியினம்!
அங்கீகரிப்பாய் அகிலமே! புலிகளை
அங்கீகரித்தோம் அரண்களாய் அவர்களை.

- நாயன்மார்கட்டு சிவகுமாரன்


U.T.O., 211 Katherine Rd, London E6 1BU, UK. Tel: 0181 - 503 4294, Fax: 0181 - 470 8593

L.T.T.E
Post Box 47, 7400 HERNING
DENMARK.
Tel/Fax: 97-155299

W.T.C.C
Lang STR - 206
8005 Zurich, Swiss.
T/F: 01/273-29-38

T.C.G
Post Fach - 340251
51624 Gummersbach - 34
Germany

T.C.C
Via Mariano Stabile - 49
90139 Palermo, Italy
T/F: 091-611 3179

W.T.C.C.
170-10 Cedarcroft Road
Suite 1-L, Jamaica,
New York 11432, U.S.A.
T/F: 718-657-9463

T.C.C
341 Rue des Pyrenees
75020 Paris, France
Tel: 435 81142, F 435 81191

T.C.C
P.O.Box 375, Preston
Victoria 3072, Australia
T: 03-470 6441 F: 560 8224

T.C.C
P.O.Box 1699 Vika
0110 Oslo -1, Norway
T: 022-191260 F: 190114

T.C.C
Groot Hertoginnelaan
2517 BL Den Haag, Nederland
Tel: 070-348 1963, F: 384 0683

T.C.C
Glomminge Grand - 29
16362 Spanga, Sweden
Tel: 08-7612943



Printed by Observer Group Newspapers.



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்